# ஏணி

## இதழ்-௯



2012

உயர்தர மாணவர் மன்றம்

யா/ விக்னேஸ்வரக் கல்லூரி

கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏணி

## இதழ் 09

**2012**

உயர்தர மாணவர் மன்றம்
யா/ விக்னேஸ்வரக் கல்லூரி
கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலின் விபரம்

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | ஏணி |
| இதழ் | : | 09 |
| அச்சிட்டோர் | : | தமிழ்ப்பூங்கா அச்சகம், நெல்லியடி, கரவெட்டி. 0212264014 |
| வெளியீடு | : | உயர்தர மாணவர் மன்றம் யா/ விக்னேஸ்வரக் கல்லூரி, கரவெட்டி. |
| அளவு | : | $B_5$ |
| பிரசுரித்த திகதி | : | 25.01.2013 |

## Bibliographical Date

| | | |
|---|---|---|
| *Title* | : | *EANI* |
| *Malar* | : | *09* |
| *Printers* | : | *ThamilPoonka Printers, Nelliady, Karaveddy. 021 2264014* |
| *Publications* | : | *Advanced Level Students' Union, J/ Vigneswara College, Karaveddy.* |
| *Size* | : | $B_5$ |
| *Date of Issue* | : | *25.01.2013* |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிக் கீதம்

வாழ்கவே வளர்க வாழ்கவே - வளரும்
விக்னேஸ்வரா வாழ்கவே வாழ்கவே.

கலைகள் விஞ்ஞானம் கவினுடன் இங்கே
கற்றெழில் பூண்டிடுவோம்
இலைமறை காயாய் விளங்கும் சிறார்கள்
இலங்கிடக் கண்டிடுவோம்

(வாழ்கவே)

ஆங்கிலம் தமிழ்மொழி அழகிய முறையில்
ஆய்ந்து நாம் கற்றிடுவோம்
தேங்கிய புகழ்தன் ஊற்றிடமாகத்
திறன் பணி கண்டிடுவோம்

(வாழ்கவே)

வர்த்தக இயலும் தொழில் முறைக் கல்வி
வளர்த்திட முயன்றிடுவோம்
நற்தனம் இசைகள் நாடகம் என்பவை
நாளும் பயின்றிடுவோம்

(வாழ்கவே)

எண்ணொடு எழுத்து என்பவை இரண்டும்
எம்முயிர் என்றிடுவோம்
விண்ணக இன்பம் மண்ணினில் கல்வி
என்றறை கூறிடுவோம்


(வாழ்கவே)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்தர மாணவர் மன்ற நிர்வாகசபை உறுப்பினர்கள் 2012

| | | |
|---|---|---|
| போஷகர் | - | திரு.வே. சிவசிதம்பரம் (அதிபர்) |
| காப்பாளர் | - | திருமதி. சிவமகேஸ்வரன் தனேஸ்வரி |
| உபகாப்பாளர் | - | திரு. த. விஜயசங்கர் |
| தலைவர் | - | ம. இலக்கியா |
| உபதலைவர் | - | லோ. சர்மினி |
| செயலாளர் | - | சௌ. கேமதட்சனி |
| உபசெயலாளர் | - | ம. உஷாந்தி |
| பொருளாளர் | - | க. புனிதா |
| பத்திராதிபர் | - | ந. துஜிகா |
| செயற்குழு உறுப்பினர்கள் | - | கி. கயந்தினி |
| | | கு. அருந்தஷா |
| | | ந. வைஸ்ணவி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சி. நந்தகுமார்
வலயக் கல்விப் பணிப்பாளர்
வடமராட்சி.

# வாழ்த்துரை

யா/ கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றியத்தினால் வருடாந்தம் வெளியிடப்படும் "ஏணி" சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

இன்றைய நவீன உலகில் ஒவ்வொரு பாடசாலையும் தமது வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தித் தேடல் திறனும், உயர்சிந்தனையும், ஆக்கத்திறன் விருத்தியும், மனித நேயப்பண் பாளர்களையும் உருவாக்கும் இடமாக விளங்க வேண்டும்.

யா/ விக்னேஸ்வரக் கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றம் மாணவர்களின் தேடல் ஆற்றலை, படைப்பாற்றலை ஏற்றிவிடும் களமாக "ஏணி" எனும் சஞ்சிகையை வருடம் தோறும் வெளியிட்டு வருவது பராட்டுக்குரியது.

2009ம் ஆண்டு வரை தொடர்ச்சியாக எட்டு இதழ்களை வெளியீடு செய்த உயர்தர மாணவர் மன்றம் 2012ல் தனது ஒன்பதாவது இதழை வெளியீடு செய்து தனது ஆற்றலை மீண்டும் வெளிப்படுத்தி இருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இக்கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், பழையமாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் என்றும் இவ் உயர்தர மாணவர்மன்றத்துடன் உறுதுணையாகச் சேர்ந்து இயங்குவதனூடாக சிறந்த படைப்பாளிகளையும், ஆக்கத்திறன் கொண்டவர் களையும் எதிர்காலத்தில் இச் சமூகத்திற்கு வழங்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சி. நற்குணலிங்கம்
கோட்டக்கல்வி பணிப்பாளர்,
கோட்டக்கல்வி அலுவலகம்,
கரவெட்டி.

## வாழ்க, வளர்க

யா/ விக்னேஸ்வரக் கல்லூரி உயர்தர மாணவர் ஒன்றியத்தினால் வெளியிடப்படும் "ஏணி" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

மாணவர்கள் மத்தியில் வாசிப்புத் திறன் வீழ்ச்சியடைந்து செல்கின்ற இக் காலகட்டத்தில் சஞ்சிகையினை ஆக்கும் திறனை மாணவர் பெற்றுக் கொள்வதுடன் வாசிப்புத் திறனும் வளர்ச்சியடைய சஞ்சிகை தாங்கி வரும் ஆக்க பூர்வமான கட்டுரைகள் உதவுகின்றன. இவை இன்றைய தேவையாகவும் உள்ளது. எனவே இன்றைய தேவைப்பாடு உணர்ந்து சஞ்சிகையினை வெளியிடும் முயற்சியில் ஈடுபடும் அதிபர், ஆசிரியர்கள், உயர்தர மாணவர் ஒன்றியம் பாராட்டுக்குரியவர்கள் ஆவர்.

"ஏணி" எனும் சொல் முன்னேற்றத்திற்கு, வளர்ச்சிக்கு, அபிவிருத்திக்கு வழிகோலும் ஒரு தாக்கமான சொல் ஆகும். சஞ்சிகைக்கு "ஏணி" எனும் பெயர் சூட்டப்பட்டதிலிருந்து சஞ்சிகையின் கட்டுரைகள் எவ்வளவு ஆரோக்கியமான தென்பதை உணர முடிகின்றது. ஒரு படிமுறையான வாசிப்பு மாணவர் மத்தியில் ஏற்படின் அவர்கள் சமுதாயத்தில் முழு மனிதனாகத் திகழ முடியும் ஒருவனை முழு மனிதனாக்குவதில் வாசிப்பு முக்கிய பங்கினை வகிக்கின்றது எனலாம்.

"ஏணி" என்பது ஏற்றிவைக்கும் ஒரு கருவி எதிர்காலச் சந்ததியினரான மாணவர்கள் "ஏணி" போன்று மேலும் பல சிறந்த கட்டுரைகளைத் தாங்கி வரும் சஞ்சிகைகளை வழங்கி ஆரோக்கியமான மாணவ சமுதாயம் உருவாகி, வளர உயர்தர மாணவர் ஒன்றியத்திற்கு என் ஆசிகள் உரித்தாகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் ஆசிச் செய்தி



வே. சிவசிதம்பரம்.
அதிபர்
யா/ விக்னேஸ்வரக் கல்லூரி

மாணவர் தம் உயர்விற்கு ஏணியாக இருந்து நம்மை அர்ப்பணிக்கும் ஆசிரியர்களை நினைவில் நிறுத்தி ஏணி என்னும் சஞ்சிகையை வெளியீடு செய்யும் எம் உயர்தர மாணவர்கள் போற்றுதற்குரியவர்கள். பூவின் நறுமணம் அது மரத்திலிருக்கும்போது தான் உணரப்படும். அதேபோன்று மாணவரின் ஆற்றலும் அவர்தம் ஆசிரியரின் கையிலிருக்கும் போதுதான் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும்..

அந்தவகையில் ஆசிரியரின் வழிகாட்டலின் கீழ் எம் பிள்ளைகள் கூட்டாகச் செயற்பட்டு ஏணியின் ஒன்பதாவது இதழை வெளியீடு செய்வது எமக்கெல்லாம் பெருமையளிக்கிறது. சிறந்ததொரு படைப்பைத் தேடி வெற்றி கண்டுள்ள இம்மலரின் ஆக்கக்குழுவினரையும் அவர்களை வழிநடத்திய எம் ஆசிரியர்களையும் மனதாரப் பாராட்டுகின்றேன்.


இம் முயற்சி எதிர்வரும் காலங்களிலும் தொடர வேண்டுமென உங்கள் யாவரையும் வேண்டுகின்றேன்.

" நாம் தளரமாட்டோம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அதிபரின் ஆசிச் செய்தி



திரு. க. மு. கனகலிங்கம்
அதிபர்
விக்னேஸ்வரக் கல்லூரி,
கரவெட்டி.

வேகமாக மாறிவரும் உலகமயமாதல் சூழ்நிலையில் அறிவு, திறன்கள், பண்பாடு, கலாசாரம் போன்றவைகளின் தளங்களில் பல்வேறுபட்ட மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. மாணவர்களின் வழமையான கற்றல் நிகழ்ச்சிகளோடு மாறிவரும் உலகைப் புரிந்து, பொருந்தி வாழும் திறன்களைப் பெற்றுக்கொள்ளும் செயற் பாடுகளையும் பாடசாலைகள் முன்னெடுக்க வேண்டியுள்ளது. அந்த வகையில் யா/விக்னேஸ்வரக் கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றத்தின் "ஏணி" என்ற சஞ்சிகையின் ஒன்பதாவது இதழ் வெளிவருவது எல்லோராலும் வரவேற்கப்படுகின்றது.

கல்லூரியின் மாணவர்களும் ஆசிரியர்களும் இணைந்து பணியாற்றி, இற்றைப்படுத்தலினூடாகப் புதிய விடயங்களைத் தரும் "ஏணி" சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். "விளையும் பயிரை முளையில்த் தெரியும்" என்ற முதுமொழிக்கிணங்க இதில் ஆக்கங்களைத் தந்த இளம் மாணவர்களின் எதிர்கால ஆளுமைகள் இங்கே வெளித் தெரிகின்றன. எதிர்வரும் காலங்களிலும் ஏணி சஞ்சிகை தொடர்ந்து வெளிவந்து மாணவர்களை ஏற்றம் பெற வழிசமைக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதி அதிபரின் ஆசிச் செய்தி



திரு. ம. அ. தவரத்னராஜா
பிரதி அதிபர்
விக்னேஸ்வரக் கல்லூரி,
கரவெட்டி.

கரவெட்டிப் பிரதேசத்தின் கல்விக்கு கலங்கரைவிளக்காகத் திகழும் விக்னேஸ்வரக் கல்லூரியின் உயர்தர மாணவர்களின் படைப்பாக "ஏணி" இதழ் ஒன்பதாவது இதழாக வெளிவந்து மலர்ந்து மணம்பரப்பும் இவ்வேளையில் ஏணிக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்றைய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பயுகத்தில் மாணவரின் கற்றலில் தேடல் முக்கிய அம்சமாக அமைகின்றது. நவீன உலகில் இடம் பெறும் மாற்றங்களை உடனுக்குடன் அறியக்கூடிய வாய்ப்பை இந்நவீன தொடர்பாடல் சாதனங்கள் வழங்குகின்றன. அந்தவகையில் மாணவரின் தேடிக்கற்கும் ஆற்றலை வளர்க்கும் நோக்கத்தை இத்தகைய சஞ்சிகை ஆக்கங்கள் மூலம் அடையலாம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இன்றைய சூழ்நிலையில் இந்த ஏணி இதழ் வெளிவர முன்னின்று உழைத்த ஆசிரியர்கள், மாணவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். அந்தவகையில் இவ்விதழுக்கு ஆக்கங்களைத் தந்துதவிய மாணவர்கள், ஆலோசனைகள் வழங்கி வழிகாட்டிய ஆசிரியர்கள் எல்லோரையும் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். இறுதியாக எதிர்காலத்தில் மென்மேலும் ஏற்றம் பெற்று ஏணி வெளிவர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்பாளர் சிந்தனையில்....

புவிச்சுழற்சியை விடவும் உலகமயமாதல் மிக வேகமாக நடைபெற்றுக் கொண்டுள்ளது. இம் மாறிவரு உலக இயைவாக்கத்திற்கு சவாலாக மாணவர்கள் தம்மை வளர்த்துக் கொள்ளவேண்டும். மாணவர்கள் முற்போக்குப் பயணச் சிந்தனையில் தம்மை வளர்த்தெடுப்பதற்கு எழுத்து, வாசிப்பு மிக அவசியம்; மாணவரின் புதிய தேடலுக்கும் புதிய சிந்தனைக்கும் புதிய வாழ்வியல்சார் இலட்சியங்களை உருவாக்கவும் எழுத்து , வாசிப்பு அவசியமே. இங்கு எழுத்து என நான் குறிப்பிடுவது மாணவரின் இலக்கியப்படைப்பாக்கத்தினையே

இப்படைப்பாக்கத்திறனை வளர்த் தெடுப்பதற்கு யா/ விக்னேஸ்வரக் கல்லூரியின் கலை, வர்த்தக மாணவரின் இணைவினால் உருவாக்கப்பட்ட மாணவர் மன்றத்தினால் "ஏணி" சஞ்சிகை வெளிவருகின்றது இம்மலரானது 9 ஆவது மலராக வெளிவருகின்றது. சிலகாலம் தடையீடுகள் காரணமாக 2009ஆம் ஆண்டு வெளிவந்த இம்மலர் மீண்டும வெளிவருவதற்கு துணைகின்ற இறைவனுக்கு நன்றிகூறுகின்றேன்.

இம் மலரில் வெளியாகியுள்ள மாணவர்களின் ஆக்கங்கள் மேலும் தரம் வாய்ந்ததாகவும் பயனுடையதாகவும் இனிவரும் காலத்தில் இருக்க வேண்டும் என அபிப்பிராயப்படுவதுடன் மாணவர்களின் பலதுறை ஆற்றல்களினையும் வெளிக் கொணர இச்சஞ்சிகை உதவவேண்டும் என ஆலோசனை கூறி, இச்சஞ்சிகை வெளியிடு வதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைவதுடன் இச்சஞ்சிகை இனிவரும் காலத்தில் மேலும் பல வளர்ச்சித்தடம் பதிக்க வாழ்த்துக்கள் கூறுகின்றேன்.

எழு....! சிந்தி....! தேடு.....! பேனாவும் கையுடன் படை! நாளை உனது படைப்பு வரும் சமுதாயத்திற்கு பாதையாக ... வானமாக.... கிழக்கா... சூரியனாக... ஏணியாக மாறட்டும்!

திருமதி சி. தனேஸ்வரி
ஆசிரியர்,
விக்னேஸ்வரக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வி. ம. இலக்கியா
தலைவர்
உயர்தர மாணவர் மன்றம்

## தலைவியின் உள்ளத்துணர்வு

சிந்தனைச் சாதனை புரியும் 21ஆம் நூற்றாண்டில் சிந்திக்கத் தூண்டும் எழுத்துலகப் பேனைகளும் உஷார் பெற்ற நிலையில் யா/விக்னேஸ்வரக் கல்லூரி மாணவர்களின் எழுத் தாற்றலோடு சேர்ந்த சிந்தனையை வளர்ப்பதற்கு உயர்தர மாணவர் மன்றம் காலா காலமாக "ஏணி" சஞ்சிகையை வெளியிட்டு வருகின்றது. அந்த வகையில் 9வது சஞ்சிகையாக இந்த ஆண்டு ஏணி வெளி வருகின்றது. உயர்தர மாணவர் மன்றத் தலைவி என்ற வகையில் இவ் வெளி யீட்டை எண்ணி பேருவகை கொள்கின்றேன். இச் சஞ்சிகை மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் கலை, இலக்கிய, பொருளியல் சார்ந்த விடயங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

இவ் ஏணி சஞ்சிகைக்கு ஆக்கங்களை வழங்கி ஊக்கப்படுத்தி வழிகாட்டிய ஆசிரியர், மாணவர் , கல்விமான்கள் அனைவரிற்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு, வாழ்த்துச்செய்தி அனுப்பிய பெருந்தகைகளிற்கு உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழாசிரியரின் எண்ணக்குவியல்



செல்வி. ந. துஜிகா

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்றார் ஔவையார். மிகப் பழைய காலத்திலேயே எழுத்தியல் கலாசாரம் உணரப்பட்டுள்ளது. அவ்வாறாயின் நாம் இருப்பது 21ஆம் நூற்றாண்டு. எழுத்தினூடாக சிந்தனைச்சாதனைகளை மேற்கொண்டிருக்க வேண்டும். இச்சவாலை எதிர்கொள்ளும் முகமாக ஏணி சஞ்சிகை உயர்தர மாணவர் ஒன்றியத்தால் வெளியிடப்படுகின்றது. இச் சஞ்சிகைக்கு மாணவரிடமிருந்து ஆக்கங்கள் கோரப்பட்டிருந்த போதில் இலக்கியப் படைப்புகளைத் தருவதில் பலர் ஆர்வம் காட்டியிருந்தனர். இருந்த போதிலும் இன்னமும் மாணவர்களின் பங்களிப்பு வேண்டுமென நான் அபிப்பிராயப்படுகின்றேன். மேலும் இவ் ஏணி சஞ்சிகை பதிய பொலிவோடு வெளிவருவதற்கு உதவிய அனைவருக்கும் எனது உள்ளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிகாட்டலிற்கும் நெறிப்படுத்தலிற்கும் பங்களிப்பிற்கும் அழியாத நன்றி நவில்தல்கள்....



ம. உசாந்தி
செயலாளர்

ஏணிச்சஞ்சிகை புத்தாக்கம் பெறுவதற்கு எமது கல்லூரி உயர்தர கலை, வர்த்தக மாணவர்களின் ஒத்துழைப்புக்கள் அதிகம் என்றே கூறவேண்டும். பலகாலமாக இச்சஞ்சிகை வெளியிடத்தவறிய போதிலும் 2012 இன் இன்றைய நாளில் வெளியிட கருணைபுரிந்த இறைவனுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இம் மடல் வெளிவருவதற்கு அனைத்து வகையிலும் உதவிய உன்னத இதயங்கள் வருமாறு, அவ்வகையில் நன்றிக்குரிய இதயங்களாக;
ஏணி மலர் வெளியிட ஆர்வலராக இருந்து அனைத்துவகையிலும் ஆக்கமும் ஊக்கமும் தந்த கல்லூரி முதல்வர் திரு. வே. சிவசிதம்பரம் அவர்கட்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
இச்சஞ்சிகை மகிமைபெற ஆக்கம்தந்த பல்கலைக்கழக கல்விமான்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.
இச்சஞ்சிகை பக்திமனம் கமழ ஆசிச்செய்திகள் தந்து எம்மை வழிப்படுத்தியவர்கட்கும், மகிழ்வோடு வாழ்த்துரைகள் வழங்கிய கல்விமான்கட்கும் மனம் மகிழ்ந்து நன்றி கூறுகின்றோம்.
இச்சஞ்சிகை உருவாக்கத்திற்குப் பலவழிகளிலும் ஒத்துழைத்த ஆசிரியர்களுக்கும் ஆக்கங்கள் வழங்கிய ஆசிரியர்கட்கும் ஆக்கங்கள் வழங்கி சஞ்சிகைக்கு உயிர்கொடுத்த மாணவர்கட்கும் மனம் மகிழ்ந்த நன்றிகள்.
இம்மடல் மேலும் மெருகூட்டப்பட அட்டைப்படம் வடிவமைத்து அழகுற இதழாய் வெளிவர உதவிய அச்சகத்தார்க்கும் மனம் கனிந்த நன்றிகள்.

இவ்வெளியீட்டு மடலுக்கு விளம்பரதாரர்களாய் துணைபுரிந்து பணச்சுமையை பகிர்ந்தளித்த விளம்பரதாரருக்கும் மனம் கனிந்த நன்றிகள்.

மேலும் இச்சஞ்சிகை வெளிவர பலவகையிலும் பணிபுரிந்து அனைத்து உள்ளங்களுக்கும் மனம் கனிந்து மகிழ்வாக கூறுகின்றோம் நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


தமிழ் மொழி ........ 01
சிகரம் தொட ........ 02
மகிழ்வாகும் கல்லூரிக் காலம் ........ 03
அன்பு அன்னையே ........ 05
வாழ்க்கை ........ 06
ஆசை ........ 06
நூல்களும் ஆசிரியர்களும் ........ 07
காப்புறுதி செய்வோமா? ........ 08
சிந்தனைத் துளிகள் ........ 09
நாங்கள் ஏழைகள் ........ 10
சிந்திக்க ........ 14
சமாதானம் ........ 15
சமாதானத்தைதேடி ........ 16
மறக்க முடியுமா? ........ 16
பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் தமிழ்ப்பணி ........ 17
சிறுவர் நலம் பேணுவோம் ........ 19
மனிதமே நீ எங்கே....! ........ 21
மதுவுக்கு அடிமை ........ 22
அரும்பிற்கு அத்திவாரம் ........ 23
போதைவஸ்துகளற்ற ஓர் உலகம் நோக்கி ........ 24
மாணவரும் வாசிப்புத்திறனும் ........ 27
புதுமைத் தமிழன் பாரதி ........ 29
பாதுகாப்பு ........ 30
அன்பின் கல்லூரியே ........ 30
தொடரும் சோகத்தில் பெண்ணின் நினைவுகள் ........ 31
கடவுள் ஏன் கல்லானான்? ........ 33
நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும் ........ 35
வாழ்விற்காய் ஏங்கும் பெண்ணின் நிலை ........ 37
பொது அறிவு (கண்டுபிடிப்பாளரும் கண்டுபிடிப்பும்) ........ 39
உலக நாடுகளும் அவற்றை ஆட்சிசெய்யும் ஜனாதிபதிகளும் ........ 40
சிந்தனைத் துளிகள் ........ 41
மனிதன் எங்கே? ........ 42
கனவுகள் நிஜமாகுமா....? ........ 42
விதி எழுதிச் செல்லும்....! ........ 43
இணையத்தில் தமிழ் ........ 44
சிந்தனைத் துளிகள் ........ 45
புதிய உலகத் தகவல் புரட்சியில் இன்ரர்நெற் ........ 46
தேசியத்தைத் தேடி ........ 47




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலரும் உரைநடையும்............................................................ 48
பெட்ரல்ட் - பிரச்ட்டும் அவரது அரங்கச் செயற்பாடும் .................. 52
யாழ்ப்பாண இலக்கியப்பரப்பில் மிகவு ஆரோக்கியமாகவும்
துரிதமாகவும் வளர்ந்துவரும் ஜீவநதி சஞ்சிகை பிரதம ஆசிரியர்
க.பரணிதரனுடன் ஓர் நேர்காணல் ................................................ 54
The 8 Good Habits of Highly Disting Uished Students ........................ 59
துயரத்துடன் .................................................................................
64பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை சேவையும் அதன் அவசியமும் 65
பேண்தகு அபிவிருத்திக்கான கல்வி.............................................. 68
கைக்கூக்கவிதைகள் ........................................................................ 73
யாரொடு நோவோம்? யார்க்கெடுத்துரைப்போம்? ......................... 74
ஈழத்தமிழ் புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ்க்கல்வி ........................... 77
கண்ணீருடன்.................................................................................. 89
வாழ்க்கைக்குப் பயன்தரக்கூடிய ஆன்மீக குறிப்புகள் ....................... 90



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி

தடுக்கி விழுந்தால்
மட்டும் அ.....ஆ.....
சிரிக்கும் போது
மட்டும் இ......ஈ........
சூடுபட்டால்
மட்டும் உ.......ஊ.......
அதட்டும் போது
மட்டும் எ.... ஏ.....
ஐத்தின் போது
மட்டும் ஐ
ஆச்சரியத்தின் போது
மட்டும் ஒ..... ஓ.....
வக்கணையின் போது
மட்டும் ஔ
விக்கலின் போது
மட்டும்...........?
என்று தமிழ் பேசி
மற்ற நேரம்
வேற்று மொழி பேசும்
தமிழரிடம்
மறக்காமல் சொல்
உன் மொழி
தமிழ் மொழியென்று......

இ. நிதுர்ஷா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகரம் தொட.......

ஓடும் முகில்களைப் பார்!
முடிவில்லா பயணங்கள்
தொடர்கின்ற போதும்
முட்டி மோதி
முன்னேறி செல்கிறது
தொடர்ந்து கொண்டேயிரு
தோல்விகள் வாழ்வல்ல
வெற்றிக்கான விதைகளே!
.........................................

பெரியோர் வார்த்தைகள்
கசப்பாய் தோன்றும்
சிலகாலம் சென்றதும்
அமிர்தவாக்காய் உணர்வாய்
கடல் நீரைப்பார்!
ஆவியாகி முகிலாகி
தூய நீராகி,
உலகிற்கு நன்மை தருகிறதே
அமிர்தவாக்கே பெரியோர்வாக்கு
.................................................

உதிரத்தைப் பாலாக்கும்
பசுவைப்பார்
உறவுக்காய் வாழும்
காக்கை பார் ஊரோடு ஒத்தோடும்
எறும்பைப் பார்
நன்றிக்காய் வாலாட்டும்
நாயைப்பார்
உன் நாளைய வாழ்விற்காய்
நல்வழி நடந்து பார்!

உன் வாழ்வு
சூனியமாகி விட்டதே
என வருந்துகிறாயா?
வாழ்வல்ல உன் மனமே
சூனியமாகிற்றே
சூனியமெனும் இருளை
சுட்டெரி
வெளிச்சம் வரும்
இருளின் பின் தான்
பூமி விடிகிறது
.....................................................

வயிற்றில் துணியைக்கட்டி
வாழ்வதைவிட
வறுமைக்கு எதிர்நின்று
ஏர்பிடித்து வெற்றிகொள்
உழைப்பால் உயர்வாய்
வாழ்வதற்காய் சேமி
சேமிப்பதற்காய் வாழாதே!
.....................................................................

எப்போது உன் தவறுகளை
மறைத்துவிட நினைக்கிறாயோ
அப்போதே - நீ
மனித பண்பிலிருந்து
விலகி விடுகின்றவனாகிறாய்
திறமை கோடியுண்டேனும்
நேர்மை தவறின்
வெற்றியும் வேதனமும்
உன்,
கைநழுவிச் சென்றுவிடும்

கடந்து செல்லும்
ஒவ்வொரு கணங்களிலும்
உன் உழைப்பை
உறுதிப்படுத்து
கடிகாரத்தின் ஓட்டம்
ஒன்றாயிருப்பினும்
காலத்தின் ஓட்டம் வேறுபடும்
இளமையில் உழைத்துவாழ்
முதுமையில் மகிழ்வாய்
.................................................................

ஆலமரங்கள் தன்
விழுதை அகன்று பரப்புகிறதே
அப்படித்தான் நீ
விருட்சமாய் இரு
விழுதுபரப்பு
விட்டுக்கொடுக்கப்பழகு
விருட்சங்களை
விழுதுகளையல்ல
அதுவே உன்
அடையாளச் சின்னங்கள்

லோ. ஷர்மினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்வாகும் கல்லூரிக்காலம்

L. தேனுஷா , 13A (2012)கலை

கல்லூரி காலமென்பது மனித வாழ்விலே மிகவும் சுவாரஷ்யமான பருவம். பல்வேறு தேவைகள், எதிர்பார்ப்புக்கள், சந்தர்ப்பங்கள் என்றவாறு பரிணமிக்கும். இக்காலம் மனிதவாழ்வின் அர்த்தத்தை அடைவதற்கான, உயரிய இலட்சியங்களை நிறைவேற்றுவதற்காக, சாதனைகளின் சிகரங்களை தொடுவதற்காக, ஆழமான அடையாளங்களை பதிப்பதற்காக தன்னை சமூகத்துடன் பிணைத்துக் கொள்வதற்காக ஆரம்பிக்கும் பயணத்தின் அத்திவாரமே கல்லூரி.

“எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே
அது நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே

ஆம் தாய் போல பாராட்டி, சீராட்டி, நல்வழிப்படுத்தி திட்டமிட்டு செப்பனிட்டு வருங்கால சமுதாயத்தை இலட்சிய வேட்கை கொண்ட சமூகமாக மிளிர வைப்பதில் கல்லூரிக்கும் அதிகபங்குண்டு.

மாணவர்கள் எனப்படுபவர்கள் பட்டாம்பூச்சி போன்றவர்கள். அவர்கள் தமக்கான சுதந்திரம், தனிப்பாதை, தனிப்பயணம், தன் முடிவுகளை மற்றோர் ஏற்க வேண்டும் முதலிய எதிர்பார்ப்புக்களை உடையவர்கள். படிப்பு, வேலை, திருமணம் என எல்லாவற்றிலும் தாமே முடிவெடுக்க வேண்டுமென விரும்புகின்றனர். இந்த சூழ்நிலையில் இவர்களிற்கு நல்லதொரு குருவாக நல்வழிகாட்டி அமைந்துவிட்டால் எதிர்காலம் பிரகாசிக்குமல்லவா?

ஆசிரியர்களே! உங்கள் அரும்புக் குழந்தைகளை ஆம் மாணவர்க்ளாகிய எங்களை அப்படியே ஏற்றுக்கொள்ளுங்கள். அன்பை பாசத்தை பொழியுங்கள். அரும்பின் நடவடிக்கை பாதித்தாலும் நீங்கள் நேசிப்பதை பல வழிகளில் அவர்களிற்கு புரியுமாறு வெளிப்படுத்துங்கள். வெற்றி பெறும் போதெல்லாம் தட்டிக் கொடுங்கள். தோல்விகளை கண்டு துவளாத மனப்பான்மையை வளர்த்துவிடுங்கள். இவர்களின் போதெல்லாம் தோள் கொடுத்துதவுங்கள். அவர்கள் தமது கொந்தளிப்புக்களை எளிதில் நீந்திக் கடக்க செம்மையான பாதை அமையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன் முதலாக 5 வயதிலே கல்விக்காக காலடியெடுத்து வைக்கிறான். இதுவே 18 வருடகாலமென நீள்கிறது. ஆக, வாழ்வில் காற்பங்கு கல்விக்காகவே செலவிடப்படுகின்றது. எனவே எங்கள் முன்னேற்றத்தில் நீங்கள் பங்காளியாகுங்கள். எங்கள் வெற்றிக்காகப் போராடுங்கள்.

மனிதனை மனிதனாக்கும் நல்ல பல குணநலன்களை எமக்கு பயிற்றுவித்து விடுங்கள். எங்கள் மனங்களை செப்பனிடும் அரிய பல உளவியல் கருத்துக்களை எமக்கு போதியுங்கள். பட்டாம் பூச்சியாய் சிறகடித்துச் சுற்றிவிட்டு வருங்கால உலகில் நுளைய முற்படும் எமக்கு இந்த உலக விநோதங்களை புகட்டி விடுங்கள். கொலை, களவுகள், காமம், பொய் என பஞ்சமாபாதகங்காளாலும் வரண்டு பாலைவனமாய் போயிருக்கும் இந்த பூமித்தாயை எங்கள் அன்பாலும் இன்சொற்களாலும், நல்ல செயல்களாலும் பசுமைப்படுத்தி பூங்காவாக்க நவகோடி மாணவ சமூகத்திற்கும் அழைப்பு விடுங்கள். நிச்சயம் வருங்கால சமுதாயம் பூமாதேவிக்கு குளிர்த்திபாடும் என்பதில் ஐயமில்லை.

இணையம், கைத்தொலைபேசி என நவீன விஞ்ஞானத்தின் தீயசெயல்களிற்கு அடிமையாகி துணைபோகும் சுகாதார உறவுகளை ஒரு கணம் தட்டியெழுப்புங்கள். பஞ்சபூத கலைகளின் நுட்பங்களை போதியுங்கள். அவர்களை கல்வியின் பக்கம் திசைதிருப்புங்கள் கற்றலில் ஆர்வத்தை உண்டு பண்ணுங்கள். அவர்கள் முன் நல்ல பல சவால்களை முன்வையுங்கள். பாடசாலையில் எவ்வேளையிலும் அவர்கள் தொழிற்படுநிலையிலிருப்பதை உறுதி செய்யுங்கள். மாணவர்கள் பச்சைக்களிமண் போன்றவர்கள் அவர்களை நல்லதொரு சிலையாக வடித்துத் தாருங்கள் எங்கள் வரலாற்றில் உங்கள் பெயர் பொன்னெழுத்துக்களால் பெறிக்கப்படும். ஆசிரியர்களே! நிச்சயம் உங்களால் முடியும். உங்களால் மட்டும் தான் முடியும். ஏனெனில் வருங்கால சந்ததியான இளம் சமுதாயம் உங்கள் கைகளிற்தான் தங்கியிருக்கிறது.

உயரிய சிந்தையுள்ள சமூக ஆணிவேர்களே! ஒரு கணம் நில்லுங்கள். சிறார்கள் எம்மீது திணிக்கப்படும் குற்றங்களிற்கும், கொடுமைகளிற்கும் வன்முறைகளிற்கும் முற்றுப்புள்ளியிடுங்கள். எங்கள் வாழ்க்கை வளமாக்க கைகொடுங்கள். சாதிக்கப்பிறந்த எம்மை ஏதுமறியா பிஞ்சு வயதில் சாக்கடையாக்காதீர்கள். சிந்தியுங்கள்! சிறார்கள் நாம் சீர்குலைந்தால் எதிர்கால சமூகத்தின் நிலை என்ன? பெற்றோர்களின் நிலை என்ன? கல்வி புகட்டிய ஆசிரியர்களின் நிலை என்ன? நீங்கள் ஆறறிவு கொண்ட மனிதர்கள் தானே? அப்போ ஏன் உயரிய வழியில் சிந்திக்க மறுக்கிறீர்கள்? பிஞ்சுமனதில் ஆணியடிக்க எப்படி உங்களிற்கு மட்டும் மனது வருகின்றது. நீங்கள் இயமலோகத்து தொண்டர்களா? அல்லது காட்டு மிருகங்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சபகைகளையும் ஒழியுங்கள். அவை மனிதர்களை மாக்களாக மாற்றிவிடும். சாதிக்கத் துடிக்கும் சிறார்கள் எமக்கு கைகொடுத்து உயர்த்தி விடுங்கள். நாளைய சமுதாயத்தை காக்க வேண்டிய வரலாற்றுச்சுமை எம்மிடம் தொக்கிநிற்கிறது. கடமையினை கண்ணியமாய் செய்ய தடைகளை தகர்த்து சவால்களிற்கு முகங்கொடுக்க எமக்கு கற்றுத்தாருங்கள்.

"ஒளிமயமான வசந்தம் வீசும் விடியல் தோன்ற இன, மத பேதம் நீங்க யாவரும் கைகோர்ப்போம். ஆகவே, இனிய நல் உறவுகளே! மக்களாக வாழ்ந்த காலம் இனி வேண்டாம். இனியேனும் மனிதர்களாக வாழ முற்படுவோம். வாழத்துடிக்கும் சகோதர உறவுகளிற்கு கைகொடுப்போம். சிந்தித்து செயலாற்றுவோம். சொல்லின் இனிமையை செயலிலே விளக்கி நிற்போம். கொடிய வன்முறைகளிற்கெதிராக அண்ணாவின் அஹிம்சை வழியில் போராடுவோம். வெற்றிக்காக தியாகங்கள் பல புரிந்து அயராது உழைப்போம். நல்ல சொற்களாலும், செயல்களாலும் பன்மைத்துவ கோபுரம் ஒன்றமைத்து உலக அரங்கையே மகிழ்வால் திளைக்க வைப்போம்" என விரியத்துடிக்கும் மொட்டுக்கள் எமக்கு சத்தியம் செய்து தாருங்கள் அன்புள்ளம் கொண்ட உறவுகளே!

"வன்முறையற்ற உலகில் சிறார் வாழ்வு ஒளிமயமாக
அயராது உழைப்போம்"

■

## அன்பு அன்னையே

அன்னையே உன் பாசத்தால்
என்னையே நான் மறப்பேன்
சொந்தங்கள் அதிகம் உண்டு
சொல்லிக்கொள்ள நீ உண்டு
பத்துமாதம் கருவிலே சுமந்து
பெற்றெடுத்து பூமியிலே - என்னை
வளர்த்த உத்தமி நீ!
சோர்ந்து போகும் நேரத்திலும்
வெற்றிக்கு எனை அழைப்பாய்
நீ தரும் அன்பு போல
உலகில் ஏதும் ஈடாகுமோ?
ஏழேழு ஜென்மம் எடுத்தாலும்
உன் மகளாகவே நான் பிறக்க
வரம் தருவாய் என் அன்னையே!

க. தேன்மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கை!

கோலமிடும்
புள்ளிமான்களே
உங்கள் புள்ளிகளால்
வாழ்க்கைக் கோலத்தை
வரைந்து செல்லுங்கள்

உங்கள்
புள்ளிகளாவது
நம் வாழ்வினை
வடிவமைக்கட்டும்

தூவிச் செல்லும்
மழை மேகங்களை
உங்கள்
சிறு துளிகளை
எம்மீது
தூவிச் செல்லுங்கள்
அப்போதாவது
எமது வாழ்க்கை
பற்களாய் முளைத்து
பூக்களாய் மலரட்டும்

*ம. உஷாந்தி*

## ஆசை....!

**ப**தவியின் மீது ஆசை
நல்ல பண்பை பறித்துவிடும்
பணத்தின் மீது ஆசை
பிணத்தையும் விலைபேசும்
மண்ணின் மீது ஆசை
உடன் பிறப்பிற்கு
எல்லைபோடும்
பொன்னின் மீது ஆசை
பிறர்பால் அன்பையும்
அகற்றிவிடும்
பெண்ணின் மீதுஆசை
உன் உறக்கத்தை
தொலைத்துவிடும்
கருவறையில் பிறந்தோரிற்கு
கல்லறைதான் முடிவு
இடைவழியல் ஏன் இந்த ஆசை....!

*பு. சுஜீவன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்களும் ஆசிரியர்களும்

| | | |
|---|---|---|
| ஐந்திணை ஐம்பது | - | மாறன் பொறையனார் |
| சிறுபஞ்சமூலம் | - | காரியாசன் |
| சீவகசிந்தாமணி | - | திருத்தக்கதேவர் |
| சூளாமணி | - | தோலாமொழித்தேவர் |
| சிலப்பதிகாரம் | - | இளங்கோவடிகள் |
| மணிமேகலை | - | சீத்தலைச் சாத்தனார் |
| குண்டலகேசி | - | நாதகூத்தனார் |
| திணைமொழி ஐம்பது | - | கண்ணன் சேத்தனார் |
| நன்னூல் | - | பவநந்தி முனிவர் |
| ஏலாதி | - | கணிமேதாவியார் |
| கார்நாற்பது | - | மதுரை கண்ணங்கூத்தனார் |
| முக்கூடற்பள்ளு | - | நைனாப்புலவர் |
| மதங்கசூளாமணி | - | விபுலானந்தர் |
| சேக்கிழார் பிள்ளைத்தமிழ் | - | மீனாட்சி சுந்தரம்பிள்ளை |
| விநோத மஞ்சரி | - | வீரசாமி செட்டியார் |
| திருச்சிற்றம்பலம் | - | ஜெகசிற்பியன் |
| திருக்கழுக்குன்ற புராணம் | - | அந்தக்கவி வீரராகம முதலியார் |
| யாழ்ப்பாண வைபவமாலை | - | மயில்வாகனப் புலவர் |
| அர்த்தசாஸ்திரம் | - | கௌடில்யன் |
| காமசூத்திரம் | - | வாத்சலாயனர் |
| விஷ்ணு தத்துவம் | - | மத்துவர் |
| யோக சூத்திரம் | - | பதஞ்சலி |
| சாகுத்தலம் | - | காளிதாசர் |
| மகாவம்சம் | - | மகாநாமதேரர் |
| பூஜாவலிய | - | மயூரபாத தேரர் |

ம. உஷாந்தி
**(13B)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்புறுதி செய்வோமா?

நாம் கடலில் மூழப் போகின்றோம்
இல்லை இல்லை கடனில் மாழப்போகின்றோம்
கடவுளே எம்மைக் காப்புறுதி செய்

பொருளாதாரம் வளர்ச்சிதான் - சேர்ந்தே
பொருளின் விலையும் தான் வளர்ச்சி
பணவிக்கம் குறைவாம் - ஆனால்
விலையேற்றம் உண்டாம்

நாம்பெற்ற தீட்ஷை - பல
நாடுகள் போட்ட பிச்சை
சிலநாடுகள் கடனாம்
சில நாடுகள் அன்பளிப்பாம் - நம்மவர்
பிச்சை எடுத்தாலும் பித்தளைத் தட்டுத்தான்

வெளிநாட்டு வங்கிகளும்
வெளிக்கிட ஆயத்தம்
கடனாக்கம் செய்து - நாட்டை
கடனாளி ஆக்கியதால்

உள்நாட்டு வங்கிகளதும் உருக்குலைந்து தானே
செலான் வங்கி செத்துப் போக
மத்திய வங்கி மத்தளம் அடிக்க
இலங்கை வங்கி இயங்கவைத்த பரிதாபம்

பதற்றத்தில் நாடு
பதறினால் பாதாளம்
சிதறினால் சேதாரம்
கவனமாய்க் காப்பாற்ற காப்புறுதி செய்வோமா?

**சி. கோகுலன்**
**13 com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்தனைத் துளிகள்

வாழ்க்கையை தத்துவங்களாய் மீட்டுப்பார்
வாழ்க்கை மொட்டுக்களாய் மலர்ந்துவிடும்

வாழ்க்கை என்பது எழுதி முடிக்கப்பட்ட பக்கங்கள்
மீட்டுப்பார்ப்பது சுலபம் ஆனால் மீண்டும் எழுதுவது கடினம்

ஒரு நிமிடம் சிந்தித்துப்பார் - உன்
வாழ்க்கையின் இறுதி நிமிடம் எது வென்பதை?

துன்பம் வரும் வேளையில்
உன்னை நீயே உணர்வாய்

துன்பத்தை நினைத்து துன்பமடைவதை விட
இன்பத்தை நினைத்து இன்பமடையுங்கள்

பயம் என்பது தோல்வியின் தூண்டுகோள்
தைரியம் என்பது வெற்றியின் தூண்டுகோள்

சிந்திப்பதற்கு நிமிடங்கள் தேவையில்லை
உள்ளங்கள் ஒன்றே போதும்

விவேகமில்லாத வேகமும்
வேகமில்லாத விவேகமும் பயனற்றது

ம. இலக்கியா
(13B)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# நாங்கள் ஏழைகள்

பள்ளிப்பருவத்தின் பருவங்கெடாத வயதில் துள்ளித்திரிந்த நாட்கள் இன்னும் கண்ணுக்குள்ளே பசுமையாய் தெரிந்தன. கால ஓட்டத்திலே அகப்பட்டு பிறந்தும் மடிந்தும் நிலையற்ற வாழ்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்ற மனிதர்கள் இன்பம் என்ற மாயைக்குளத்தில் தடம்புரண்டு தங்களை அழியாத ஆத்மாக்கள் என்று நினைத்துக் கொண்டிருப்பது தான் என்ன கொடுமை?

"தம்பி கணேஷன், எங்கையப்பன் கையைக் காட்டு. இந்த எண்ணையைப் பூசி விடுறன். இரண்டு நாள் தொடர்ந்து பூச வீக்கம் வத்திப்போகும்"

"ஏம்மா, உதுக்கு உந்த எண்ணை போட சுகம் வருமா? நாளைக்கொருக்கா டொக்ரரை போய்ப் பார்ப்பம்"

"என்னவோ ராசா, எனக்கு உதைப்பார்க்க பயமாயக்கிடக்கு எங்கையெண்டாலும் கொண்டேக் காட்டப்பு"

என முணுமுணுத்துக் கொண்டே தாய் சிவகாமி அடுக்களையினுள் நுளைந்தாள். ஐம்பது வருடங்களை இந்தப் பூமியிலே வாழ்ந்து முடித்துவிட்டாள். அவளது கணவன் ஐந்து வருஷங்களிற்கு முன் கொடிய புற்றுநோயால் இறந்துவிட்டான். ஆனாலும் கணேஷன், காயத்திரி என்ற இரண்டு முத்துக்களை துணையாகக் கொடுத்து விட்டுப்போனார்.

கணவன் பெரிதான உத்தியோகம் ஒன்றும் பார்க்கவில்லை தினம் தினம் மண்ணோடு போராட்டம் நடத்துகின்ற விவசாயிகளுள் ஒருவர். சிவகாமியும் முப்பது வருடங்களாக மூன்று கால் அடுப்போடும் புகையோடும் தினம் தினம் போராட்டம் நடத்துவதிலேயே தன் வாழ்நாளை கழித்து விட்டாள்.

கணேஷன் புரண்டுபடுத்தான். இன்னும் கைகளில் வலிமாறாதிருப்பதை உணர்ந்தான். மெல்லத் தன் கைகளை எடுத்து வீக்கங்களை உற்று நோக்கினான். அவை எதையோ அவனிற்கு ஞாபகப்படுத்தி நின்றன. மீளவும் உற்று நோக்கினான். அந்த ஒவ்வொரு வீக்கங்களிற்கூடாக அவனை ஜீவநாடியே ஒடுங்கிப்போன சிவபாதத்தின் முகம் ஆயிரம் விம்பங்களாக மனத்திரையில் விரிந்தன. அவனது உணர்வுகள் விக்கித்து நின்றன.

"டீங் டிங் டிங் டிங்...."

பாடசாலையின் ஆரம்பமணி அடித்ததும் மாணவர்கள் உடற்பயிற்சிக்காக மைதானத்தை நோக்கி விரைந்து கொண்டிருந்தனர். "அடமாடு! இஞ்சாலைவா. ஒரு கழிசானும் போட்டு, கொப்பியும் தூக்கிட்டு கிளம்பிவீங்களே ஸ்கூலுக்கெண்டு. நாயள் உங்களுக்கேன் படிப்பு? ஏன் பிந்தி வந்தனி?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சேர் சேர்! அடிக்காதீங்க அம்மாக்கு காய்ச்சல் அதான் பிந்தீற்றுது. இனி இப்படி வரமாட்டன். மன்னிச்சுக்கொள்ளுங்க சேர்."

"அம்மாக்கு காய்ச்சலா? ஏன் நீதான் வைத்தியம் பார்த்தியா? காய்ச்சல் எத்தினை பாகைல அடிக்குது? அதைப்பார்க்கலியா? எனக்கே கதை விடுறியா?"

"சேர்.. சேர்.. அடிக்காதீங்க! ஆ... அ.... அம்மா... மா!"

அந்தப்பாலகன் முதுகை தடவியவாறே அழுதவண்ணம் வகுப்பிற்குள் ஓடினான். அவனது பார்வையில் மிரட்சி தெரிந்தது.

"வராத மாணவர்களை அதிபர் காரியாலயத்திற்கு அனுப்புமாறு வகுப்புத்தலைவரைக் கேட்டுக்கொள்கிறேன்."

என்ற ஒலிபெருக்கியில் அறிவித்துவிட்டு அதிபர் மேசையில் அமர்ந்தார். அவரது முகத்தில் அதிகாரப் பெருமிதம் தெரிந்தது.

வராத மாணவர்கள் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளைப் போல நடுநடுங்கிக் கொண்டே வரிசையாக காரியாலயத்தின் முன் வந்தனர். அதிபருடைய பலமான கைகள் தங்கள் தலையைப் பதம் பார்க்கப் போகிறது என்பதில் அவர்களிற்குச் சந்தேகமேயில்லை. அத்தனை முகங்களுள் ஒருமுகமாய் கணேஷனும் நின்று கொண்டிருந்தான்.

அவன் அணிந்திருந்த வெள்ளை நிறம் மங்கிப் போன சட்டையே அவனது குடும்ப நிலையை தெளிவாக உணர்த்தின. ஆனால் வறுமையைக் கேவலமாய் பார்க்கின்ற இன்றைய சமுதாயத்திலே அவன்மனம் அல்லலாடிக் கொண்டிருந்தது. தினம் தினம் வெந்துகொண்டிருந்தது. இத்தனை கேவலமான மனிதர்களுக்குள்ளேயும் வாழத் தான் வேண்டுமா? தற்கொலை செய்து கொள்வோமா? என்று அவன் பலமுறை மனமுடைந்து யோசித்திருக்கிறான். ஆனால் அவனின் பாசமான தாயின் முகம் அவன் நெஞ்சில் தோன்றி நிற்கையில் யாவும் மறந்து காலம் கழித்தான்.

"அட கிழடுகள் உங்களுக்கென்ன உத்தியோகமே வீட்டில? கெதியா வாங்க. உந்தக் கடிதத்தை எல்லாம் குப்பைல போடுங்க. கடிதமொன்றும் பார்க்கமாட்டன். ஒவ்வொருதரா உள்ள வாங்க."

கணேஷனே முதலில் போனான்.

"ஏய் கழுதை! உன்னைப்பற்றி கனகேஷ் இருக்கு. நீ இன்றையோட திருந்துறியோ இல்லையோ பார்!"

"சேர்... சேர்... அடிக்காதீங்க.., ஆ. அய்யோ... அம்மா!"

அதிபர்சிவபாதத்தின் ஒருமுகம் பல முகமாய் தெரிந்தது. தாங்கமுடியாத வலி. மயக்கம் வருவது போல் உணர்ந்தான். மெல்ல வெளியேற முற்பட்டான.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"டேய் இஞ்சை வா! உன்ற சப்பாத்து, ரை எல்லாம் எங்க? இதென்ன விடுகாலியளை மேய்க்கின்ற இடமெண்டா வாறியள்? ஓடு வீட்டை போய் பெற்றாரைக் கூட்டிவா!"

"சேர்! உண்மைல காய்ச்சல் தான். மலேரியா என்றவை. டொக்ரர் தந்த துண்டும் இருக்குசேர்.

"ஓடுறா வெளில! உனக்கென்ன திமிர்? ரீச்சர்மாரே எனக்கு முன்னால வரப்பயப்படுவீனம். நீ எனக்கே காரணம் சொல்லுறியா? ஓடு உனக்கிங்க இனி இடமில்லை"

அடித்தவாறே கணேஷனை பாடசாலை வாயிலிலிருந்து வெளியேற்றினார். அவன் அழுதவாறே வீட்டை நோக்கி நடந்தான். தாய் சிவகாமி பிட்டு விற்றுத்தான் அவர்களுடைய அன்றாடம் வெறுமையாகும் வயிறு ஓரளவு நிறைந்து கொண்டிருந்தது.

"அம்மா... அம்மா..! ஆ...அ...ஆ...!"

"என்னப்பு கணேஷா! பள்ளிக்கு போகலியா? ஏன் அழுகிறாய்? இதென்ன கையெல்லாம் வீங்கியிருக்கு? என்ற ராசா? என்ன நடந்தது?"

மனம் பதறி அவனை அழைத்துக் கொண்டே கேட்டாள். அவள் ஏழைத்தாயல்லவா? அவள் அழுதே விட்டாள். தன் மகனின் தழும்புகளிற்கு எண்ணை போட்டு ஒத்தடம் கொடுத்தாள் பத்து மாதம் சுமந்து ஒரு பிள்ளையைப் பெற்று வளர்ப்பவர்களிற்குத்தானே தம்பிள்ளையின் அருமை தெரியும். ஒவ்வொரு தாய் தந்தையும் தம் பிள்ளைக்குத் துன்பம் வரும் போதே அதை உணர்வர். மற்றவர்பிள்ளை துன்பப்படும் போது மட்டும் அவர்களிற்கு பழி போடுவர். மனம்நொந்து சொல்ல முடியாத வார்த்தைகளால் காயம்பட்ட நெஞ்சினை தம் வார்த்தைகளால் கூறு போட்டு விடுவதில் வல்லவர்கள் பலர் இருக்கின்றார்கள். சமுதாயம் ஏன் இப்படி இருக்கிறது? கலியுகம் என்பது இதுதானா? துன்பத்தால் வருந்துபவர்க்கு ஆறுதல் கூறாவிடினும் அவர்களை மீண்டும் மீண்டும் துன்பப்படுத்துவது தானா மனிதநேயம்?

சிவகாமி கணேஷனையும் அழைத்துக்கொண்டு ஓட்டமும் நடையுமாக பள்ளியை நோக்கி விரைந்தாள். பள்ளியுள் நுழைந்து காரியாலயத்தின் முன்னால் நின்றாள். அதிபரோ கண்டு கொள்வதாக தெரியவில்லை. நேரம் மதியத்தை தாண்டியது.

"யார் நீங்க? ஏன் வந்தனீங்க?"
அதிகாரம் தொனிக்க எழுந்த அந்தக்குரல் கண்டு எட்டுத்திக்கும் அதிர்ந்தன.
சோ நான் கணேசனின் அம்மா. அவனுக்கு மலேரியா சேர் அதான்...

"உதென்ன நல்ல சாட்டு. படிக்கிற பிள்ளைக்கு உது ஒரு சாட்டில்லை.. ரை, சப்பாத்து இல்லாம நான் அனுமதிக்கமாட்டேன். வேண்டிற்று ஒழுங்கா அனுப்புங்கோ"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளிற்கு வேர்த்து வியர்த்தது. பொலிஸால் விசாரணை செய்யப்படுவது போல் உணர்ந்தாள். கணேஷனையும் கூட்டிக்கொண்டு வீட்டை நோக்கி நடந்தாள். காலையில் சமைத்து வைத்துபிட்டும் காய்ந்து போக்கிடந்தது. அவளது உள்ளத்தைப் போலவே... இனி அந்தப்பிட்டை எப்படி விற்கமுடியும்? முதன்நாள் விற்ற இலாபமே அவர்களுடைய அடுத்த நாள் சாப்பாடு. ஆனால் இனி...? அந்தக்காய்ந்த பிட்டினை அவர்களை தவிர வேறு யாருமே சாப்பிட்டிருக்க மாட்டார்கள்.

அடுத்தநாள் விடிந்தது. ஒவ்வொரு விடியலுமே அவர்களின் வாழ்வின் வறுமையை விடுவிக்கவே நினைத்ததில்லை. இந்தச்சமூகம் தான் அவளிற்கு உதவுமா? இல்லை. உபத்திரவம் வேண்டுமானால் செய்வார்கள்.

“என் மகன் படிக்க வேண்டும்” அவள் மனம் அங்கலாய்த்தது.

“இந்தா கணேஷன், இன்றைக்கு ரையை வேண்டு சம்பாத்தைப் பிறகு வேண்டுவம்.”

அவள் பிட்டு விற்ற காசையே எடுத்து அவனிடம் கொடுத்திருந்தாள். சிற்றூழியர் ஒருவரிடம் பணம் கொடுத்து ரையை வாங்கினான். புதியரை அழகாக இருப்பதாக எண்ணி மகிழ்ச்சியடைந்தான். காலை உடற்பயிற்சி முடிந்ததும் மாணவர்கள் வகுப்பிற்குள் செல்ல முற்பட்டனர்.

“சப்பாத்து, ரை போடாதவை ஒவ்வீசுக்கு போங்க”

ஆசிரியரின் கம்பீரமான குரல் கண்டு கணேஷனின் குதூகல மண்பானை நிலத்தில் வீழ்ந்தது போல் சுக்குநூறானது. அதிபரின் நெருப்புப் பார்வை அவன் நெஞ்சில் குத்துவது போலிருந்தது.

“ஓடிவிடலாமா?... இல்லை நான் படிக்கணும். அம்மாவை காப்பாத்தணும்” “டேய் இஞ்சைவா! உனக்கென்ன சிங்களமே சொல்லுறது? எங்கே சூ?” கணேஷனை கண்டவுடன் அதிபர் உறுமிக்கொண்டு எழுந்தார். “சேர்! ரை வாங்கத்தான் காசு காணும். பிறகு போட்டுவாறன் சேர்” “உந்த மண்ணாங்கட்டிக் கதையெல்லாம் வேண்டாம்! இஞ்சை வா!” “ஐயோ.. ஐயோ.. நோகுது சேர்.. ஆ...அ...அம்மா...!”

கைகளால் தடவுமிடமறியாது உடம்பு முழுவதும் வலித்தது. உடல் பூராயும் தழும்புகள். உடலை விட மனம் அதிகமாயே வலித்தது. “வீட்டையோடு சப்பாத்து இல்லாட்டி இஞ்சை வந்து கரைச்சல் தராத. போய் எங்கேனும்படி அல்லது போய் தோட்டம் கொத்து. அதான் உங்களுக்கு சரி”

புத்தகப்பையும் எடுத்துக் கொண்டு களைப்புடன் வீடு நோக்கி நடந்தான்.

“என்ர அம்மா எவ்வளவு கஷ்ரப்படுறா? சப்பாத்தில்லாம பள்ளிக்கூடமும் போகேலாது. அம்மாட்டயும் காசில்ல. மனிதத் தனமே இல்லாத இவங்களோட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக்கூடத்தில் என்னைப்போல ஏழை மாணவர்கள் படிக்க முடியாது. இனியும் என்னால அடிவாங்கவோ அவமானப்படவோ முடியாது"

வீடு பூட்டியிருந்தது. தங்கை பள்ளிக்குச் சென்றிருந்தாள். தாய் உழைப்பிற்குச் சென்றிருந்தாள். கையிலிருந்த புத்தகப்பையை கீழே வைத்தான். உடற்பாரம் மனப்பாரம் இரண்டையும் இறக்கி வைத்தது போலிருந்தது அவனிற்கு. திண்ணையிற் கிடந்த தந்தையின் மண்வெட்டியை எடுத்து தோளிலே போட்டுக்கொண்டு தோட்டத்தை நோக்கி நடந்தான்.

"உங்களுக்கேன் படிப்பு தோட்டத்த கொத்துங்கோ"

அதிபரின் வார்த்தைகள் நினைவிற்கு வந்தன. "தம்பி கணேஷா, ஆஸ்பத்திரிக்கு போகலையோ? எழும்பப்பு."

தாயின் வார்த்தைகள் காதைத் தொட்டதும்பொழுது புலர்ந்ததை உணர்ந்தான்.

"அம்மா! அம்மா, தண்ணீர் இறைக்கோணும் தோட்டத்திற்கு இல்லாட்டி இப்ப வெயிலுக்கு காய்ஞ்சு போம். இறைச்சுப் போட்டு வாறன்"

கூறிக்கொண்டே மண்வெட்டியைத் தூக்கிக்கொண்டு நடந்தான் தோட்டத்தை நோக்கி... அவன் சுமைதாங்கியல்லவா?

**தேனுஷா**

**(13 A 2012) கலை**

---

## சிந்திக்க...!

திறந்த வெளியில்
காவலின் மத்தியில்
கன்னியர் சிந்தனை
காணவா! இறைவா?

**பு. சுஜீவன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானம்

ஓ! மனிதா!
சுகமான வாழ்வு பெற
சுமைகளை தாங்கி விடும்
அன்பான பறவை பெற
சமாதானத்தை விரும்பிவிடு

காலன் அவன் கைகளிலே
தந்துவிட்ட உறவுகளை
அவனியிலே பெற்றுவிட
சமாதானத்தை விரும்பிவிடு

காத்திருந்து தேடியவை
கைவிட்டு போனவைகள்
கைகளிலே திருப்பிவர
சமாதானத்தைவிரும்பி விடு

கூண்டுகளுள்ளே வாழும்
வாழ்வுதனை உடைத்து
சுதந்திரமாய் பறந்திட
சமாதானத்தை விரும்பி விடு

வாங்குகின்ற சுவாசத்தை
சீராக பெற்றுவிட
விடியலை தேடிட
சுமாதானத்தை விரும்பிவிடு

சுற்றத்தோர் விரும்பி வர
துள்ளியது பள்ளி சென்று
சித்திகள் பெற்றிடவே
சமாதானத்தை விரும்பிவிடு

**இனிசியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமாதானத்தை தேடி....!

**து. அனுசான்**

இரு கைகளாலும்
எழுதிக் கொள்வோம்
சமாதானத்தின்
சலனங்களை........!

இனங்களின் கைளில்
ஏந்திக் கொள்வோம்
நம் நாட்டு
சமாதானக் கொடியினை

விலங்குகளை
கழற்றி வைப்போம் - அதிலே
இனவெறி பிடித்தோரை
பூட்டி வைப்போம்

காலப் பெருநதியை
நம்
கரங்களால்
இணைத்து வைப்போம்....

## மறக்க முடியுமா?

என் நெஞ்சில் எழுந்த நினைவுகளை
மறக்க முடியுமா?
பட்டாம் பூச்சியைப் போல் பறந்து சென்ற
நாட்களையும் நிமிடங்களையும்
பச்சை வர்ணங்களாய் சூழ்ந்த என்
பாடசாலை நாட்களையும்
மறக்க முடியுமா?

காலங்கள் நகர்ந்து சென்றாலும் - என்
தாயின் அரவணைப்பையும் அன்பையும் - என்
ஆசானின் அறிவுரையையும்
நண்பர்களின் அன்பையும்
மறக்க முடியுமா?

இதுவே என்னைத் தினமும் வந்து
தாலாட்டும்
நீங்கா ஓவியங்கள்.

**கி. கஜேந்தினி**
*13 B*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் தமிழ்ப் பணி

கி. கயந்தினி
13 B

பேராசிரியர் கணபதிப்பிள்ளை வடமராட்சிப் பிரதேசத்தில் பருத்தித்துறை என்னும் இடத்தில் 1903 ஆண்டில் பிறந்தார். வடமராட்சியில் வளர்ந்து வந்த மரபு வழி சார்ந்த புலமைத்துவ மரபு இவரது கல்விக்கு அடிப்படையாக இருந்தது. முத்துக்குமாரசாமி குருக்களிடம் வடமொழியையும் . தமிழ் மொழியையும் இளமையில் கற்றுப் பின்னர் இலங்கைப் பல்கலைக் கழகக் கல்லூரியில் கலைமானிப்பட்டத்தினை முதலாவது பிரிவில் பெற்றுக் கொண்டார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் விபுலானந்த அடிகளாரிடமும் சோழவந்தான் கந்தசாமியிடமும் தமிழ் மொழியை முறைப்படி கற்று வித்துவான் பட்டத்தினைப் பெற்றுக் கொண்டார். பின்னர் லண்டன் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் ரேணரின் வழிகாட்டலில் இடைக்காலத் தமிழ்க் கல்வெட்டுகளின் மொழி நடைபற்றி ஆராய்ந்து தனது கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளராக, தமிழ்த்துறைத் தலைவராக, தமிழ் பேராசிரியராக, கீழ்த்தேய மொழிபீடத்தலைவராக, சில வேளைகளில் பல்கலைக்கழகத்தில் பதில் துணை வேந்தராகவும் பணியாற்றி இருக்கின்றார்.

தமிழ், மலையாளம், சமஸ்கிருதம், பாளி, இலத்தீன் போன்ற பல மொழிகளிலும் புலமை பெற்றிருந்ததனால் இவருடைய நாட்டம் மொழியியல்த் துறையை நாடியது. சாசனத்தமிழை நன்கு ஆராய்ந்து முதன் முதலாக ஒலி வேறுபாடு தொடர்பான கருத்துக்களை வெளிக் கொணர்ந்தவர் இவரே யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்கிற்குப் இடையேயுள்ள வேறுபாட்டினை விளக்கும் வகையில் அவர் எழுதிய ஊருக்கொரு பேச்சு என்ற கட்டுரை பிரசித்தமானது. இவற்றுக்கு மேலாக மொழியில்த்துறையில் பிரசித்தி பெற்று விளங்கும் பேராசிரியர் அ. சண்முகதாஸ் பேராசிரியர் M.A நுஃமான் போன்ற அறிஞர்களை உருவாக்கி வைத்தவரும் இவரே ஆவார்.

ஈழத்தமிழர் பண்பாட்டினை நன்கு உணர்ந்து அவர் எழுதிய கட்டுரைகள் சிலவற்றினை தாங்கி ஈழத்து வாழ்வும் வளமும் என்ற நூல் வெளிவந்துள்ளது. இந்நூலில் யாழ்ப்பாணத்துக் கோயில்களில் உள்ள கைலாய வாகனம், கேடகம், சப்பரம் ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர் என்பன பற்றி விரிவாக ஆராயப் பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தவரின் உணவுப்பழக்கம் நம்பிக்கைகள் கொண்டாட்டங்கள் விழாக்கள் பற்றி எழுதப்பட்டுள்ளன. பிள்ளைப்பேறு நடைபெற்றால் யாழ்ப்பாணத்தவர் பின்பற்றும் நடைமுறைகளும் விரிவாக கூறப் பட்டுள்ளன.

அத்துடன் இலங்கை பல்கலைக் கழகத்தில் தமிழை சிறப்பு பாடமாக பயில்கின்றவர்களுக்கு கல்வெட்டியல் கட்டாய பாடமாக்கப்பட்டு அப் பாடத்தை தானே படிப்பித்து வந்தவர் உலகின் மிகச் சிறந்த கல்வெட்டாளராய் வாளர்களான பேராசிரியர் இந்திர பாலா, பேராசிரியர் வேலுப்பிள்ளை ஆகியவர்கள் இவருடைய மாண வர்களே. ஈழத்து கல்வெட்டு சிலவற்றை வாசித்து அவற்றில் மொழியியல் வரலாற்றின் சிறப்பியல் தொடர்பாக பல்கலைக்கழக ஆய்விலும் கட்டுரை எழுதியுள்ளார்.

கவிதை இலக்கியம் படைக்கும் வகையில் பேராசிரியராக பணி யாற்றியவர்கள் இருவரே அதில் ஒருவர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை ஆவார். “தூவுதும் மலரே” என்ற அவருடைய கவிதைத் தொகுதியில் இடம்பெறும் சீதனக் கதை யாழ்ப்பாணத்துச் சமகால சமூகப் பிரச்சினைகளில் சீதனக் கொடுமையை எடுத்து உரைக்கிறது. ஆற்றுப்படை என்னும் பழைய இலக்கிய வடிவத்தைக் கையாண்டு யாழ்ப்பாண மண்வாசனை கமழும் படி காதலி ஆற்றுப்படை எனும் நூலை எழுதினார். இந்த நூலின் வடமராட்சிப் பிரதேச சமூக பண்பாட்டுக் கூறுகள் தெளிவாக ஆவணப்படுத்தப் பட்டுள்ளன.

புனைகதை துறையில் பேராசிரியருக்கு இருந்த ஈடுபாட்டினை விளக்கிக் காட்டுவதற்கு இவர் எழுதிய பூஞ்சோலை, வாழ்க்கையில் நிரமகளீர் என்ற நூல்களும் விளங்குகின்றன. பேராசிரியரின் கற்பனை வளம் தன் நாட்டு உணர்வு, கலை உணர்வு ஆகியவற்றை மண்வாசனை கமழ எழுதியிருக்கிறார். இவர் தமிழ்ப்பணிகளில் மிகச் சிறப்பான பணி நாடகதமிழுக்கு ஆற்றிய பணியாகும். பேராசிரியர் நாடகத்துறைக்கு வருவதற்கு முன்னர் புராண இதிகாசக் கதைகளைக் கொண்ட இசை நாடக மரபே கொண்டு வரப்பட்டது. உரைநடையில் எழுதப்பட்ட நாடகங்களே மொழி நடை செந்தமிழ் மொழிநடையாக காணப்பட்டது. இதை மாற்றியமைத்ததே பேராசிரியரின் துரித வளர்ச்சிப் போக்காகும். இவர் எழுதிய இரு நாடகம், பா நாடகம், சங்கிலி நாடகம், மாணிக்க மாலை என்பன நூல் வடிவில் வெளிவந்துள்ளன.

நாடகம் என்பது உலக இயல்பை உள்ளது உள்ளபடி காட்டுவது ஆகவே வீட்டிலும் வீதியிலும் பேசுவது போலவே அரங்கில் ஆடுவோர் பேசவேண்டும். யாழ்ப்பாணத்து பேச்சுவழக்கினை இயல்பறிந்து நாடகத்தில் பயன்படுத்திமையே இவரது சிறந்த பணியாகும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் நலன் பேணுவோம்

சௌ. கேமதட்சணி, தரம் -13 B

"இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்" என்பது அறிஞர் கூறும் அற்புதவாக்கு. ஆம் அந்த வகையிலே இன்றைய உலகில் சிறுவர்கள் பாதுகாக்கப்படவேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் உள்ளனர். சிறுவர்களின் நலன் பேணப்பட வேண்டிய நிர்ப்பந்தநிலை தற்போது உருவாகியுள்ளது. அவர்களது உரிமைகள் மறுக்கப்படுகின்றன. ஆகையால் இன்றைய உலகில் சிறுவர்களின் நலனுக்காகவும் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் அமைப்புக்கள் பல தோன்றியுள்ளதுடன் உலகளாகவிய ரீதியில் சிறுவர்தினம் ஒக்டோபர் முதலாம் திகதி கொண்டாடப்பட்டுவருகிறது. அதுமட்டுமன்றி சிறுவர் உரிமைகள் பற்றிய உடன்படிக்கைகளும் கைச்சாத்திடப்பட்டுவருகின்றன.

இத்தகைய நிலைகளுக்கெல்லாம் காரணம் என்ன என்பதை சற்றேசிந்தித்துப்பார்த்து இவ்விடத்தில் தனிநபர்களாலும் சிறுவர்கள் கொடூரமான அடக்குமுறைகளுக்கும் சமூகவன்முறைச் செயல்களுக்கும் உட்படுத்தப் படுகின்றனர். இவற்றின் மூலம் சிறுவர்களின் கல்வி எதிர்கால வளமான வாழ்வு என்பன கேள்விக்குறியாகின்றது.

இன்றைய சமூகத்தில் கல்லூரிக்குச் செல்லும் வயதுடைய எத்தனையோ சிறுவர்கள் கல்லுடைக்க செல்கின்றார்கள். குடும்பத்தவர்களால் ஆதரிக்கப்பட வேண்டிய இளம் பிஞ்சுகள் அநாதரவாக்கப்படுகின்றார்கள். பல்வேறு காரணங்களாலும் சந்தர்ப்ப சூழ்நிலைகளாலும் குடும்பத்தினரைப் பிரிந்தும் குடும்பத்தினரால் பிரிக்கப்பட்டும் வாழ்கின்றார்கள். இவ்வாறான சம்பவங்களினால் ஏற்படுகின்ற அனைத்து விளைவுகளும் கொடூரங்களும் சிறுவர்களையே சாருகின்றன என்றால் அதனை யாரும் மறுப்பதிற்கில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுமட்டுமா? வேலைக்கு அமர்த்தப்படும் சிறுவர்கள் வேலை செய்யும் இடங்களில் எஜமானர்களின் கொடூரமான அடக்குமுறைக்கு ஆளாகின்றனர். குறிப்பிட்டுக் கூறினால் கடினமான வேலைகளை செய்தும் அதற்கேற்ப ஊதியம் கிடைக்காமல் அல்லலுறுகின்றனர். வேலைத்தளங்களில் அவர்களின் பேச்சுச் சுதந்திரம் தடைப்படுவதுடன் முதலாளிகளின் கைப்பொம்மையாக வாழும் ஒரு துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.

இவ்வாறு மட்டும் சிறுவர்கள் இவ்வுலகில் துன்புறுத்தப்படவில்லை. இவற்றிலும் கொடூரமாக சின்னஞ்சிறார்கள் பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்களுக்கும் வன்முறைகளுக்கும் உள்ளாகின்றார். சமூகத்திலே தாமும் மனிதர்கள் என்ற போர்வைக்குள் நடமாடும் விஷமிகளால் சிறுவர்கள் இவ்வாறாக பாதிக்கப்படுகின்றனர்.

அதுமட்டுமன்றி சமூக விரோத செல்களான போதைவஸ்துக்கு அடிமையாதல், புகைத்தல் போன்ற செயற்பாடுகளிற்கு அடிமையாகின்றனர். தவறான வளர்ப்பு முறைகளாலும் ஒழுங்கற்ற நெறிப்படுத்தலினாலும் சிறுவர்கள் இந்நிலைக்கு உட்படுத்தப்பட்டு தம் ஒளிமயமான எதிர்காலத்தை இருளாக்குகின்றனர்.

இதுமட்டுமல்லாது சொல்லிலடங்காத பல கொடூரங்கள் புதிய புதிய வடிவங்களில் சிறுவர்களினைப் பாதிக்கிறது. இத்தகைய சிறுவர்களுக்கெதிரான அடக்கு முறைகளிலிருந்து அவர்களை பாதுகாத்து நெறிப்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் சபை சிறுவர் உரிமை தொடர்பான ஒப்பந்தம் ஒன்றை **1989**இல் ஏற்படுத்தியது. அங்கத்துவ நாடுகள் ஒப்புக்கொண்டதன் பின் **1991**இல் இலங்கையும் அதில் கைச்சாத்திட்டது. இவ்வுடன்படிக்கையிலே சிறுவர்கள் கருத்துவெளியிடும் உரிமை, விரும்பிய மத சுதந்திரம், சித்திரவதைகளுக்கு ஆளாகமலிருத்தல் போன்ற பல விடயங்கள் காணப்படுகிறது. இவ்வுடன்படிக்கையின் படி 18 வயதிற்குட்பட்ட அனைவரும் சிறுவர்கள் என்பது கருத்தாக காணப்படுகின்றது.

இவை தவிரவும் சிறுவர் உரிமையை பாதுகாக்க சிறுவர் உரிமைகள் ஆணைக்குழு யுனிசெப், நன்னடத்தை ஆணைக்குழு போன்றன தோற்றம் பெற்று சிறுவர்கள் நலனில் அக்கறைகொண்டு செயற்படுகின்றன.

ஆகையால் இவற்றைக் கருத்தில் கொண்டு பெற்றோர்கள், வளர்ந்தோர்கள், சமூகத்தவர்கள் அனைவரும் சிறுவர்களைப் பாதுகாத்து அவர்களது நலனில் அக்கறை கொள்ளுவதன் மூலம் சிறுவர்களின் எதிர்காலத்தை வளம்படுத்துவதுடன் ஆரோக்கியமான வளமான ஒரு எதிர்கால உலகினை சுபீட்சமானதாக உருவாக்கலாம் என்பது திண்ணம். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதமே நீ எங்கே...!

1. அழிந்து போகும் மனித நேயத்தை
மீண்டெடுக்கும் உயிராயுதம் பேனை!

2. மனித உரிமையை வென்றெடுக்க அனுப்பப்பட்ட
இறைவனது தூதர்களே எழுத்தாளர்கள்!

3. மனிதன் இறந்தாலும் உயிர்வாழ்வது
மனித உரிமைதான்

4. குரல் கொடுப்போம் வென்றெடுப்போம்
என்றும் மனித உரிமைகளையும் நீ நேசிப்பாய்

5. எங்கள் வாழ்வுரிமைகள் எங்களுக்காக
எங்கள் கையில் மட்டும்

6. உண்மைக்கு உருவம் கொடுப்போம்
மனித உரிமைக்காய் குரல் கொடுப்போம்.

7. நேசித்துப்பார்!
உலகம் உன்னுடையதாகும்
மனித உரிமைகள் உயர்வடையும்

8. வானத்தில் பறக்க சிறகுகள் வேண்டும்
பூமியில் வாழ உரிமைகள் வேண்டும்.

9. மனித நேயத்தைக் காக்கும் மனித
வரிகள் என்றும் எம் கையில்

10. மனிதனின் உரிமையை வென்றெடுக்கும் சாதனம்
மனித உரிமைகளே!

ந. துஜிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுவுக்கு அடிமை

மதுவின் அடிமையாய் வாழ்ந்திடும் மானிடா
வாழ்வினை அழித்திடும் போதைதான் ஏனடா
உன் மதுவினால் அழிந்திடும் குடும்பத்தைப் பாரடா
வசந்தமான உன் வாழ்வு புயலாக மாறுதடா

கோலமயில் தானவளின் அழகின் வதனம்
உன்மதுவினால் அழிந்ததே சிந்தித்துப் பாரடா
உலை ஏற்ற முடியாமல் தவிப்பதை பாரடா
போராடும் உன் அவளின் ஏக்கத்தைத் தீரடா

பாலுக்கு அழுதிடும் பாலனைப் பாரடா
பசி தீர்க்க முடியாத தாயவளைப் பாரடா
பாவையவள் கண்களில் நீர்த்துளிகள் ஏனடா
விடியலுக்காய் வெதுப்பிடும் பூவையவள் பாரடா

வாடிடும் பிஞ்சின் முகத்தைப் பாரடா
உன் மதுவினால் ஏங்கிடும் குடும்பம் தான் வீணடா
மதுவுடன் போராடும் மானிடா கேளடா
வாழ்வினில் இனியேனும் வசந்தத்தைத் தேடடா?

*சி. கீர்த்திகா*
**13 Com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரும்பிற்கு அத்திவாரம்

புதுவருடம் பிறக்கிறது
புதுநினைவு பூக்கிறது
தூரத்தே ஒரு ஒளி
துல்லியமாய்த் தெரிகிறது
நாளைய பொழுது
நன்றாய் விடிய
தூரத்தே தெரிவது தான்
துயர்களையும் சுடரோ!
இல்லை!

பழம் பெருமை பேசிய
பாழான எம்மினத்தை
சங்காரம் செய்ய
உதித்த ...........
வால்நட்சத்திரமோ!
வீணான கற்பனைகள்
விடிவிற்கே தடைபோடும்
தூரத்தே தெரிவது
ஒளியல்ல..........

சிந்திய குருதியில்
தீட்டிய காவியங்கள்
கல்லறைகள்
தியாகத்தின் படிக்கற்கள்
ஆம்!
அத்தனையும் நாளை
மலரும் அரும்புக்கு
அத்திவாரம்!

*செ. நிருஜா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைவஸ்துகளற்ற ஓர் உலகம் நோக்கி....

பெ. மொறின் நர்மதா
13 com

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது கூன் குருடு செவிடு பேடு நீங்கிப் பெற்று பிறத்தல் அரிது" இவ்வாறான மனித வாழ்க்கையின் அடிப்படை என்ன? அன்பும் மகிழ்ச்சியுமே அன்பை பலரிடமிருந்தும் பெறுகிறான் அவ் அன்பின் இன்ப ஊற்றே மகிழ்ச்சி ஆனால் அது அறிவுடைய மனிதன் அம் மகிழ்வைத் தவறான வழியில் பெற முனைகின்றான். அதற்கு பணத்தின் மூலம் பெறலாம் என நினைக்கின்றான். அதன் ஒரு வழியாகவே அவன் ஒரு நாசகார வட்டத்தினுள் சிக்குகின்றான். இறுதியின் அத்தியாயத்தினுள் இறுதி கணங்களுக்கு தன்முட்டாள் தனத்திற்குக் கொண்டு சென்று விடுகிறான். இவ்வாறான மனிதனை நாசகார வட்டத்துள் மிக இலகுவாகச் சிக்கவைப்பதில் முன்னின்று உழைக்கவல்லது. இளம் மட்டத்தினர் முதல் வயது வந்தவர் வரை அனைவரும் தன் கொடூரப்பிடிக்குள் சிக்க வைத்துக் கொள்ளும் டிறக்ஸ் என ஆங்கிலேயரால் அழைக்கப்படும் போதைப்பொருள். இது சமகால மானிட சமூகம் எதிர் கொண்டிருக்கும் பிரச்சனைகளுள் எதிர் கணியப்பெறுமானங்களை உள்ளடக்கியதொரு தீவிரப் பிரச்சனையாகவும் இனம் காணப்பட்டுள்ளது. வளம் நிறைந்த நாடுகளில் மட்டுமல்ல குறை விருத்தி நாடுகளிலும் கூட இது ஓர் தனியாள் சம்பந்தப்பட்ட விவகாரமாக வேரூன்றி நாளடைவில் சமூகத்திற்குரிய பிரச்சனையாகக் கிளை பரப்பி பரிணாமம் பெற்று விடுகிறது. நாட்டுச் சட்டங்களுக்கு அரசாங்கத்தினருக்கும் சவாலாக மாறிவிடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனி மனித வேட்கையுடன் தொடர்புடைய போதைப்பொருளானது சுகமான வாழ்விற்கும் இயல்பான போக்கிற்கும் சவாலாக அமைந்துள்ளது. இந்த வகையில் போதைப்பொருள் என்றால் என்ன? என நோக்கினால் தன்னிலையை மறக்கடிக்கக் கூடியதும் மெதுவாக உயிர் கொல்லும் ஒரு நாசகாரப் பொருள். அது பல வடிவங்களை எடுத்துப் பல கிளைகள் பரப்பி மனிதனை அழித்துவிடுகிறது. போதைப் பொருளின் அடிப்படை வடிவங்கள் சிகரெட் போன்றவற்றின் புகை மூலம் உள்ளெடுக்கப்படுபவை, மதுபானப்பாவனை, ஊசிமூலம் குருதியில் சேர்க்கப்படுபவை.

இன்றைய காலகட்டத்தில் எவரை நாம் உளநலம் உடையவர் என்று கூறலாம் சுகதேகியாகவும் தனது அன்றாட கடமைகளையும் பணிகளையும் சரிவரச் செய்யக் கூடியவராகவும் இருப்பவரே உள நலம் உடையவராகக் கருதப்படுவர்.

உளப் பிரச்சனையுடன் ஒருவரில் மற்றவர்கள் கவனிக்கக் கூடிய நடத்தை மாற்றம் ஏற்படும். வேறு பல குழப்பங்களும் ஏற்படுகின்றன; நித்திரைகுழப்பம், ஓய்வெடுத்தலில் பிரச்சனை, பசியின்மை, குடும்பத்தினரோடு முரண்படுதல், மற்றவர்களுடன் உறவைச் சரியாகப் பேணமுடியாமை போன்றவற்றைக் குறிப்பிடலாம். மனிதனை சஞ்சலப்படுத்தும் காரணிகளையும் அவன் முகம் கொடுக்க வேண்டிய சில பொதுவான பிரச்சனைகளையும் அவன் முகம் கொடுக்க வேண்டிய சில பொதுவான பிரச்சனைகளையும் உளப் பிரச்சனைக்கான காரணிகள் எனக்கூறலாம். அவற்றில் சில காரணிகள் வருமாறு வேலையில் ஏற்படும். நெருக்கீடுகள், குடும்பத்தில் ஏற்படும் இழப்பு, குடும்பத்தினருடன் அல்லது புரிந்துணர்வுகள் முரண்பாடுக வறுமை, ஏமாற்றம், மது போதைவஸ்து துஸ்பிரயோகம் அவற்றிக்கு அடிமையாதல், திருமணப் பிரச்சனைகள் தொடர்ந்த இடப்பெயர்வு, காயம், பாலியல் வன்முறை சித்திரவதை போன்ற உளப்பிரச்சனைகளுக்கு உண்டாகும். மனிதன் போதையை நாடுவதற்கு மற்றும் காரணகர்த்தாவாகத் திகழ்வது அவனது ஊனம் அல்லது அவனது இயலாமை ஆகலாம்.

தீவிரமான உளப் பிரச்சனைகளுக்கும் உடல் ரீதியான பிரச்சனைகள் இருக்கிற போதும் அவை உளத்தையே அதிகம் பாதிக்கின்றன இவ் உளரீதியான பாதிப்புகளின் வெளிப்பாடாகப் பின்வரும் அறிகுறிகள் வெளிக்காட்டப் படுகின்றன. உளப்பாதிப்பு உற்றமனிதனில் தனது ஏமாற்றங்கள் இலகுவாகத் தாங்கிக் கொள்ள முடியமால் அநாவசிய கோபங்கள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு தேவையற்ற விடயங்களுக்கு அதிகம் பயப்படும் தன்மை அவனில் மேலோங்கிக் காணப்படுகிறது.

தனக்கு ஏற்படும் சிறுகவலை கூட அவனால் தாங்கிக் கொள்ளமுடியாமல் போய்விடுகிறது. இவனால் ஒரு திட்டத்திற்கான முடிவை இவனால் இலகுவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்கொள்ள முடியாமல் போய்விடும். இதனால் அவனில் பல குழப்பங்களை தோற்றிவிக்கப்படுகிறது இவனது நினைவாற்றல் திறனானது பரந்து காணப்படாமல் குறிக்கப்பட்ட ஒரு விடயத்தைச் சுற்றியே காணப்படும்.

ஒரு மனிதன் பஞ்சமாபாதங்களில் கொலை, கொள்ளை, புலால் உண்ணுதல், பொய்சொல்லல் முதலியவற்றைச் செய்தாலும் கூட அவன் கூடுதலாக அந்த தவறுகளுடன் நிறுத்தி விடக்கூடும் மாறாக போதைப்பொருள் பாவனையானது தனிமனித வேட்கையுடன் தொடர்புடையதாக அமைந்தாலும் கூட இது நாசகார வட்டத்தினுள் அவனைச் சிக்கி வைத்திருக்கிறது. எவ்வாறு எனின் ஒரு மனிதன் போதையின் உதவியை நாடும் போது அவனது மனநிலை குழப்பப்படுகிறது.

இப்படியான போதையில் இருந்து தவிர்ப்பதற்கு பல வழிகள் உண்டு. அவையாவன சமூகத்தினுல்ளேயே இருந்து எழுகின்றன. மது, போதைப்பொருட்களுக்கான தேவையின் முக்கியத்தைத் தடுப்பதற்கு ஏதுவான முறையில் தம்மை தாமே ஒழுங்கமைத்துக்கொள்ளல். போதைப்பொருள் விநியோகத்தைத் தடுத்தல் இன்னும் சட்டரீதியான போதைவஸ்துகளை தடைசெய்ய சர்வதேச ரீதியில் நடவடிக்கை எடுக்கவேண்டும். சர்வதேச நாடுகளின் அரசாங்கம் போதைவஸ்துகளை உற்பத்தி செய்தல், உற்பத்தி செய்து சந்தைக்கு கொண்டு வருதல். சட்டவிரோத வியாபாரம் சட்ட பூர்வ பாவனை ஆகியவற்றைத் தடுக்கவேண்டும். மற்றும் சினிமா, நாடகங்கள், கட்டுரை, கவிதை, கதைகள் மூலம் போதைவஸ்து தீங்குகளை விபரித்தல் போதைவஸ்துக்கு எதிரான கருத்துக்களை எடுத்துக்கூறாது சாதக பாதக விளைவுகளை சபையோரையும் உள்ளிட்ட தொரு கலந்துரையாடலாக நடத்துகின்ற போது பொதுக்கருத்துக்களை எட்டுவதற்கான வாய்ப்புக்களை அதிகரிக்கும். இவ்வறாக எட்டப்படும் அறிவின் வழியாக கிடைந்தவை என்கிற நிலைப்பாட்டில் இருந்து செயல் ரீதியாக பெறப்பட்ட நிலைப்பாட்டினை என்கின்ற போது அவற்றில் பலாபலன்கள் பல மடங்காகும்.

"முதலில் ஒரு மனிதன் மதுவை குடிக்கின்றான் அதன் பின் மது இன்னும் கொஞ்சம் மதுவைக் குடிக்கிறது. கடைசியில் அதுவே மனிதனை விழுங்கிவிடுகிறது" என்கின்றது சீன பழமொழி மனிதன் ஆசைகளை ஆளவேண்டுமே தவிர ஆசைகளை ஒரு போதும் மனிதன் ஆளக்கூடாது இவ்வாறாக ஒரு மனிதன் போதை விடுப்பை அவன் நினைத்தால் ஒழிய அவனைக் கட்டுப்படுத்துவது குடும்பத்தினரிடம் அரவணைப்பு ஒரு மனிதனை போதை பாவனையிலிருந்து மீள உதவலாம் அதற்குக் குடும்பத்தினர் தளராது முயற்ச்சிக்கவேண்டும். ஆகவே நாம் போதையற்ற உலகை நோக்கி வீறுநடைபோடுவதும் அத்துடன் போதையற்ற வாழ்வை நோக்கிப் பெருமுயற்சியுடன் உழைப்போம்.

■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவரும் வாசிப்புத்திறனும்

ந. துஜிகா , 13 B

"விலங்கொடு மக்க ளகினயர் இலங்கு நூல்
கற்றாரோடு ஏனையவர்"

என்றார் நாலடியார். விழுப்பொருளாகிய கல்வியறிவுடையாரே மனிதன் என்றும் அவ் அறிவு இல்லாதவர் விலங்குகள் என்றும் விளக்குகிறார். மனிதனை மனிதனாக மாற்றும் கல்வியைப் பெறுவதற்கு காட்சி, அனுபவம், கேள்வி முதலிய பல வழிகள் உள்ளனவேனும் அவற்றில் தலைசிறந்து விளங்குவன நூல்கள் ஆகும். அந்நூல்களையும் பொருளுணர்ந்து வாசிக்கப்படுவதாலே பயன் உடையனவாக விளங்குகின்றன. எனவே வாசிக்கும் பழக்கம் கல்வியின் அடித்தளமாக அமைகின்றது. "இளமையிற்கல்வி சிலையில் எழுத்து" என்பது ஆன்றோர் வாக்கு இது ஒரு உளவியல் சார்ந்த முதுமொழியும் ஆகும். மன விசாரங்களும் மன விகாரங்களுமற்ற இளமைப்பருவத்தில் கற்கும் கல்வி சிந்தாது, சிதையாது, சிதறாது மனதிலே நின்றாகப் பதியும். எனவே தான் கல்விக்கு அடித்தளமாய் அமையும் வாசிப்புப் பழக்கம் இளமையிலே காணப்படவேண்டும். இதனாலே புதிய கல்விக் கொள்கையில் வாசிப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

மாணவர் மொழியாற்றலில் முன்னேற்றங்காண்பதற்கு முதனிலையாகவும் வாசிப்பு அமைகின்றது. நூல்களை பிழையற வாசித்தல், கருத்தை விளங்கிக் கொள்ளல், விளங்கிய கருத்தை வெளிப்படுத்தல் ஆகிய மூன்று அம்சங்களும் மொழித்தேர்ச்சியில் அடங்குவன ஆகும். மாணவர்கள் சிலர் பிழையின்றி வாசிப்பார்கள் ஆனால் கருத்தை விளங்கிக் கொள்ளமாட்டார்கள். அவர்கள் சுவையறியா நாக்கினைப் போன்றவர்கள். சிலர் வாசித்து விளங்கிக் கொள்வர் ஆனால் விளங்கிக் கொண்டதை வெளிப்படுத்த அறியார். எனவே வாசித்து விளங்கப்படுத்தும் ஆற்றலே மெய்யான மொழியாற்றல் ஆகும். முறையான மொழியாற்றல் கைவரப் பெற்ற மாணவனின் பேச்சில் தெளிவும் கருத்தாளமும் காணப்படும். உள்ளங்கை நெல்லிக்கனி போல எந்தக் கருத்தையும் பிறர் விளங்கிக் கொள்ளுமாறு உரைப்பான். அவனது எழுத்து நடையும் எளிமையும் இனிமையும் தெளிவும் கருத்தாளமும் உடையதாய்க் காணப்படும். வாசிப்புப் பழக்கம் உடைய ஒரு மாணவனின் எழுத்தாற்றலும் வாசிப்புப் பழக்கம் அற்றவனின் எழுத்தாற்றலும் வேறுபட்டு காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மையான வாசிப்புத்திறன் பெறாத மாணவன் பள்ளியிற் பயிலும் பாடங்களிலும் சிறப்புநிலை அடையாதவனாக காணப்படுகிறான். தனது பூரண ஆற்றலை வெளிப்படுத்த முடியாதவனாகின்றான். எனவே பள்ளியில் பயிலும் பாடங்களிலும் மாணவன் திறமைகாட்டுவதற்கு வாசிப்புப்பழக்கம் இன்றியமையாததாகின்றது. பாடசாலையில் பயிலும் பாடங்களோடு மாத்திரம் மாணவனின் கல்வி முற்றுப் பொறுவதில்லை பாடசாலைக் கல்வி ஒரு சிறு பகுதியே ஆகும். அக்கல்வியால் மாணவனின் அறிவு வளம் பெருகிவிடாது. எனவே மாணவன் பாடநூல்களைக் கற்பதோடு அமையாது பல நல்ல நூல்களைக் கற்றல் வேண்டும். “கண்டது கற்கப்பண்டிதனாவான்” என்பது பழமொழி. எனவே நல்லனவென கண்டவற்றைப் படிக்க வேண்டும்.

வாசிப்புத் திறனிலே தேர்ச்சி பெற்ற மாணவனின் உள்ளம் தணியாத பசி கொண்டதாய் இருக்கும். எத்தனை எத்தனை நூல்களை வாசித்தாலும் அவனது பசி அடங்காது. அறிவு விருத்தியாக்கப்படும். மாணவர்கள் தாமாகவே நூல்களைத் தேடிவாசிக்க வேண்டும். தம் பாட அளவில் நிற்காது பரந்துபட்டு வாசிக்கும் போது அவர்களின் ஆளுமை விருத்தியாக்கப்படும் பல துறைசார்ந்த அறிவும் ஏற்படும். மாணவர்கள் நமது வாசிப்புப் பழக்கத்தை நூல் நிலையங்களில் வளர்த்துக்கொள்ளலாம். நூல் நிலையங்கள் ஒரு அறிவுப்பெட்டகம் அவற்றை முழுமையாக பயன்படுத்தினால் அவர்களுக்குப் பரீட்சைக்கு பலவாறு உதவும். அது மாத்திரமன்றி வாழ்க்கைக்கும் உதவும். எனவே தான் “வாசிப்பதால் ஒரு மனிதன் பூரணம் அடைகின்றான்” என்கின்றனர்.

வாசிப்பதால் அறிவுடைய மாணவனாவான் அறிவுமாத்திரமன்றி உள்ளத்தாலும் உயர்ந்தவனாவான். வாழ்வினையும் வாழ்வின் விழுமியங்களையும் புலப்படுத்தும் இலக்கியங்கள், கட்டுரைகள், கவிதைகள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் முதலியவற்றை படிப்பதால் எழுத்தாற்றல் வளர்கின்றது. மேலும் வாழ்வில் கண்டறியாத புதிய கதை மாந்தர்களோடு பழகுகிறான். அவர்களின் குணாதிசங்களை உணருகின்றான். வாழ்வின் பல கோணங்களையும் காணுகின்றான். பல புதிய அனுபவங்களைப் பெறுகின்றான். நல்லன எவை தீயன எவை எனப் பகுத்துணரும் பண்புபெறுகிறான். இதனால் அவனது உள்ளம் விரிவடைகிறது பண்படுகிறது. எதிர்கால வாழ்வுக்குத் தன்னை ஆயத்தஞ் செய்துகொள்ளும் உன்னத நிலை உண்டாகிறது.

மாணவர்களே எதிர்காலச் சிற்பிகள் எதிர்காலத் தலைவர்களும் அவர்கள் தாம். எதிர்கால குடிமக்களும் அவர்களே. அவர்கள் அறிவுச்செல்வர்களாய் உள்ளத்தால் உயர்ந்தவர்களாய் உருவாக வேண்டுமானால் வாசிப்புத்திறனை விருத்தி செய்ய வேண்டும். எனவே தான் அவன் பூரண அறிவு உடையவனாக காணப்படுவான். ஒவ்வொரு மாணவரும் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தி தம்மை அறிவு செல்வர்களாக மாற்றவேண்டும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமைத் தமிழன் பாரதி

தலைநிமிர முடியாமல்
தடுமாறிய தேசத்திற்கு
தலை கவிழ்வது தவறென்று
கற்றுக் கொடுத்தான் பாரதி!

தத்தித்தாவும் தமிழிற்குத்
தவமாய்க் கிடைத்த
தலைப்பாகை பாரதி!

எட்டையபுரத்தின்
எடுப்பாய் இருக்காமல்
சுதந்திர தேசத்தின்
சூரியன் பாரதி.

தமிழன் போட்ட நடையெல்லாம்
புதுநடை!
தமிழ்த் தாய்க்கு அணிவித்தான்
புத்தாடை!

ஜாதிகளே நமக்கு இங்கு
அநீதிகள்!
ஜாதிகள் வேண்டாம் என்றான்
பாரதி!

தலை நிமிர்ந்த பெண்கள் நாம்
தலைக் கனமாய் இல்லாமல்
தலையாலே வணங்கிடுவோம்
தலைமகனாம் பாரதியை!

துு. அனுஷாந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதுகாப்பு

கட்சிவிட்டு கட்சி
தாவும் அரசியல் வாதிக்கும்
பாதுகாப்பு!
கல்வி கற்கும்
மாணவர்க்கும்
பாதுகாப்பு!
கற்பிக்கும்
ஆசிரியருக்கும்
பாதுகாப்பு!
பெற்றெடுத்த
தாய்க்கும்
பாதுகாப்பு!
கல்விக்குப் பாதுகாப்பு!
காசுக்குப் பாதுகாப்பு!
கடமைக்குப் பாதுகாப்பு!
இறுதியில் முடிவு...?

**லோ. ஷர்மினி**

## அன்பின் கல்லூரியே

கரவை மண் பெற்றெடுத்த நம்
கல்லூரித் தாயே
உன் கருவிலே தோன்றிய
காவியப் புதல்வர்கள் நாம்
காலங்கள் பல எம்மை
கடந்தே செல்கின்றன
உன் காவியமோ
கடல் கடந்தும் வாழ்கின்றது
புதுமைகள் பல படைத்து
புகழ் பூத்த கல்லூரியாய்
உண்மைக்கு முதலிடம் கொடுத்து
பல உத்தமர்களை ஆக்கினாய்
வடமராட்சியில் ஓர் வசந்தம் நீ
வருபவர்களை அரவணைப்பாய்
கலைகள் பல கற்பித்து
கருணையுள்ள மாணவர்களை ஆக்கினாய் நீ
வாழ்க கல்லூரியே
வளர்க உன் பணி என்றும்.

**கை. நிதர்சினி , 13 com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# தொடரும் சோகத்தில் பெண்ணின் நினைவுகள்

**லோ. ஷர்மினி , 12 B**

அந்திசாயும் நேரத்தில் சூரியன் விடைபெற்று செல்லும் பொழுதில் தளர்ந்த நடையோடு தனது சேலைதலைப்பால் வடிந்து செல்லும் வியர்வையைத் துடைத்த வண்ணம் வந்துகொண்டிருந்த பெண்ணின் மீது வீதியால் செல்லும் அனைவரினதும் பரிதாபப்பார்வைபடுகிறது. அந்த நேரத்திலே குளர்காற்று மெல்லத்தளுவிச் செல்ல தூரத்தில் இருந்து 'சோ' வென்ற இரைச்சலுடன் மழைத்துளிகள் நனைத்தன. அப்பொழுது அவள் அருகே உள்ள கடைத் தாவரத்திலே ஒதுங்கிநின்றாள். அப்பொழுது மண்ணிலே வீழ்ந்த ஒவ்வொரு மழைத்துளிகளும் அவள் கடந்தகாலத்தில் சிந்திய வியர்வை துளிகளாகவே தோன்றுகிறது. தன்னையறியாமலே தனது கடந்த காலத்திற்குள் நுழைகிறாள்....

வயல்களும் நீர்ஏரிகளும் நிறைந்த ஓர் அழகிய கிராமமே காந்திபுரம் எங்குபார்த்தாலும் மருதநிலங்களே காணப்படுகிறது. அத்தகைய செல்வச் செழிப்பு மிக்க காந்திபுர கிராமத்திலேயும் ஒரீரு ஏழைக்குடும்பங்களும் வாழத்தான் செய்கிறன. இக்கிராமத்திலே நாலு அங்கத்தவர்களை கொண்ட அச்சிறியகுடும்பத்திலே தான் இவளும் ஒரு அங்கத்தவர். மாரிமுத்து எனும் ஒரு விவசாயி. அவர் தன்னால் இயலாது தள்ளாடிய வயதிலும் தனது குடும்பத்தை நல்ல நிலைக்கு கொண்டு வரவேண்டும் என்பதற்காக அயராத உழைப்பாளி. அவனின் மனைவி கண்ணம்மா இவர்களிற்கு இரு பெண்பிள்ளைகள். மூத்தவள் வசந்தி இவள் படிப்பில் மிகவும் கெட்டித்தனம் கொண்டவள். இவளிற்கு மாலா எனும் தங்கை. இவர்கள் இருவரும் காந்திபுர கீழ்நிலைப்பள்ளியிலே பயின்றனர். மாலாவும் வசந்தியும் தந்தை தாய்படும் கஷ்டத்தினைப்பார்த்து வளர்ந்ததாலோ என்னவோ இருவரும் படிப்பில் மிகவும் கெட்டித்தனம் கொண்டவர்கள். மாரிமுத்துவிற்கு வயது போகப்போக அவனால் எவ்வேலையும் செய்ய முடியாத நிலை வந்தது. எவ்வேளையிலும் தனக்கென்று கண்ணம்மாவால் சீதனமாக தரப்பட்ட அவ் சிறிய பரப்பு தோட்டத்திலே நின்றபடி ஏதாவது வேலை செய்து கொண்டேயிருப்பான்.

காலம் செல்ல அவனால் நடக்கமுடியாத பரிதாபநிலை ஏற்பட்டது. பாரிசவாதம் ஏற்பட்டு படுக்கையாகக்கிடந்தான். இவ் வேளையில் தான் வசந்தி தனது சாதாரணதரப்பரீட்சையை முடிவையும் காத்துகொண்டிருந்தாள். காலத்தின் மாற்றத்தால் அவளிற்கு நல்லபெறுபேறு வந்த போதிலும் அவள் மேல்நிலைப்படிப்பை தொடரமுடியாது இருந்தது. கண்ணம்மாவாலும் கடினமான வேலை எதுவும் செய்யமுடியாது. அவளிற்கு நெஞ்சுவலி அடிக்கடி ஏற்படும் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் தாயையும் வேலைக்கு செல்லவிட முடியாது என நினைத்து தனது தங்கை மாலாவின் படிப்பு தன்னைப்போல வீணாக கூடாது என நினைத்து அவள் அழுது கொண்டேயிருப்பாள்.

என்ன செய்வதென்று தினம் தினம் ஏங்கியே ஏலாத கட்டத்தில் தனது படிப்பை நிறுத்திகொண்டாள். மதியப்பொழுது சமையலை முடித்து விட்டு வீட்டு திண்ணையிலே சரிந்து படுத்த வசந்தியின் காதுகளிலே பக்கத்துவீட்டு ராணிரீச்சரின் வீட்டு வானொலியில் சொன்ன செய்தி காதுகளிலே விழுந்தது. ஜோர்தானில் வீட்டுப்பணிப்பெண்கள் தேவைப்படுகிறார்கள். அவர்களிற்குரிய போக்குவரத்து செலவு எல்லாவற்றையும் அந்நாட்டு அரசு ஏற்கும் எனவும் கூறிய செய்தி அவள் மனதில் காய்ந்தமுடறிற்கு குளிர்நீரை அருந்தியதைப் போல இனிப்பாக இருந்தது.

தனது தாயிடமும் தந்தை மாரிமுத்து விடமும் அவ்விடயத்தை கூறிசம்மதம் பெற்றாள். தனது தந்தைக்கு ஏலாத காலத்தில் படிப்பு செலவிற்காக தந்தை பெற்ற கடன்களோ ஏராளம். நித்தமும் கடன்காரர் தொல்லை அவளிற்கு வருத்தத்தை மேலும் ஊட்டியது ஆனாலும் அவள் அதையெல்லாம் பொறுத்துக் கொண்டிருப்பாள். இதனால் தான் பெற்ற வருத்தத்திற்கு மருந்து கிடைத்து விட்டதாக எண்ணினாள். தனது தாய் சேர்த்து வைத்த ஒரு சொட்டுப் பணத்துடன் தங்கைக்காக தனது வாழ்வை அர்ப்பணித்து ஜோர்தான் சென்றாள்.

ஜோர்தானிலே எல்லா வீடுகளும் செல்வந்தகுடிமக்களே வாழ்கின்றனர். இவள் ஒரு வங்கிமுகாமையாளர் வீட்டிலே பணி செய்கிறாள். எஜமானியோ எதையும் இவளிற்கு அதிகமாக கொடுக்க விரும்பமாட்டாத குணமுடையவள். அவள் வசந்தியை கொண்டு வேலைவாங்குமளவிற்கு அவளிற்கு அன்பைக் கொடுப்பதில்லை. அவளிற்கு ஒரே கொடுமைகளே நேர்ந்தது. பணிப்பெண் அடிப்பதும், நெருப்பினால் சுடுவதும் நாளுக்கு நாள் அதிகரித்தே சென்றது. வசந்தியுடன் சென்ற ஒரு முஸ்லீம் பெண்ணும் இன்னொரு தமிழ்ப்பெண்ணும் எஜமானாரால் கொலைசெய்யப்பட்ட செய்தியும் அவள் துன்பப்பட்டிருந்த நேரத்திலே காதுகளில் எட்டியது. எனவே வசந்தி இனியும் கஷ்டப்படமுடியாது என எண்ணி மனித உரிமை ஆணைக்குழுவிலே முறைப்பாடுசெய்தாள். ஜோர்தானிற்கான இலங்கை தூதரகத்திலும் இதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வசந்தியும் அவளின் வீட்டிற்கு அருகே வேலை செய்த முஸ்லீம் பெண் ஆயிஷாவும் உரிய பாதுகாப்புடன் ஜோர்தான் அரசால் வழங்கப்பட்ட ஒரு தொகை பணத்துடன் நாடுதிருப்பப்பட்டனர். இலங்கை வந்ததும் மீண்டும் இங்கே ஒரு பணக்காரக் குடும்பத்தில் வேலை செய்யச் சென்றாள்.... வசந்தி மழை நிண்டிட்டுது ஏன் இன்னும் நிற்கிறாய்'? என்ற தங்கையின் குரல் கேட்டபின் அவள் 'நான் வாறன்நீபோ!' என்று கூறிவிட்டு தனது நினைவுப் பயணத்தில் இருந்து மீண்டு வீடுநோக்கி விரைவாக நடந்து சென்றாள். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "கடவுள் ஏன் கல்லானான்?"

*தேனுஜா*
*கலைப்பிரிவு*

சில்லென்று வீசிய தென்றலை தன்தளிர்க் கரங்களால் வருடிய படியே கடற்கரையோரத்தில் ஏதோ சிந்தனையில் தன் மனதை பறிகொடுத்து கிடந்தாள் கீதா. வாழ்வின் மீதான அவளின் வெறுப்பு அவளளவிற்கு யாரிற்கும் வந்திருக்கக் கூடாது தான். அவ்வளவு வெறுப்புக்கு காரணமும் இல்லாமல் இல்லை.

வசந்தகால நிலவாக; சுரிதார் அணிந்த வெண்ணிலவாய் வீதியெங்கும் சுதந்திரப் பறவை போல் அன்று சுற்றித்திரிந்தவள் தான் கீதா. அப்பா, அம்மா, ஆறு அண்ணன் மாரிற்கு ஒரே தங்கையாக அன்புச்சிறைக்குள் தன்னை புதைத்துக் கொண்டவள். தந்தையை சிறு வயதிலே யுத்தம் தன் கோரப்பசிக்கு இரையாக்கி விட்டிருந்தது. தாய் பெரிதாய் ஒன்றும் தொழில்பார்க்கவில்லை. தினம் தினம் மூன்று கால் அடுப்போடும் புகையோடும் போராடும் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவள் தான் இன்று அவளின் சோகநிலைக்கு ஆறுதல் கூற யாருமின்றி அநாதையாக தவிர்க்கிறாள். இந்த சமூகம் தான் அவளிற்கு உதவிடுமா? இல்லை உபத்திரவம் வேண்டுமானால் செய்வார்கள். இந்த கலியுகத்திலே அவள் பட்ட துன்பங்களும், துயரங்களும் வார்த்தைகளால் அளவிட முடியாது. நேரங்கள் ஒவ்வொன்றும் அநியாயமாய் கரைகிறது.

"அம்மா; உங்கள் வியர்வைத்துளி ஒவ்வொன்றிற்கும் என் இரத்தம் சிந்திக்கொண்டிருக்கிறது. உழைத்தது போதுமம்மா. அண்ணாக்கள் உழைக்கிறது காணாதோ? எனக்காக தானே இவ்வளவு கஸ்ரப்படுறியள். நான் படிச்சு உழைப்பனம்மா. நீங்கள் ஒண்டுக்கும் கவலைப்படாதேங்கோ" என்ற கீதாவை வழிமறுத்த தாய் இல்லைப்பிள்ளை உன்னை எப்படியெண்டாலும் கஸ்ரப்பட்டு படிக்க வைச்சுப் போடுவன், என்ன வழியில் என்டாலும் நான் உனக்காக என்னை தியாகம் செய்யத்தயாராய் இருக்கிறன், எனக்கும் வருத்தம் நானும் கனகாலத்திற்கில்லை பிள்ளை. ஏதோ படிச்சுப்போடம்மா" என்றாள். தாய் தன் உடல் அணுக்கள் ஒவ்வொன்றையும் தினம் தினம் தன்னை அக்கிரமிக்கும் புற்றுநோய்க் கிருமிக்கு அடிமையாக்கி வந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு ஆரம்பத்திலே கறள் படிந்த வாழ்வு கீதாவிற்கு கிடைத்தாலும் கீதா படிப்பில் யாரிற்கும் சலித்தவளல்ல.

தமையன்மார் எல்லோருமே படித்தவர்கள், படித்துக் கொண்டிருப்பவர்கள். மூத்த அண்ணா கடையை வைத்து உழைத்துத் தான், இரண்டாவது தமயனின் பொறியியல் பீட படிப்பிற்கும், மூன்றாவது தமயனின் வைத்தியபீட படிப்பிற்கும் ஏனையோரின் கல்விச் செலவிற்கும் வழங்கிக் கொண்டிருந்தார். 'சேமிப்பு' என்ற வாசகத்திற்கே அங்கு இடமிருக்கவில்லை.

நிற்காமல் சூழலும் புவியிலே அவ்விருவரினதும் கல்வி முடிவுற இருவரும் 'பொறியியலாளர், 'வைத்தியர்' என்ற பட்டங்களை பெற்றனர். 'இனி இவர்களிற்கென்ன குறை?' என்பதே பலரது கேள்வியாய் அமைந்தது. இருவரிற்கும் கொழும்பிலே வேலை கிடைத்ததால் கொழும்புவிடுதி ஒன்றில் தங்கி தம் பணியை ஆரம்பித்தனர்.

தம் அன்றாட கடின உழைப்பின் மூலம் ஏனைய நால்வரையும் திறம்பட பயிற்றுவித்ததுடன் அவர்களை 'கஷ்ரம்' என்றால் என்னவென்றே தெரியாதளவிற்கு வளர்த்தார்கள். அவர்களும் அண்ணன் மாரிற்கு விசுவாசமாயே நன்றாக படித்தார்கள். கீதா வைத்தியத்துறைக்கு தெரிவானதுடன் தேசிய மட்டத்திலும் முதலிடம் பெற்று பலரது கௌரவங்களையும், பாராட்டுகளையும் பெற்றாள்.

வைத்தியத்துறையில் இணைந்து திறம்பட அங்கும் தன் திறமையை வெளிபடுத்தி வந்தாள். தான் பிறந்த மண்ணில் சேவையாற்ற வேண்டும் என்பதே அவளது இலட்சிய வேட்கையாக இருந்தது. தன் இலட்சியத்திற்காக அயராது ஈடுபட்டாள். "மாப்பிளை லண்டனில் பெரிய தொழிலதிபராம். மாத சலரி இலங்கை காசுக்கு இருப்பதைந்து லட்சமாம்" என்று தாய் கூற அண்ணன்மாரும் தாயின் கொடிய நோயை கருதி கீதாவின் அரைகுறை சம்மதத்துடன் திருமணமும் இனிதே நடந்தேறுகின்றது.

மாப்பிளை தன்னோடு கூடவே அழைத்துப்போனார். அங்கு போனவளிற்கோ பேரதிர்ச்சி அவளிற்காயே காத்துக் கிடந்தது போலிருந்தது. அவன் ஏற்கனவே திருமணமானவன் என்றும், தொழிலதிபரல்ல ரவுடி, தாதா என்றும்; வருமானம் உழைப்பு அல்ல கொள்ளையடிப்பு என்றும் புரிந்தது. உறவுகளுடன் எந்த தொடர்பும் இல்லாத பெரும் சித்திரவதையுடனான அவளது வாழ்வு கேள்விக்குரியதாகிறது. மீள தாய் நாடு திரும்பியவளிற்கு இங்கு கிடைத்த அதிர்ச்சி தாய் இவ்வுலகை விட்டு நீத்துவிட்டார். இனி அவள் சுமைதாங்கி அல்லவா......

■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்

## - நினைவில் பேராசிரியர் சிவத்தம்பி -

லோ. தேனுஷா

தமிழ்த்தாய் தன் தவப்புதல்வனை இழந்து தவிக்கின்றாள். கரவையூர் தன் மகுடத்தில் ஒரு மாணிக்கத்தை இழந்து நிற்கின்றது. சாகாவரம் பெற்ற சில சரித்திரப்படைப்புக்களை தந்த ஒரு மகாநதி சாவெனும் சாகரத்தில் சங்கமித்துள்ளது. ஒரு நடமாடும் பல்கலைக்கழகம் தன் முடிவுரைக்கு முகம் கொடுக்கின்றது. எங்கள் பேரன்பிற்கும், பெருமதிப்பிற்கும் உரிய பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் இறைவனடி சேர்ந்த செய்தி பேரிடியாய் வீழ்ந்து தமிழுலகில் ஈடுசெய்ய முடியா வெற்றிடமானது.

கரவையூரிற்கு ஒரு தனித்துவமான கல்விப் பாரம்பரியமுண்டு. கரவையூர் உருவாக்கிய பல கல்விமான்கள் உலகம் முழுதும் உள்ளனர். எங்கள் ஊரில் பிறந்ததனால் அவர்களிற்குச் சிறப்பு உண்டு. ஆனால் பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் இவர்களிலிருந்து சற்று வேறுபடுகின்றார். இவரால் எங்கள் மண் இன்று உயர்ந்து நிற்கிறது. இந்த மகாநதியின் ஊற்று எங்கள் ஊரில் உற்பத்தியானதில் நாம் பெருமையடைகிறோம்.

இவர் தன்னைப் பெற்று வளர்த்த மண்ணின் மீது அளவற்ற மதிப்பும், மரியாதையும் வைத்திருந்தார். கரவையூரின் வாழ்வியலை அந்த மண் வாசனையோடு யதார்த்த மாக சித்தரித்திருந்தார். உலகின் புகழ் பூத்த எத்தனையோ பல்கலைக்கழகங்களில் பணியாற்றி இருந்தாலும் தான் கற்ற விக்கினேஸ்வரக் கல்லூரியில் மட்டற்ற மதிப்பைக் கொண்டிருந்தார். தனது பல படைப்புகளில் அந்தப் பாசத்தைப் புடம் போட்டுக் காட்டியுள்ளார்.

கரவை அபிவிருத்தி ஒன்றியம் சில வருடங்களிற்கு முன் கரவையின் வரலாற்றை ஒரு நூலாக ஆவணப்படுத்த பேராசிரியர் சிவத்தம்பி அவர்களையே நாடிய போது கரவையூரின் வரலாற்றை மடை திறந்த வெள்ளம் போல் வர்ணித்தார். கரவையூர் பற்றி பேசுகையில பாசம், பக்தி, பரவசம் போன்ற உணர்வலைகளின் நர்த்தனத்தை அவரிடம் காணலாம். தான் பிறந்து. வளர்ந்த மண்ணை இவ்வளவு தூரம். நேசித்த அவர் ஒரு மனித குல மாணிக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுத்துறையிலே இவரும், பேராசிரியர் கைலாசபதியும் ,ஆய்வுலக இரட்டையர்கள் என்றும் விமர்சக இரட்டையர் என்றும் அழைக்கும் வழக்கம் இருந்தது யாவரும் அறிந்ததே! தமிழ் நாடகத்தின் ஊற்றுக்களையும் ஓட்டங்களையும் ஆய்வு மூலம் இனங்காட்டிய இவர் புகழ் பெற்ற ஒரு நடிகர் என்பதை இன்றைய தலைமுறை அறியமாட்டாது.

பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் பல்பரிமாண ஆளுமை மிக்கவர். ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் சிறப்பான பண்பாடு, விமர்சனம், நாடகம், சினிமா, சமூகவியல், ஊடகவியல் முதலிய பல துறைகளில் தனது ஆழமான ஆளுமையை ஆய்வுகள் மூலம் நிறுவியவர்.

தமிழிலே பல புதிய சொற்களை உருவாக்கிய பெருமை பேராசிரியர் சிவத்தம்பிக்குரியது. இலங்கை, இந்தியாவில் பற்பல பல்கலைக்கழகங்களில் பணியாற்றியது மட்டுமன்றி கேம்பிறிஜ் பல்கலைக்கழகம், உப்சலா பல்கலைக்கழகம், அமெரிக்கப் பல்கலைக்கழகம் மற்றும் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் முதலியவற்றிலும் பணியாற்றிய ஈழத்து தமிழறிஞர் என்ற பெருமை இவருக்குரியது.

உலக இலக்கியப் பேரவை, இந்திய இலக்கிய சமுத்திரம், தமிழ் இலக்கியக் கடல், ஈழத்து இலக்கிய ஓடை என்பவற்றில் நீச்சலடித்து கலையேறிய எங்கள் மதிப்பார்ந்த பேராசான் கார்த்திகேசு சிவத்தம்பி எங்கள் ஊரவர், எங்கள் கல்லூரியின் மைந்தன் என்பவை தாம் எங்கள் பலமாகின்றன.

தான் பிறந்து வளர்ந்த மண்ணிலேதான் இறுதியில் சங்கமமாக வேண்டுமென விரும்பினார். கரவையூரை பொறுத்தவரை சோனப்பு என்பது வெறும் மயானமல்ல. சந்ததி சந்ததியாக உணர்வுடன் ஊறிவிட்ட புனிதபூமி. ஒவ்வோர் கரவையூரானும் தன் முடிவுரைக்கு இங்குதான் முற்றுப்புள்ளி வைக்க விரும்புகின்றான். அந்த உப்புக்காற்றில் உலர்ந்து போவதில் அப்படியொரு சுகம்.

உலகம் எங்கு வாழ்ந்தாலும்; எவ்வளவு தான் உயர்ந்தாலும்; தன்னை உருவாக்கிய மண்ணை இறுதி மூச்சு வரை மறக்காது வாழ்ந்து அந்த மண்ணிலே சங்கமிக்கத் துடித்த மனித குல மாணிக்கமே! கரவை மண்ணும், அதன் மக்களும் கண்ணீர் மல்க இறுதிவிடை தருகின்றனர். எங்கள் ஊரின் மதிப்பை உலகில் உயர்த்திய உத்தமரே! சென்றுவாருங்கள்...!

தமிழ் உள்ளவரை தரணியில் உம்பெயர் நிலைக்கும்
நெஞ்சிருக்கும் வரை உம் நினைவிருக்கும்.

■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்விற்காய் ஏங்கும் பெண்ணின் நிலை

சௌ. கேமதட்சணி
12 B

மேகத்தைச் சூழ்ந்திருந்த கருமுகில்கள் அடியெடுத்து நகர்கிறது மெதுவாக தென்னங்கீற்றுக்களினிடையே சூரியனது ஒளிக்கதிர்கள் தெறிக்கிறது. கனவுலகத்திலே மூழ்கியவர்கள் கண்விழிக்கின்றனர். மலர எத்தனிக்கும் மொட்டுகள் கதிரவனை அன்போடு வரவேற்கின்றன. இதுவரை நிலவிய அமைதியான சூழல் மெல்ல மெல்ல விலக ஆலயமணி ஓசையால் பக்தியின் பரவசத்தில் ஆழ்கிறது திருநெல்வேலி கிராமம். அன்றைய நாளின் கருமங்களைத் தொடங்க மக்கள்கூட்டம் திக்குத்திக்காக செல்கிறது. எவ்விடமும் நிலவும் ஆரவாரங்கள் பொழுது விடிந்ததைப் புலப்படுத்தி நிற்கிறது. வீதிகள் சனக்கூட்டத்தால் நிறைகிறது.

அத்தகைய கிராமத்தில் தென்னந்தோப்புக்களின் மத்தியிலே எவ்வித ஆரவாரமும் சலசலப்புமின்றி ஒரு குடில் உள்ளே கவலை தோய்ந்த முகத்துடன் துயிலெழும் ஓர் அபலைப்பெண் அவள் தான் சீதா. ஒளிமயமான எதிர்காலத்திற்காய் ஏங்கித்துடிக்கும் ஓர் பெண். கண்களைக் கசக்கியபடி எழும்பியவளது எதிரிலே பட்டது அந்த நாட்காட்டி அதைப்பார்த்ததும் அவளது முகம் அருங்கியது.வாழ்வே தொலைந்துபோன சிந்தனை ஏற்பட்டது. அவளது சிந்தனை பத்துவருடங்கள் கடந்தகாலத்தை நோக்கி ஓடியது.

அன்று ஆடிமாதம் 2ம் திகதி அவனது பிறந்தநாள் நினைவிற்கு வந்தது. அன்பான குடும்பம் பெற்றோரிற்கு ஒரேயொரு செல்லப்பிள்ளை சீதா. அரசாங்க உத்தியோகம் பார்த்த தந்தையும் தாயும் கஷ்ரமே தெரியாமல் வளர்த்தனர். சீதாவை அவளது ஒவ்வொரு பிறந்தநாளையும் மிக விமரிசையாகக் கொண்டாடுவார்கள். அன்பாக மட்டுமன்றி சிறந்த நண்பர்களாகவும் விளங்கிய இவளது குடும்பத்தில் விதி விளையாட ஆரம்பித்தது. சீதாவிற்கு 18 வயதிருக்கும் போது வேலைக்கு சென்ற பெற்றோர்கள் விபத்து ஒன்றிலே இறக்கின்றனர். இதனால் சொல்லமுடியாத் துன்பத்துடன் தனி மரமாகிறாள் சீதா. அவள் அவளது உறவினர் ஒருவர் வீட்டிலே வளர்கிறாள் ஒரு அடிமைப்பெண்ணாக நடத்துவதில் அவர்கள் தீவிரம்காட்டினர் கற்றலுக்கு தடைவிதித்தனர். இதனால் தாய் தந்தையற்ற அவளது வாழ்வு கண்ணீரும் கம்பலையுமாக கழிந்தது. இவ்வாறாக இரண்டு வருடங்கள் ஓடிவிட்டன. மனதில் நிறைந்த சுமையுடன் தாய் தந்தை நினைவாக வாழ்ந்தாள் சீதா.

இவ்வாறிருக்கும் போதுதான் இவளது வாழ்வில் இன்பவடிவிலே ஓர் துன்பம் வருகிறது. சீதாவை வளர்த்தல் என்னும் பெயரில் கொடுமைப்படுத்தும் உறவினர்கள் அவளிற்கு திருமணம் செய்ய எண்ணுகின்றனர். இதற்காக தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரத்து உறவான ஒரு பையனைப்பார்த்து திருமணம் செய்து வைக்கின்றனர். திருமணம் முடிந்து சந்தோசக்களிப்புடன் போன சீதா அங்கே சிறிதுகாலம் மகிழ்வாகவே இருந்தாள். ஆனால் அச்சம்பவத்திற்கு பிறகு அவளால் மகிழ்வாக இருக்கமுடியவில்லை. ஒருமுறை வீட்டினை சுத்தப்படுத்துவதற்காக அலுமாரியின் கீழிருந்த பெட்டியை திறந்தவளிற்கு பேரதிர்ச்சி ஏற்பட்டது. அது டாக்டரின் அறிக்கை அதிலே அவனுக்கு குணப்படுத்த இயலாத ஒரு வியாதி ஏற்பட்டுள்ளதாகவும் அவன் நீண்டநாள் வாழமாட்டான் எனவும் குறிப்பிடப்பட்டது. இதனால் மிகவும் துன்படைந்த அவள் இதனை தன் கணவனிடம் "ஏன் மறைத்தீர்கள் என கேட்டபோது அவனது பெற்றோர்கள் அவள் அநாதை என்பதைச் சுட்டிக்காட்டி மனம்நோகப் பேசினார்கள். தமது மகனின் வைத்திய செலவுக்கு அவளது சொத்துக்களைக் கேட்டார்கள். வேறுவழியின்றி அவளும் சொத்துக்களைவிற்று அப்பணத்தை கொண்டு கணவனைக் குணப்படுத்த முயன்றாள். ஆயினும் இறைவனிற்கு கூட அவள் மகிழ்வாக இருப்பது பிடிக்கவில்லைபோலும் சிறிது காலத்தில் அவள் தலையிலே ஓர் பேரிடி வீழ்ந்தது. வாழ்விற்காய் ஏங்கினாள் இப்படியே காலங்கள் கழிந்தது. கணவன் வீட்டிலே மாமி, மாமனது கொடுமைகளையும் சகித்து கொண்டு வாழ்ந்து வருகின்றவேளை அவர்களது குடும்பவருமானம் போதாமையால் ஓர் வேலைக்கு செல்ல முனைந்தாள் சீதா.

பெரியதோர் அலுவலகத்தில் ஓர் வேலைபெற்றாள் அவள் படிப்பிற்கேற்ப அவளது திறமையையும் நற்குணங்களையும் வாழ்வையும் அறிந்த அலுவல முதலாளி இவளை திருமணம் செய்யவிரும்பி அவளது வீட்டில் பெண்கேட்க வருகிறார். ஆயினும் மாமி மாமன் மறுக்கின்றனர். திருமணத்திற்கு சம்மதம் சொல்லவில்லை. அதுமட்டுமன்றி அவளை அவ்வேலைக்கு செல்லாமல் தடுக்கின்றனர். இதனால் பெரும் ஏமாற்றமடைந்த சீதா வீட்டுவேலைகளிற்கு சென்று பணம் சம்பாதிக்கிறாள். ஆயினும் சில வீடுகளில் அவளை வேலை செய்ய மறுக்கின்றனார். அவளைத் பார்க்ககூடாத பெண்ணாக எண்ணுகின்றனர் இவ்வாறாக துன்பத்தை அனுபவித்த போது கணவனது தம்பி அமெரிக்காவிலிருந்து வந்து பெற்றோரை அழைத்துசெல்கிறான். இதனால் மீண்டும் தனிமரமாகிறாள் சீதா.

இவ்வாறாக அவளது நினைவுகள் சென்றிருந்தவேளை தபாற்காரனது மணியோசை கேட்கிறது. தீடீரென நினைவிற்கு வந்தவளாய் வெளியே ஓடிச்சென்று வாங்குகிறாள். விரித்த போது சந்தேசகக் களிப்பிலே திண்டாடினாள். அவளது நீண்டநாள் கனவான வங்கி முகாமையாளர் தொழிலுக்கு விண்ணப்பித்தாள். அதற்கான நேர்முகதேர்வு கடிதமே அது. மிகவும் சந்தோசத்துடன் கடிதத்தை இறைவனது படத்திற்கும் பெற்றோரின் படத்துக்கும் முன்னால் வைத்துவழிபட்டாள். இறைவன் தான் அவளிற்கு நல்வழிகாட்டவேண்டும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது அறிவு
## கண்டுபிடிப்பாளரும் கண்டுபிடிப்பும்

1. மோட்டார் சைக்கிள் - ஜி. டிம்லர்(1885), கொடன்முவர் - றொபட்நொய்ஸ்(1971)
2. மைக்ரஸ்கோப் - ஜன்சின் (1590), அலைக்சாண் (1876)
3. தீப்பெட்டி - ஜோன் வோக்கர் (1826)
4. வரைபடம் - சுமேரியர்
5. இயந்தித் துப்பாக்கி - ஜேம்ஸ் பெக்கல் (1918)
6. ஒலிபெருக்கி - ஹெரஸ் சோார்ட் (1900)
7. நெய்தல் யந்திரம் - ஈ . கார்ட்வைட் (1785)
8. புகையிரதம் - ரிச்சட் ட்ரவ்திக் (1804)
9. லிப்ட் - எலிஸ் ஜீ ஏடிஸ் ( 1852)
10. சலவை இயந்திரம் - ஜே . எப் . கென்டரல் (1934)
11. லேசர் - லேசர் டி. எச் . லைமா (1960)
12. ஹெலிகொப்டர் - இட்டனி ஓம்ச்சன் (1924)
13. திசைக்காட்டி - இல்மர் ஸ்லெரி
14. கேஸ் வெளிச்சம் - வில்லியம்மர்டெக் (1792)
15. கல்வனோ மீற்றர் - மாரி எம்பயர் (1834)
16. ஊற்றுமை பேண - லுவிஸ் ஈவோடர்மன் (1884)
17. திரைபடம் - ஜே. ஏங்ல், முஸ்கல், எச். வோகட் (1922)
18. கணணி - எலன் எம். டியுரின் (1824)
19. மின்மோட்டர் - நிக்கலோ டெஸ்லா (1888)
20. மின்குமிழ் - தோமஸ் அல்வா எடிசன் (1879)
21. செயற்கைப் பல் - ஏ. ஏ. ப்லான்சன் (1834)
22. பாதுகாப்பு அலாரம் - ஈ .டி ஹெல்மஸ் (1858)
23. மூக்கு கண்ணாடி - பெஞ்சமின் பிரங்லின் (1780)
24. பைசிக்கல் - கே. பீ மேக்மிலன் (1839)
25. பலூன் - ஜே. மொன்டகோலர் (1783)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நாடுகளும் அவற்றை ஆட்சி செய்யும் ஜனாதிபதிகளும்

| | | |
|---|---|---|
| 1. இலங்கை | - | மகிந்தராஜபக்ஷ |
| 2. இந்தியா | - | ப்ரதிபா டி. லிசிங் படேல் |
| 3. அவுஸ்திரேலியா | - | ஜீலியா கில்லார்ட் |
| 4. பங்களாதேஷ் | - | ஷெய்க் ஹசீனா |
| 5. கனடா | - | ஸ்டெபான் ஹாபர் |
| 6. சீனா | - | ஹீ ஜின்டோ |
| 7. டென்மார்க் | - | லார்ஸ் லொகே |
| 8. எகிப்து | - | ஹொச்னி முபாரக் |
| 9. இங்கிலாந்து | - | டேவிட் கமரூன் |
| 10. பிரான்ஸ் | - | நிகோரச் சர்கோசி |
| 11. ஜேர்மன் | - | ஹோச்ட் கோலர் |
| 12. இந்தோனேசியா | - | சுசுலோ பமாங்க் யுடோயொனா |
| 13. ஈரான் | - | மொஹொமர் அஹமட்நிஜாட் |
| 14. ஈராக் | - | ஜலால் தலபானி |
| 15. இத்தாலி | - | ஜியொர்ஜியொ நபொலிடனொ |
| 16. ஜப்பான் | - | னாஓடோ கான் |
| 17. அமெரிக்கா | - | பராக் ஒபாமா |
| 18. நியூஸ்லாந்து | - | ஜோன்கீ |
| 19. பாகிஸ்தான் | - | அசீப் அலி சர்தார் |
| 20. கட்டார் | - | ஷேயின் ஹமாட்பின் கலீபா அல்தானி |
| 21. ரஷ்யா | - | திமித்ரி மொத்வெதெவ் |
| 22. சிங்கப்பூர் | - | சேல்லப்பனி ராமனாதன் |
| 23. நோர்வே | - | ஜென்ச் ச்டொல்டன் பக் |
| 24. நோபாளம் | - | ராம் பாரன் யத்தாவு |
| 25. மியன்மார் | - | ஜெனரால் தான்ஷ்வோ |

ஜெ. ஜெனிதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத் துளிகள்

- சுய நம்பிக்கையே வெற்றியின் முதல் இரகசியம்.
- புத்தகம் இல்லாத அறை உயிரில்லாத உடல் போன்றது.
- அப்படிச் சொல் என்பதை விட அப்படிச் செய் என்பது முக்கியமானது.
- ஒரு மனிதனுடைய் நல்ல நண்பர்கள் அவனுடைய பத்து விரல்கள்.
- அதிகம் ஆதங்கப்படாமல் இருப்பது ஞானத்தின் ஒரு பண்பு.
- முதலில் கனவுகள் இன்றி எதுவும் நடப்பதில்லை.
- வெற்றியின் இரகசியம் மாறாத குறிக்கோள்.
- வாழ்வின் மிகப் பெரிய முடிவு அறிவல்ல செயற்பாடே.
- உனக்கு போதிய அக்கறை இருந்தால் நீ உலகை மாற்ற முடியும்.
- புத்தகங்கள் வீட்டை அலங்கரிப்பதற்காக உருவாக்கப்படவில்லை ஆனால் வேறு எதுவுமே அதைவிட வீட்டை அழகாக அலங்கரிக்க முடியாது.
- உலகத்திலுள்ள மிக அழகானவையே மிகப் பயனற்றது.
- புதிய வித்தியாசமான நல்ல வெற்றிகளுக்கு அடித்தளம் எமது தோல்விகளே.

*கி. கயந்தினி*
**13 B**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம் எங்கே?

மனிதம்....!
மனிதன் என்று பெயர்
பூண்டுள்ளோம் - ஆனால்
மனிதமே இல்லாமல்?

மரங்கள் கூட சிரிக்கின்றன!
மனிதத்தைப் பார்த்து அல்ல
மனிதமே இல்லாத
மனிதனைப் பார்த்து.

குற்றம் யார்மீது சுமத்துவது?
மனிதமில்லாத மனிதனைப் படைத்த இறைவன் மீதா?
ஆறறிவு இருந்தும் விலங்காய் இருக்கும்
மனிதன் மீதா? அல்லது
வழமைபோல் இயற்கை மீதா?
விடைகளை உனக்குள்ளே தேடு....!

*தி. அருந்தஷா*

---

# கனவுகள் நிஜமாகுமா....?

ஜென்ம ஜென்மமாய்
மூடிக்கிடந்த என்மன வாசலில்
பூத்த முதல் வசந்தம்
பூட்டிக் கிடந்த என் மனக் கதவினை
நோக்கி ஒரு அன்புக் குரல்
திறந்து பார்ப்பதா? திரும்பிப்பார்ப்பதா?
என்ற சிறு தயக்கம்
அப்போதுதான் ஒரு அசரீதீ
முதலில் நீ எழுந்து பார்
உண்மைகள் புரியும்....
விழித்தேன் உணர்ந்தேன்....!
அப்போது கூட ஒரு சிறிய எதிர்பார்ப்பு
கனவுகள் நிஜமாகாதா?

*ம. இலக்கியா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விதி எழுதிச் செல்லும்....!

அறிவிற்கான கல்வி
ஆயுத நிழலிலே....
காகிதாதிகள்
கையிலுண்டு
காணாமல் போனது
விடைகள் மட்டுமே!
விடைகள் யாவும்
விதியின் கையிலே....

## கைதிகளா?

சிந்தனைகள் சிறகடிக்கும் போதெல்லாம்
சிறைப்பிடிக்கப்படுகிறோம்
துப்பாக்கி முனைகளில்
நாங்கள் என்ன???

## தெருவினிலே

நல்ல தமிழ் வல்லவர்கள்
வல்லதிறமை கொண்டிருந்தால்
எங்கள் பள்ளிச் செல்வங்கள்
ஏன் இந்த தெருவினிலே....

*விநோஜ்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையத்தில் தமிழ்

த. வைஷ்ணவி, 13 B

இருபத்தோராம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைத்துள்ள இக் காலகட்டத்தில் தொழில்நுட்பம் வேகமாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது. இணையம் என்பது தகவல் தொழில்நுட்பம், தொலைத்தொடர்பு எனும் இரு இராட்சத தொழில்நுட்பத் துறைகள் கைகோர்த்ததால் உருவானது கணனிப் பொறித் துறையிலும் தொலைத்தொடர்புத் துறையிலும் ஏற்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சியால் உலகின் பல பாகங்களிலும் வியத்தகு முன்னேற்றம், நூதன சேவைகள் உருவாகி வருகின்றன. செய்திப் பரிமாற்றம், கல்வி, வணிகம், சுற்றுலா, தொலைத்தொடர்பு, நூலகம், அருங்காட்சியகம் போன்ற பல்வேறு பணிகளுக்கும் பொழுதுபோக்கும் இணையம் இன்றியமையாத சாதனமாகும். மனித இனத்தின் முதல் பன்மொழி ஊடகம் இணையமாகும். உலகம் முழுவதும் உள்ள குறிப்பிட்ட இனத்தவரை அல்லது குறிப்பிட்ட விடயங்களில் ஒற்றுமை உள்ளவரை இணையம் போல இணைக்க ஒரு ஊடகம் இல்லை.

குறிப்பிட்ட வலையம் ஒரே சமயத்தில் பல மொழிகளைப் பேசமுடியும். அதுவே இணையம். அழிந்து போகும் நிலையிலிருந்த தமிழ்மொழிக்கும் இணையம் கைகொடுத்து உதவியுள்ளது. இன்று நூற்றுக் கணக்கான தமிழ் வலயங்களிற்கு இலட்சக் கணக்கான வாசகர்கள் இருக்கிறார்கள். இணையம் மூன்றுவிதமான தகவல் தொடர்பு முறைகளைக் கொண்டுள்ளது. முதலாவது இரு தனிநபர்களுக்கு இடையே மட்டும் நடக்கும் தனிநபர் நிலைத் தொடர்புகள். இரண்டாவது ஏதோ ஒரு வகையில் ஒன்றுபட்டவர்களுக்குள் நடக்கும் ஒரு குழுஉட்பட்ட தொடர்புகள். மூன்றாவது ஒரு தனிநபர் அல்லது நிறுவனம் தகவல் ஒன்றைப் பெறுவதற்காக நடத்தப்படும் வெகுசன ஊடகங்கள். எந்த மொழி மேற்கண்ட 3 அடிப்படைத் தகவல் தொடர்பிலும் வளமாகக் கையாளப் படுகின்றதோ அந்த மொழியை நிகழ்காலமொழி, உயிருள்ள மொழி, வளரும் மொழி என்கின்றோம். இம்மூன்று தளங்களிலுமுள்ள பயன்பாட்டினாலேயே தமிழ் உயிருள்ள மொழியாகவுள்ளது.

மொழியின் வளர்ச்சியும், இருப்பும் இன்று தொழில்நுட்பத்தின் கையில் தங்கியுள்ளது. இது சாதகமா? பாதகமா? என்பதே பிரச்சனை. இத்தகவல் தேவையை நாம் மொழிக்காக நிறைவேற்ற முடியுமா? ஆம், முடியும் என்ற சாதகமான பதிலையே நாம் பார்க்கிறோம். இதுதான் கணினித் தமிழ் வளர்ச்சி. இது ஓர் காலத்தின் கட்டாயம். இருபதாம் நூற்றாண்டின் தமிழ் வளர்ச்சி குறித்து பிற்காலத்தில் திரும்பிப் பார்க்கும் எந்த ஒரு ஆராய்ச்சியாளனும் நூற்றாண்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியில் நடைபெற்ற ஒரு திடீர் திருப்பத்தைக் கண்டுகொள்ளாமல் போகமாட்டான். அந்தத் திருப்பம் தான் தமிழும் கணினிப் பொறினுட்பமும் கைகோர்த்துக் கொண்ட ஒரு அற்புத நிகழ்வாகும்.

மொழி ஊடகங்களின் மூலமாகவே நிலைத்து நிற்கிறது. தொடர்ந்து நிலவுகின்றது. பேச்சும் எழுத்தும் அவற்றிற்கேயுரிய ஊடகங்களின் மூலமாகப் பயணித்து மொழிவள சமூகங்களை நிலவச் செய்கின்றன. ஆரம்பத்தில் கல்வெட்டிலும் ஓலையிலும் இருந்த தமிழை அச்சுக்குக் கொண்டு வருவதற்கு அச்சுப் பொறி கண்டுபிடிப்பு உதவியது. இந்த நூற்றாண்டில் கணினி நடைமுறைக்கு வந்தது. இன்றைய தகவல் தொழில்நுட்ப யுகத்தில் ஒரு புதிய மொழிச் சாதனம் உருவாகும்போது முடியும் என்ற நிலை உருவாகிவிட்டது. இன்று வீட்டுக்கு வீடு இணையம் வந்துவிட்டது. எனவே இந்த வேகத்தில் தமிழ் மொழியும் வளரவேண்டும். இதற்குத் தமிழ் கணினி மயப்படுத்தல் அவசியமானதொன்றாகும். எனவே கணினியிலே எல்லோரும் புரிந்து கொள்ளக்கூடிய விதமான கணினித் தமிழ் உருவானது அவசியமானது. தற்போது உலகளாவிய ரீதியில் ஆங்கிலத்தைப் போன்று தமிழையும் கணிப்பொறி முறையில் பயன்படுத்தக் குறியீட்டு முறையும் விசைப்பலகையும் தராதரப் படுத்தப்பட்டுள்ளதால் தமிழை இணையத்தில் பயன்படுத்தப்படுவதில் இருந்த முக்கிய தடை நீங்கிவிட்டது. ■

## சிந்தனைத் துளிகள்

**தாய்**
தரணியில் வாழும் தனித்துவமான தெய்வம்

**தந்தை**
அன்பாய் எமக்கு வாழ்வளிக்கும் மகான்

**கடவுள்**
கல்லில் உறையும் கருணையுள்ளர்

**நண்பி**
பாசமெனும் கடலினுள் நட்பெனும் சிப்பிக்குள் ஒளிவீசும் முத்து

**குரு**
குறைகளை அகற்றி நிறைகளை நிரப்பும் வித்துவான்

- சுகன்யா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய உலகத் தகவல் புரட்சியில் இன்ரர்நெற்

ந. நிரஞ்சினி

உலகில் இரு தனிநபர்களுக்கிடையில் பல்வேறு வடிவங்களில் தகவல் தொடர்பு நடைபெற்று வருகின்றது. அவற்றுள் தற்போதைய நவீன உலகத் தொழில்நுட்பத் துறையில் அதிசயிக்கும் ஒரு சாதனமாக இன்ரநெற் விளங்குகின்றது.

இன்ரநெற்றின் வருகை கணனியின் இலக்கணத்தையே மாற்றிவிட்டது எனலாம். மனித வாழ்க்கைக்கு உதவிடும் சாதனமாக விளங்கிய நிலையை மாற்றி மனித வாழ்க்கையையே மாற்றியமைக்கும் ஒரு வரலாற்று நிகழ்வாக கணனி மாறிவிட்டது. இதன் ஊடுருவில் அறிவியல், கல்வி, ஆராய்ச்சித்துறை மற்றும் பொழுதுபோக்கு எனப் பரந்து செல்கிறது. எந்தத் துறையை இன்று எடுத்தாலும் உங்களுக்குச் சளைக்காமல் தகவல்களைத் தந்து கொண்டே இருக்கும்.

இன்ரநெற் ஊடாகத் தொடர்புகொண்டு காலநிலை, பங்குச்சந்தை, நாணயமாற்று விகிதங்கள், விமான சேவை, பத்திரிகை, சஞ்சிகை என்பவற்றிலிருந்து உலக அதிசயங்கள், எண்ணில் அடங்கமுடியாத சகலவிதமான தகவல்களையும் பெறலாம். இலங்கையில் ஆடைத் தயாரிப்பு நிறுவனங்கள் இன்ரநெற் மூலமாக தமது விளம்பர நடவடிக்கைகளை மேற்கொள்ள இன்ரநெற்றில் பிரவேசித்துள்ளனர். இன்ரநெற் என்பது தகவல் தொடர்பு வலைப்பின்னல் அமைப்பாகும். வலைப்பின்னல் என்பது கணனிகளை இணைத்து செயற்படுவதை குறிக்கும். ஒரு நோக்கப் பணிக்காக பல்வேறு கணனிகளை இணைத்துத் தகவல் பரிமாற்றம் செய்துகொள்ளும் அமைப்பு கம்யூட்டர் நெட்வேக் எனப்படுகிறது.

பல்வேறுபட்ட கம்யூட்டர் நெட்வேக் அமைப்புகள் ஒன்றிணைக்கப்பட்டு தகவல்ப் பரிமாற்றம் செய்து கொள்ள உதவுகிற அமைப்பு இன்டநெட் வேக் எனப்படுகிறது. இன்று சுருக்கமாக இன்ரநெற் எனப்படுகிறது. தமிழில் இணையம், வலையம் எனவும் அழைக்கப்படுகிறது.

உலகில் இன்று பல்வேறு நாடுகளில் இன்ரநெற் சேவையை வழங்குவதற்கென அமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையில் லங்கா இன்ரநெற் என்ற அமைப்பினால் மேற்கொள்ளப்படுவதுடன் சீ. கொம், விஸூவல் இன்ரநெற் ஆகிய புதிய அமைப்புகளும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

"உலகளாவிய வலயம்" என்று அழைக்கப்படும் வேல் வைட் வெப்பில் தற்போது தமிழ் மொழியிலான தகவல்கள் காணப்படுகின்றன. இன்ரநெற்றில் நுழைந்த மொழிகளில் தமிழிலும் தற்போது பல அரிய தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இவ்வகையில் இன்ரநெற் உலகை ஒருங்கிணைக்கும் உன்னத பணியைச் செய்கிறது. 21ம் நூற்றாண்டின் தகவல் புரட்சிக்கு இன்டநெற் வித்திட்டுள்ளது. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியத்தைத் தேடி....

ஓ.... மானிடா
உனை நினைத்து
கண்ணீருடன் நான் வடிக்கும்
காவியம் இது
மதங்களுக்கு மணம் முடிப்போம்
மனிதம் எனும் மொழி
பிரசவிப்பதற்காய்
இனங்களுக்குள் எழுதிவைப்போம்
அன்பு எனும் மொழி
சங்கமிப்பதற்காய்.

சமாதானத்தை மறந்துவிட்டு
ஜாதியை தேடுகின்றோம்
ஜாதியை தேடிக் கொண்டே
ஜனனமாகிப் போகின்றோம்
இனம்....
இம் மூன்றெழுத்தே மண்ணிற்குள்
மண்ணாய் ஜனனமாகிவிடு.
மானிடா....
இனங்களின் விளிம்பில் தூங்கி
அர்த்தம் இழந்து போனீர்கள்.

இரு கைகளினாலும் எழுதி வைப்போம்
சமாதானத்தின் சலனங்களை
விலங்குகளை கழற்றி வைப்போம் - அதிலே
இனவெறி பிடித்தோரை பூட்டிவைப்போம்
போர் எனும் இரண்டெழுத்தினால்
பிரிவு கண்டோம்.
இழப்பு எனும் நான்கெழுத்தால் சோகம் கண்டோம்
சமாதானம் எனும் ஐந்தெழுத்தால் ஒன்றுபடுவோம்
ஒரே மதம் ஒரே இனம் ஒரே ஜாதி
நாமெலாம் இலங்கையர்கள்.

*கி. கயந்தினி, 13B Arts*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலரும் உரைநடையும்

*கலைப்பிரிவு மாணவர்கள்*

வீரமாமுனிவர் காலத்திற்குப் பின் தமிழ் உரைநடை வரலாற்றில் ஒரு முக்கிய காலப்பகுதியாக விளங்கியது ஆறுமுகநாவலர் காலம் எனலாம். அவர் காலத்தில் கிறிஸ்தவமதப் பிரசாரம் யாழ்ப்பாணத்திலும், இந்தியாவிலும் மிக உன்னதமாக நடைபெற்றது. துண்டுப் பிரசுரங்கள் வாயிலாக தம் சமயக் கொள்கைகளை எழுதிப் பரப்புவதோடு சைவசமயத்தில் காணப்படும் குறைபாடுகளை அப் பத்திரங்கள் வாயிலாக வெளியிடுதல், பத்திரிகைகளின் உதவி கொண்டு சமயப் போதனை செய்தல், சமய நூல்களை எழுதுதல் போன்ற சூழ்நிலையிலேயே நாவலர் தோன்றினார். இடுக்கண் பல வந்தபோதும் கலங்காத உள்ளத்தோடு தம் சமயக் கருத்துக்களை வெளிப்படுத்தி, கிறிஸ்தவ சமயக் கருத்துக்களை முறியடிப்பதற்காக கையாண்ட வழிமுறைகளில் மிகப் பிரசித்தி பெற்றது உரைநடையே.

பொதுமக்களிற்கு சமய உணர்ச்சிகளை தர்க்க நியாய வழிகளால் சைவசமய உண்மைகளை எடுத்துக்காட்ட வேண்டியிருந்தது. சமய ஆர்வத்தை உண்டாக்க வேண்டியிருந்தது. இதனால் பொதுமக்களிற்கு புலப்படக்கூடிய ஒரு உரைநடையை வகுத்துக் கொள்ள வேண்டியிருந்தது. உரையாசிரியர்கள் கையாண்ட பழைய உரைநடையிலே இலக்கணத்தோடு கூடிய பழைய சந்தி விகாரங்கள் காணப்பட்டன. அவை பொதுமக்கள் அறிந்து கொள்ள முடியாது என்ற காரணத்தால் அவற்றை நீக்குவதோடு, இலக்கண வழு இல்லாத வகையில் தமிழ் வாக்கியங்களை கையாள முற்பட்டார். அவற்றுள் ஆங்கில மொழிக்குரிய குடியாட்சி முறைகளை விசேடமாக பயன்படுத்தியமை ஒன்றாகும். பெயரெச்ச, வினையெச்ச வடிவங்களை அடுக்கி வாக்கியங்களை நீட்டி எழுதுவதை நாவலர் தவிர்த்துக் கொண்டார். உயிர்த்துடிப்பான சொல்லாட்சிகளை கையாள முற்பட்டார். எனினும் சமயக் கருத்துக்கள், தத்துவக் கொள்கைகள் முதலியவற்றை எடுத்து விளக்குவதற்கு வடமொழிப் பதங்களைப் பயன்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் எழுதிய உரைநடைகளை நான்கு வகையாக வகைப்படுத்துவர்.

அ) சிறுவர்களிற்காக எழுதப்பட்டவை - பால பாடங்கள், சைவ வினாவிடை, இலக்கண சுருக்கம், இலக்கண வினாவிடை

ஆ) பொதுமக்களிற்காக எழுதப்பட்டவை - பெரியபுராண வசனம், திருவிளையாடற் புராண வசனம், கந்தபுராண வசனம், பெரிய புராண சூசனம், யாழ்ப்பாண சமயநிலை

இ) அவர் எழுதிய கண்டனங்கள், மறுப்புரைகள், துண்டுப் பிரசுரங்கள் - சைவதூஷண பரிகாரம், கிறிஸ்தவ மதக் கண்டனத்திரட்டு

ஈ) உரைநூல்கள் - நற்றூற் காண்டிகை உரை, சைவசமயநெறியுரை, சிவதருமோத்திர உரை, கோயிற்புராண உரை.

நாவலர் உரைநடையில் பல்வேறு பண்புகளை நாம் காணக்கூடியதாக இருந்தது. செந்தமிழ் நடையைத் தழுவி வந்த நடைக்குப் பின்வரும் பந்தி சான்று பகரும்.

அன்பானது குடத்துள் விளக்கும், உறையுள் வாளும் போல ஒருவர் காட்டக் காணற்பாலதன்று.

வடமொழிப் பதங்கள் கலந்துவந்த நீண்ட வாக்கியம் கொண்ட நடைக்கு உதாரணம் அப்பொழுது சுத்தசாட்குண்ணிய பரிபூரணராகிய தோணியப்பர் அவருடைய முற்றிருத் தொண்டை நினைத்து அவருக்கு அருள் செய்தற்கு திருவுளங் கொண்டு பார்வதிதேவியாரோடும் இடபாருடராய் எழுந்தருளி .... என வாக்கியம் நீண்டுசெல்வதை அவதானிக்கலாம்.

சிறுசிறு வாக்கியங்களைக் கொண்ட இலகுவான நடைக்கு உதாரணம் : 'சிலநாள் கழிந்தபின் சோழரசன் வரகுணபாண்டியனோடு போர் செய்யக் கருதி தன் சேனையோடு வந்து மதுரை அணுகினான்'

நாவலருடைய உரைநடையில் வேறுசில பண்புகளும் காணப்பட்டன. தெளிவுரை ஒரு முக்கிய பண்பு. அவரது உரைநடையில் பொருள் இல்லாத வெற்றுச் சொற்களை காண்பது அரிது. அவரது கண்ட உரைகள் அவரது உள்ளக் கருத்தை தெளிவாகப் புலப்படுத்தின. கிண்டலும், கேலியும், கோபமும் வெளிப்படுவதைக் காணலாம். தகுந்தது எது? தகாதது எது என்று வலியுறுத்திக் கூறுகின்ற ஒன்றை ஆதரித்து மற்றையதை வன்மையாக நிராகரிக்கின்ற அதிகாரத்துவத்தை நாம் இவற்றில் காணலாம். இதனை அதிகார மொழநடை எனலாம்.

நாவலரை பரிமாற்கனலநர் அவர்கள் 'வசனநடை கைவந்த வல்லாளர்' என்றும் பேரா. செல்வநாயகம் தற்கால உரைநடையின் தந்தை என்றும் குறிப்பிட்டுள்ளனர். சோமசுந்தரப் புலவர் வன்னநடை, வழக்குநடை, வசனநடை எனப் பயிற்றுவித்த ஆசான் என்கிறார். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றலும் ஞாபகத்திறனும்

*நிஷாந்தன் (ஆசிரியர்)*

புலன்கள் மூலம் பெறப்படும் தகவல்களைக் களஞ்சியப்படுத்தி தேவை ஏற்படும் போது மீட்டெறியும் அல்லது மீட்டுக்கொள்ளும் தகைமையினை ஞாபகம் என வரையறுக்கலாம். இதனை நினைவாற்றல் எனவும் அழைப்பர். ஒரு எண்ணம், கருத்து அல்லது நிகழ்ச்சியைப் பற்றி அறிவுடன் அதை நாம் முன்பே அறிந்தோ, அனுபவித்தோ இருக்கின்றோம் என்னும் வேறொரு உணர்ச்சியும் நல் உள்ளத்தில் ஏற்படுதலே ஞாபகம் எனப்படும் என வில்லியம் ஜேம்ஸ் என்பவர் குறிப்பிட்டள்ளார். கற்றலின்போது மாணவர்கள் பலர் ஞாபகப்படுத்தும் செயற்பாடுகளில் முயன்று மனம் சலிப்புறுவதைக் காணலாம். மாணவரைப் பொறுத்தமட்டில் பாட அடைவுக்கும் பல உள தொழிற்பாடுகளுக்கும் ஞாபகம் இன்றியமையாதது. இத் தொழிற்பாடானது நான்கு உட்பகுதிகளைக் கொண்டுள்ளது.

1. கற்றல்
2. மனதில் இருத்தல் அல்லது நிலைநிறுத்தல்
3. மீட்டுக்கொணர்தல்
4. மீண்டுனர்தல் என்பவைகளாகும்.

ஞாபகம் எனும்போது படித்து மனனம் செய்தல் என்பது முக்கியமானது. பெரும்பாலும் மனனம் செய்யும் திறன் நுண்மதியில் தங்கியுள்ளது எனலாம். நுண்மதியின்றி விடயங்களை மனனம் செய்ய இயலாது. மனனம் செய்ய மன் தான் கற்க இருக்கும் விடயத்தைக் கற்பதின் நோக்கத்தை முதலில் உணர்ந்து பின் விடயத்தின் பொருளை அறிந்தால் மனனம் செய்தல் இலகுவாக அமையும்.

ஞாபகச் செயற்பாடுகளில் மனத்திருத்தல் அல்லது நிலைத்திருத்தல் என்பது ஒரு படியாகும். இதை ஒரு உடலியல் சார்ந்த நிகழ்ச்சி எனலாம். ஏனெனில் மனனம் செய்யும்போது மூளையின் கலங்கள் ஒழுங்கமைக்கப்பட்டுப் பின் குறிப்பிட்ட தூண்டி அளிக்கப்படும்போது அக்கலங்கள் மீண்டும் தொழில்பட மனனம் செய்யப்பட்ட விடயங்கள் ஞாபகத்திற்கு வருகின்றன. இந்த மனத்திருத்தலைப் பாதிக்கும் நிகழ்ச்சிகளை அறிந்திருத்தல் பயனுள்ளது. இவை பற்றிய பல ஆராய்ச்சிகள் நடைபெற்றுக் கருத்துக்கள் வெளியாயின. ஒரு விடயத்தைப் படிக்க முன்பு கற்றவைகளும் படித்தபின்பு கற்றவைகளும் அவ்விடயத்தை மீட்டறிதற்குத் தடையாகின்றன.

ஒரு மாணவன் தான் கற்ற விடயம் ஒன்றை மீட்டறிய முயலும்போது அவன் அதற்கு முன் கற்ற விடயங்கள் குறுக்கீடாக அமைவதுண்டு. இதுவே முன்னோக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகத்தடை எனப்படும். அதேபோல் தான் கற்ற விடயம் ஒன்றை ஞாபகப்படுத்த முயலும்போது அதன் பின்னர் கற்ற விடயங்கள் அதற்குத் தடையாக அமையின் அது பின்னோக்கு அகத்தடை எனப்படும்.

மாணவர்களாகிய நீங்கள் உங்கள் கற்றலை சிறப்பாக மேற்கொள்ள கற்றலை ஞாபகப்படுத்த சில நுட்பமுறைகள்.

- ஏதாவது ஒரு விடயத்தை கற்பதற்கு முன்னரும், பின்னரும் சிறிது நேரம் மனதை ஒருமைப்படுத்தி தியானத்தில் ஈடுபட்டு மனதை தெளிவுபடுத்தி கொள்ள வேண்டும். இதன்போது மனம் தூய்மையாகவும், தெளிவாகவும் இருக்கும். அதன் பயனாக கற்றலை ஊடுருவிய பதிவுகளாக அமையும்.
- மனத்துன்பங்களையும், சஞ்சலங்களையும் கற்றலோடு இணைத்துக் கொள்வதை தவிர்த்தல்
- கற்றலில் முன்னேற்றம் பெறவேண்டும் என்ற தன்னம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.
- கற்றலை ஞாபகத்தில் நிற்கும் என்ற தற்துணிவை ஏற்படுத்தி வலுப்படுத்தல்.
- குவி சிந்தனையுடனும் விரி சிந்தனையுடனும் கற்கும் பாடங்களைப் பொருத்தமான முறையில் ஒன்றிணைத்தல்.
- பெரிய பாடப்பரப்புக்களைப் பொருத்தமான சிறுசிறு அலகுகளாக பிரித்தும் இணைத்தும் கற்றல்.
- கற்றலுக்கும் ஞாபகத்துக்கும் குறுக்கீடுகளாக அமைபவற்றைத் தவிர்த்து விடுதல்.
- கற்றலை தேர்நிலையான ஆய்வுடன் தொடர்புபடுத்தல்.
- பொருளறிந்தும் பொருண்மையறிந்தும் கற்றுக்கொள்ளல்.
- ஊக்கத்துடனும் ஈடுபாட்டுடனும் உளநிறைவுடன் கற்றல்
- கற்றலை அவ்வப்போது மீட்டெடுத்தல், நித்திரை வராதபோதும் பிரயாணம் செய்யும்போதும் தொடர்ச்சியாகக் கற்றல் செயற்பாட்டில் ஈடுபடலாம்.
- கூறிணைப்புச் சொல் முறையால் கற்றலை முன்னெடுத்தல்.
- கதை, கவிதை, பாடல் தழுவிய சங்கிலிப்படுத்தலாக கற்கும் விடயங்களை ஒன்றிணைத்து ஞாபகத்தை வலுப்படுத்தி கொள்ளவேண்டும்.
- முதல் எழுத்து தந்திரோபாயத்தை வளர்த்தல்.
- பிரதான தலைப்புச் சொற்களை முறையாக ஞாபகத்தில் வரவழைத்தல்.

மாணவர்களுக்கு கூடிய ஓய்வும் இடைவேளையும் கொண்டு ஞாபகத்திறனை வளர்க்க ஆசிரியர் வழிகாட்ட வேண்டும். நாம் மறந்தவை என எண்ணும் செய்திகள் உண்மையாகவே மறக்கப்படுவது இல்லை. இவை நனவில் மனதில் ஒடுங்கியுள்ளன என்பது உளவியலாளர்களின் கருத்தாகும். எனவே கற்றல் செயற்பாடுகளை மாணவர்கள் முறையாக ஞாபகப்படுத்திக் கொள்ள ஆசிரியர் உதவவேண்டும் என்பது புலனாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெட்ரல்ட் - பிரச்ட்டும் அவரது அரங்கச் செயற்பாடும்

திருமதி துஸ்யந்தன் புனிதா

பிரக்ட் 1898 பெப்ரவரியில் பவேரியாவின் பேர்க்கில் பிறந்தார். மியுனிச்சிலிருந்து கபூர்பெயிலில் இவர் சிலகாலம் வேலைசெய்தார் பிரக்ட். ஒரு கவிஞர் நாடகக்காரர் இயக்குனர். 1920ல் இவர் கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தவரானார். அவருடைய நாடகமான *Trommlen indernacht* (இரவின் முழவுகள்) *DTun untlu Night* 1922ல் எழுதப்பட்டது. அது மிகப் பிரசித்தி பெற்றதுடன் ஜேர்மனி முழுவதிலும் நடிக்கப்பட்டது. 1924 இல் இவர் பேர்லின் சென்றார். அது அன்று நாட்டின் நாடக நிகழ்வுகளின் மையமாக அமைந்திருந்தது. இவர் பிஸ்கார்ட்டருடன் மக்கள் அரங்கில் வேலை செய்து பல அனுபவங்களைப் பெற்றார். 1928ல் திறிபெனி ஒபேறா *(Thereepenny opera)* எனும் நாடகத்தை இவர் எழுதினார். அது ஐரோப்பா முழுவதும் பிரசித்தி பெற்றது. இது பின்னாளில் படமாக்கப்பட்டது.

1928 - 1933க்குமிடைப்பட்ட காலம் அவரது வாழ்க்கையில் நாடகத் தயாரிப்பின் மிக முக்கியமான காலமாகும். 1933ல் ஹிட்லர் ஆட்சிக்கு வந்ததும் பிரச்ட் தனது மனைவியுடனும் இரண்டு சிறிய பிள்ளைகளுடனும் நாட்டை விட்டுப் புறப்பட்டு வியன்னாவிலுள்ள பிரேக்கிற்குச் சென்றார். பின்சூரிச் சென்றார். பின்னர் டென்மார்க் சென்றார். 1941ல் அமெரிக்காவை அடைந்தார். ஆனால் ரஷ்யாவுக்குப் போகவில்லை. அரசியல் ரீதியாக அவரை ஏற்ற நாடு ரஷ்யா என்பதனால் 1948ற்குப் பிறகு கிட்லரின் வீழ்ச்சிக்குப் பிறகு பிரச்ட் ஜேர்மன் திரும்பினார். தற்போது பேர்லின் இசைக்குழு அமைந்திருக்கும் இடத்தில் இருந்த தியேட்டர் எம் சிப்பவுடமை *(Thatre amshiffbausrda)* நடந்த இவரிற்கு அனுமதி வழங்கப்பட்டது. பேர்லின் இசைக்குழு மீளமைக்கப்பட்டது. ஒரு குழுவாகும் இது பிரச்டினால் 1949ல் மீளமைக்கப்பட்டது. இதன் முதல் மேடை நிகழ்வு 1949 ஜனவரியில் நடைபெற்றது. இதன் முதல் நாடகம் மதர்கரேஜ் *(Mather courage)* இதில் பிரச்டின் மனைவி வெறனாவிதகல் *(Heleneweigal)* பிரதான பாத்திரம் தாங்கினார்.

பிரச்ட் நடிப்பு என்பது செய்யப்படுவது நிகழ்த்திக்காட்டப்படுவது என்று நம்பினார். நடிகன் செய்வதற்காகவே அங்கு நிற்கிறான் நாடக எழுத்தாளன் சொன்னதைச் செய்யவே அங்கு நிற்கிறான். பாத்திரமாக மாற அங்கு நடிகன் நிற்கவில்லை. பாத்திரம் போலச் செய்யவே அங்கு நிற்கிறான். பார்வையாளர்கள் மண்டபத்திற்கு நாடகம் பார்க்கவே செல்கின்றார்கள். இலக்கியத்தை இரசிக்கவோ, வடிவத்தை இரசிக்கவோ அல்ல என்று கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்ட் தனது சிந்தனைகளை கருத்தூலங்களாக வெளியிட்டார். அது *Verfremdung* என்று அழைக்கப்படுகிறது அல்லது அந்நியமாதல் என்றும் அழைப்பர். இதனைத் தமிழில் பாரதீனப்படுத்தல் என்று மொழி பெயர்த்துள்ளனர். அதாவது நடிகர்கள் பார்வையாளர்களிற்கு அந்நியமாக பழக்கத்திற்கு மாறாகத் தாம் உருவாக்கும் பாத்திரங்களை வைத்துக் கொள்ள வேண்டும் என்பதாகும். அது ஒருவகையில் ஒரு செயல் ஆகும். பாத்திரத்தை விட உளவியலை விட இந்தச் செயலே முக்கியமானதாகும். ஒருவன் ஒரு மனிதனை அவனுடைய உள்ளுணர்வுகளால் அல்ல அவன் செயல்களாலேயே மதிப்பிடுகிறான். பாத்திரம் செய்வதனையே பார்வையாளர்கள் நாடகத்தில் பார்க்கின்றார்கள். நடிகன் பிரச்டின் நாடகத்தில் நடிகனாகவும் நாடகத்தை நடித்த நெறியாளர்களின் கருவியாகவும் இருப்பான். நாடகத்தின் சிந்தனைத் திரட்சியைப் பார்வையாளர் கைவிடக்கூடாது என்று பிரச்ட் விரும்பினார். நடிகனின் நடிப்பு பார்வையாளரின் மனங்களைத் தூண்ட வேண்டும் உணர்ச்சிகளையல்ல என்பது அவர் வாதம். பார்வையாளர்கள் தம்மை அந்தந்தப் பாத்திரங்களுடன் ஒன்றாக இணைத்து எண்ணக்கூடாது என்று அவர் விரும்பினார். எல்லாப் பாத்திரங்களிற்கும் வெளியே நின்று நாடகத்தை அவர்கள் பார்க்கவேண்டும். அப்போது தான் தமக்குச் சமாந்தரமாக நின்று நடிக்கும் நடிகர் நடிப்புக்கூடாகத் தரும் சிந்தனையைப் பார்வையாளர் மதிப்பிடலாம். இதன்மூலம் முன்பு நடந்த பிழைகளை விடாமல் இருக்கலாம் என்றார். பிரச்ட் பார்வையாளர் சரிபிழையைக் காணவேண்டும். அத்தோடு ஏன் அது பிழை என்பதையும் சிந்திக்க வேண்டும். பார்வையாளர் நாடகத்தினின்று பாரதீனப்பட்டு இருந்தால் தான் அப்படிச் சிந்திக்க முடியும் என்பது பிரச்டின் வாதம். பார்வையாளர்களைப் பாரதீனப் படுத்தவும் பாத்திரங்களுடன் தம்மை ஒன்றாக நினைப்பதைத் தடுக்கவும் பிரச்ட் பல உத்திகளைக் கையாண்டார்.

அவருடைய செட்டிங்குகள் யதார்த்தத்திற்கு மாறானவையாக இருந்தன. உண்மையான நடிகனை அவர் பாலித்தார். தொங்கவிடப்பட்ட திரைகளில் நடிக்கும் இடம் எழுதப்பட்டது. அவருடைய ஒளியமைப்பு எப்போதும் இயற்பண்பு வாய்ந்ததாக இருக்கவில்லை. பிரதிபலித்துக் காட்டுபவை பார்வையாளர்களிற்குப் பின்னால் போதியளவு ஒளியை மண்டபம் முழுவதிலும் வழங்கிக் கொண்டிருந்தது. ஒருத்தர் புத்தகம் வாசிக்குமளவு வெளிச்சம் அங்கு இருந்தது. ஒளிப்பொட்டுக்களைத் தரும் லைட்டுக்கள் சுவர்களிலும் சிலிங்குகளிலும் பார்வையாளர்களுக்குத் தெரியும்படி அமைக்கப்பட்டன.

தொடர்பை அறுக்கவும் உணர்ச்சிகளின்று பார்வையாளர்களை விடுவிக்கவும் பிரச்ட் பாடல்களைப் பாவித்தார். இதனை அவர் ஆசிய அரங்கில் இருந்து பெற்றுக் கொண்டார். முழுமையாக ஒரு பாத்திரத்தின் புற உருவை பிரக்ட் தனது நடிகர்களிலிருந்து காட்டியபோதும் அது ஒரு கருத்துச் சார்ந்த கற்பனையாக இருந்தது. நடைமுறையில் அது வரவேற்புப் பெறவில்லை. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண இலக்கியப்பரப்பில் மிகவும் ஆரோக்கியமாகவும் துரிதமாகவும் வளர்ந்துவரும் "ஜீவநதி" சஞ்சிகையின் பிரதம ஆசிரியர்

## க. பரணிதரனுடன் ஓர் நேர்காணல்

நேர்கண்டவர் :- S. தனேஸ்வரி

***ஜீவநதி பிரதம ஆசிரியர் பற்றிய சில வார்த்தைகள்***

செல்வன் க.பரணிதரன் அவர்கள் அல்வாயினைப் பிறப்பிடமாகவும் கலாநிதி க. கலாமணி அவர்களின் சிரேஷ்ட புதல்வன் ஆவார் இவர் சஞ்சிகை உலகில் சாதனை நடாத்தும் இளைய சஞ்சிகை ஆசிரியர் ஆவர். குறைந்த வயதில் ஓர் சஞ்சிகையின் பிரதம ஆசிரியராக கடமையாற்றும் இவர் அறிவுப் பின்புலம் மாணவ சமுதாயத்திற்கு ஓர் வழிகாட்டியாக அமையும் என நம்புகின்றேன். இவர் யாழ் பல்கலைக்கழகத்தின் உளவியல்த்துறையில் உதவி விரிவுரையாளராகவும் பணியாற்றுவது குறிப்பிடத்தக்கது.

**கேள்வி**

1. நீங்கள் இவ்வாறு பல்துறை ஆற்றல் உள்ளவராகக் காணப்படுவதற்கு நீங்கள் எடுத்த முயற்சிகளையும் அவற்றின் பின்புலத்தில் உள்ளவர்களையும் குறிப்பிடுங்கள்.

**பதில்:-** எனது குடும்பப் பின்னணியும் நான் வளர்ந்த சூழலும் என்னிடையே பல்வகையான ஆற்றல்கள் உருவாகக் காரணமாக அமைந்தன. எனது அப்பப்பா நடிகை வேள், நடிக நிலா தம்பிஜயா அவர்கள் மூலமாக எனது தந்தையார் கலாநிதி த. கலாமணி அவர்களுக்கு இசை நாடகம் கற்றுக் கொடுக்கப்பட்டு அவர் மூலமாக இசை நாடகங்களைக் கற்றுக் கொண்டேன். இது வரையில் 40 தடவைக்கு மேல் இசை நாடகங்களை நடித்துள்ளேன். கல்விக்கு வழிகாட்டியாக எனக்குக் கற்பித்த ஆசிரியர்கள் அனைவரையும் கூறலாம். குறிப்பாக உயர் தரத்தில் எனக்குக் கற்பித்த எஸ். தனேஸ்வரி ஆசிரியை, க. திலகநாதன் ஆசிரியர், எஸ் சத்தியசீலன் ஆசிரியர் ஆகியோரைக் குறிப்பிடலாம். இவை எல்லாவற்றையும் விட எனது தாயாரின் கற்பித்தல் என்னை முழுமையடையச் செய்ததாக எண்ணுகின்றேன். நீண்ட நாட்களாக எனக்குப் பத்திரிகைத் துறை மீது நாட்டம் இருந்தது. அதன் பின்னணியில் தனிப்பட்ட எனது அயராத உழைப்பின் மூலமாக வெளிவந்ததே ஜீவநதி சஞ்சிகை யாழ்ப்பாணத்தில் இருந்து ஒழுங்காக வருகின்ற ஒரு சஞ்சிகை இல்லாத தருணத்தில் ஜீவநதி வெளிவந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்திற்கு வேண்டிய நற்கருத்துக்களைக் குறிப்பிடவும் சமூக மாற்றத்தை வேண்டியும் இச்சஞ்சிகை வெளியிட்டு வருகின்றேன். சஞ்சிகை வெளியீட்டோடு மட்டும் நின்று விடாது ஜீவநதி பதிப்பாக 15 நூல்கள் இது வரையில் வெளிவந்துள்ளன. மற்றவர்களின் விமர்சனங்களைக் கண்டு நான் அஞ்சவது கிடையாது. என்னால் ஆன நல்ல காரியங்கள் செய்து முடிக்க வேண்டும் என்ற மனப்பாங்கு தான் என்னைச் சோர விடாது செயற்பட்டுக் கொண்டு இருக்கத் தூண்டுதலாக உள்ளது. ஒரு துறையில் செயற்படுவதை விட எல்லாத் துறைகளிலும் செயற்பட்டு வெற்றி காண வேண்டும் என்ற அவாவும் எனது முயற்சிகளுமே, சஞ்சிகை வெளியீடு, பதிப்பு முயற்சிகள், விளையாட்டு நாடகம் உளவியல் துறை எனது வெற்றிகள் அனைத்தின் பின்னும் அப்பாவும் அம்மாவும் காரண கர்த்தாக்களாக இருந்துள்ளார்கள். இருக்கின்றார்கள்.

**கேள்வி**

2. ஒரு படைப்பாளியாகவும் ஒரு வாசகனாகவும் நீங்கள் இருந்திருக்கின்றீர்களா? அவ்வாறாயின், அந்த அனுபவம் நீங்கள் படைப்பாளியாக வருவதற்கு எவ்வகையில் உதவியது?

**பதில்:-** வாசிப்பினால் ஒரு மனிதன் பூரணத்துவம் அடைகின்றான்' என்பது முன்னோர் வாக்கு. எனது ஆரம்ப வாசிப்பு அம்புலிமாமா, பால மித்திரா, கண்ணன் கதைகள் மகாபாரதக்கதை என்பவற்றில் ஆரம்பித்து. சிறு வயதில் இவ்வாறான புத்தகங்களை வாசிப்பது சிறு பராயத்திலேயே எம்மிடையே வாசிப்பு மீது ஓர் ஈர்ப்பை ஏற்படுத்தும் என்பதில் ஐயம் இல்லை. அப்பா ஓர்எழுத்தாளனாக இருப்பதனால் எனது வீடு புத்தகங்களால் நிறைந்து காணப்படும். ஓய்வாக இருக்கின்ற சமயங்களில் நான் வீட்டில் உள்ள புத்தகங்களை வாசிப்பேன். காலப்போக்கில் வாசிப்பின் மூலம்அடைந்த அனுபவமே என்னை எழுதத் தூண்டியது. பல நூல்களை வாசித்ததன் மூலம், மொழி நடைச் சிறப்பு, உவமைகள் கையாளப்படும்விதம், குறியீடுகளைக்கையாளும் முறை, வசன ஒழுங்கு, கருவை வெளிப்படுத்தும்விதம், மொழிச்சிக்கனம் என்பவற்றை நன்கு உணர்ந்து கொள்ள முடிந்தது. இதன்பின்னரே என்னாலும் எழுத முடியும் என்ற நம்பிக்கை பிறந்து படைப்பாளியாக உருவாகினேன்.

**கேள்வி**

3. உங்களது முதலாவது படைப்பு எது? அந்தப் படைப்புப் பற்றி உங்களுக்குக் கிடைத்த பாராட்டுக்கள் எவை?

**பதில்:-** எனது முதல் படைப்பு கவிதை, அக்கவிதை மெட்ரோ பத்திரிகையில் வெளிவந்தது. ஆரம்ப நாட்களில் வலம்புரி, உதயன், ஈழநாடு, மெட்ரோ ஆகிய பத்திரிகைகளில் கவிதைகளையே எழுதி வந்தேன். இது நண்பர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. கவிதைகள் ஊடாகக் கிடைத்த அனுபவம் என்னைச் சிறுகதைகள், கட்டுரைகள் எழுதத் தூண்டின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி**

4. உங்கள் எழுத்துத் துறைக்கு யாரை இலட்சிய மனிதனாகக் கொண்டுள்ளீர்கள்?

**பதில்:-** என்னை பொறுத்த வரையில் சமூகத்திற்காக, சமூக முன்னேற்றம் வேண்டி, சமூக மாற்றத்திற்காக எழுதுகின்ற எழுத்தாளர்களை எனக்கு முன்னோடியாகக் கொள்கின்றேன். அந்த வகையில் சமூக நோக்கோடு இலக்கியம் படைக்கும் இலக்கியப் படைப்பாளிகள் அனைவரையும் நான் இலட்சிய மனிதர்களாகக் கொள்கின்றேன்.

**கேள்வி**

5. உங்கள் வளர்ச்சிக்குப் பின்னணியாக யாரும் இருந்துள்ளார்களா? அவ்வாறாயின் அவர்கள் பற்றிக் கூற முடியுமா?

**பதில்:-** ஒவ்வொரு மனிதனது வெற்றிக்குப் பின்னாலும் யாரோ ஒருவர் இருந்து கொண்டே இருப்பார். எனது வெற்றிக்குப் பின்னால் முதற் காரணமாக இருப்பவர்கள் அப்பாவும் அம்மாவுமே. பெற்றோர் கொடுக்கும் ஊக்கமே என்னைச் சோராது செயற்படத் தூண்டுகிறது. அத்தோடு எனது வளர்ச்சிக்குக் காரணமாகவும் என்றும் உறுதுணையாகவும் எழுத்தாளர்களும் நலன்விரும்பிகளும் உள்ளனர். குறை நிறைகளைச் சுட்டிக் காட்டி இளையவனான என்னை வழிப்படுத்தி வெற்றி அடையச்செய்வதில் பல எழுத்தாளர்களுக்குப் பங்கு உண்டு. இது மதம் கடந்து எல்லோரும் தமிழர் என்ற ரீதியில் இடம்பெற்று வருகிறது. முஸ்லிம் நண்பர்கள், மலையக நண்பர்கள் பலர் எனக்குச் சிறந்த அறிவுரைகளை வழங்கி வருகின்றனர். குறிப்பாக எழுத்தாளர் தெணியான், அருட்தந்தை இராசேந்திரம் ஸ்ரலின், அ.விஷ்ணுவர்த்தனி வெ.துஷ்யந்தன் ஆகியோர் எனது வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கின்றனர்.

**கேள்வி**

6. உங்கள் தூர இலட்சியம் யாது? அது பற்றிக் கூறமுடியுமா?

**பதில்:-** சமூக நோக்கான இலக்கியங்களைப் படைப்பதன் மூலம் நல்லதொரு சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். மனதை ஈர்க்க வல்ல படைப்புகளைப் படைக்க வேண்டும். வாசகர்களுக்கு நல்ல பல நூல்களை வெளியிட்டுக் கொடுக்க வேண்டும். எனது ஊரில் நல்லதொரு நூலகத்தை உருவாக்க வேண்டும். தரமான இலக்கியங்களைப் படைத்து இலக்கியத்திற்கான பரிசுகளைப் பெற வேண்டும்.

**கேள்வி**

7. சஞ்சிகை ஒன்றிலே இடம்பெற வேண்டிய விடயங்களாக என்ன என்ன இடம்பெற வேண்டும் எனற் நீங்கள் கூறுகின்றீர்களா?

**பதில்:-** சஞ்சிகையின் உள்ளடக்கங்களாக, சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் நேர்காணல்கள், குறுநாவல்கள், பத்தி எழுத்துக்கள் நூல் விமர்சனங்கள், அறிமுகக் குறிப்புகள் என்பவை கட்டாயம் இடம்பெற வேண்டும். இவற்றோடு துணுக்குகள், ஆரோக்கியமான ஜோக்ஸ் என்பவற்றைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சிகையில் எத்தனை ஆக்கங்கள் இடம்பெறுகின்றன என்பது முக்கியம் அல்ல, அந்த ஆக்கங்களில் சொல்லப்படும் கருத்துக்களை முக்கியமாகும்.

கேள்வி

8. இன்றைய இளைய சமுதாயத்திற்கு ஜீவநதி என்ற சஞ்சிகை மூலம் எவற்றைக் கையளிக்கின்றீர்கள்?

பதில்:- 'ஜீவநதி' சஞ்சிகை வெளியீடு என்பது எனது பாடசாலைக் கலவிக்காலம் முதலே என்னுள் கருக்கொண்ட ஒன்று. வாசிப்புப் பரப்பு விரிவடைந்தபோது ஜீவநதி மூலம் ஆற்ற வேண்டியவற்றின் திட்டம் குறித்த சிந்தனையும் விரிவடைந்தது 'ஜீவநதி' சஞ்சிகையின் பிரதம ஆசிரியராக இருந்து 42 இதழ்களையும் தொடர்ச்சியாக வெளிக்கொண்டு வந்த நிலையில் 'ஜீவநதி' மூலம் எமது இளைய சமுதாயத்திற்குப் பலவற்றைக் கையளிக்க முடிகின்றது என்றே நம்புகிறேன். முதலில் எமது ஈழத்து இலக்கியப் பாரம்பரியத்தைக் கையளிப்பதற்கான முயற்சிகளை ஜீவநதி முன்னெடுத்து வருகின்றது. ஈழத்து இலக்கிய கர்த்தாக்கள் குறித்த கட்டுரைகளும் ஈழத்து இலக்கிய கர்த்தாக்களின் படைப்புகளும் ஜீவநதியில் இடம்பெற்று வருவது எமதுஇலக்கியப் பாரம்பரியத்தைக் கையளிக்கும் பொருட்டே. இத்தோடு, ஈழத்து இலக்கிய விற்பன்னர்களுடனான நேர் காணல்களும் எமது இலக்கியப் பாரம்பரியத்தைத் துலாம்பரமாக எடுத்துக் காட்டுவனவாக உள்ளன. இவை மாத்திரமன்றி எதிர் காலநோக்கில், எமது இலக்கியம் எவ்வாறு அமைய வேண்டும் என்ற கருத்துகளும் முன் வைக்கப்படுகின்றன.

உண்மையான இலக்கிய நேர்மையுடன் தொழிற்படும்போது, குழு நிலை வாதத்தையும் மறந்து இலக்கியகாரர்களை ஒன்றுபடச் செய்ய முடியும் என்ற எனது அநுபவத் தெளிவையும் கூட இளையவர்களுக்குக் கையளிக்கின்றேன். 'ஜீவநதி'யானது சமுதாய முன்னேற்றத்துக்கான தூர நோக்கோடு இளைய தலைமுறைப் படைப்பாளிகளையும் உலகளாவிய ரீதியில் வளர்த்தெடுக்க வேண்டும் என்ற குறிக்கோளையும் உள்ளடக்கியதாகத் தான் வெளிவந்து கொண்டிருக்கின்றது. இவை எல்லாம் ஜீவநதியின் வாசகர்களுக்கு விளங்கும் என்ற நம்புகிறேன்.

கேள்வி

9. இன்றைய வாசகர் கூட்டம் பற்றி நீங்கள் யாது கூற விரும்புகிறீர்களே?

பதில்:- 'இன்றைய வாசகர்' என்று குறிப்பிடும்போதே, வாசிப்பவர்களையே அது குறிக்கின்றது. வாசிக்காதவர்களை அது குறிக்காது. எனவே வாசிப்பு ரசனையற்வர்களை விடுத்து இன்றைய வாசகர்களை எடுத்துநோக்குவோமேயானால் இன்றைய வாசகர்களே கவனம் உள்ள வாசகர்களாகவே விளங்குகின்றார்கள். தமது வாசிப்பின்போது தமது அறிவுப் பின்புலத்தையும் பயன்படுத்தி, விமர்சன நோக்கில் வாசிப்புக்குட்படுத்தப்படும் விடயங்களை அலசியும் வருகின்றார்கள் என்பது வாசகர்களின் கருத்துக்களில் வெளிப்படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி**

10. பிரதம ஆசிரியராக நீங்கள் பணியாற்றும்போது என்ன பிரச்சினைகளை எதிர்கொள்கின்றீர்கள்? என்னென்ன மகிழ்வுகளை உணருகின்றீர்கள்?

**பதில்:-** ஜீவநதியை தொடர்ச்சியாகக் குறித்த திகதியில் வெளிக்கொணர்வதற்கு சூழற்காரணிகள் யாவும் ஒத்துழைக்காதபோது பிரச்சினைகளை எதிர்கொள்கின்றேன். கட்டுரைகள், படைப்புக்கள் தபாலில் வந்து சேருவதில் உள்ள தாமதம், எதிர்பாராத வகையில் இடம்பெறும் மின்வெட்டுக்கள் போன்றவை இவ்வகையில் அடங்கும் உடல்நலம் குன்றி வேலைகள் தடைப்படும்போதும், உளப்பாதிப்புக்களை ஏற்படுத்தும் வகையில் ஒருசிலர் அவதூறுகளை பொறுப்பற்றமுறையில் வெளிப்படுத்தும்போது உண்டாகும் மனச்சோர்வின்போதும் அவை பிரச்சினைகளாக உணரப்படுகின்றன.

ஆனால், எல்லாத் தடைகளையும் பிரச்சினைகளையும்வென்று சமாளித்து குறித்த திகதியில் 'ஜீவநதி' சஞ்சிகையை வெளிக்கொண்டு வரும்போது அது மகிழ்வைத்தரும். ஜீவநதிக்கு விசுவாசமாக உள்ளவர்களிடம் இருந்து கிடைக்கப்பெறும் பாராட்டுக்களும் ஜீவநதியின் மேம்பாட்டுக்கள் கருத்துக்களும் கூட மகிழ்வைத்தரும்.

**நன்றி பரணிதரன் அவர்களே.**

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The 8 Good Habits of Highly Distinguished Students

The 8 good habits of highly distinguished Students are:

1) Right Understanding
2 Right Thought
3) Right Speech
4) Right Action
5) Right Livelihood
6) Right Effort
7) Right Mindfulness
8) Right Concentration

### Good Habit #1 - RIGHT UNDERSTANDIND

A bad beginning usually has a bad ending
The only good way to make a sensible start is to make a right start by trying to get RIGHT UNDERSTANDING. RIGHT UNDERSTANDING means correct understanding, the best understanding, understanding that is true, understanding that is not half- true, or half-false, but is the very best and most complete understanding you can get.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Let say you have a car and you have just filled the tank full with petrol,. You have a road map and you know very well where you want to go. There is only one problem to keep you from starting your trip. You do not know how to drive, until you gain the proper understanding of how to drive, the car is useless to you. If you try to drive without knowing how, you place yourself in great danger.
Unless you first get RIGHT UNDERSTANDING you cannot make right use of the 7 good habits For example, students who understand that it is to their own benefit to learn would work hard to learn more and do better. When you do well, everyone will be happy, including your parents and teachers.
A highly distinguished student put into practice this good habit into everyday life.

**Good Habit #2-RIGHT THOUGHT**

RIGHT THOUGHT means to think in the right way. Those who harbor ugly thoughts of anger, cruelty, desire, envy, greed, hatred, ill will, jealousy, laziness, lust, revenge or unkindness will easily get into trouble but if you think correctly, you would end up doing the right things.

For example, if you harbor the RIGHT THOUGHTS, you will know that being lazy may make fail in exams. This would mean spending another year repeating the same exams. So you would decide to work hard rather than be grumpy about school work.
There is an old saying: "Look before you leap."
it would be much better abvice if worded: "Look and THINK before you leap"
if you have no real resolution, no well-planned aim in life, and do but little thinking, then the result can only be a life full of confusion and unhappiness.
Therefore, you must do your best possible thinking with the best possible aim.
Be clear of what you are going to do from the beginning to the end.
Be humble, sincere, and respectful.Do not think you are on top of everything

**Good Habit # 3 - RIGHT SPEECH**

RIGHT SPEECH is the control of your thongue by right thought. Your speech must be free from abusive words, backbiting, deceit, falsehood, foul language, gossip, harsh words, Idial talk, lies offensive language, rudeness, silly talk, slandering, stupid chatter, swear words, tale telling and vain talk.
You must speak in such a way that your kind and gentle words of reasonableness will bring happiness to all with whom you talk. If you cannot bring happiness to others by your words, at least you must not injure them by wrong speech. Lying is one of the worst forms of wrong speech. A lie that causes hurt to someone else is worst of all.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சிகையில் எத்தனை ஆக்கங்கள் இடம்பெறுகின்றன என்பது முக்கியம் அல்ல, அந்த ஆக்கங்களில் சொல்லப்படும் கருத்துக்களை முக்கியமாகும்.

கேள்வி

8. இன்றைய இளைய சமுதாயத்திற்கு ஜீவநதி என்ற சஞ்சிகை மூலம் எவற்றைக் கையளிக்கின்றீர்கள்?

பதில்:- 'ஜீவநதி' சஞ்சிகை வெளியீடு என்பது எனது பாடசாலைக் கலவிக்காலம் முதலே என்னுள் கருக்கொண்ட ஒன்று. வாசிப்புப் பரப்பு விரிவடைந்தபோது ஜீவநதி மூலம் ஆற்ற வேண்டியவற்றின் திட்டம் குறித்த சிந்தனையும் விரிவடைந்தது 'ஜீவநதி' சஞ்சிகையின் பிரதம ஆசிரியராக இருந்து 42 இதழ்களையும் தொடர்ச்சியாக வெளிக்கொண்டு வந்த நிலையில் 'ஜீவநதி' மூலம் எமது இளைய சமுதாயத்திற்குப் பலவற்றைக் கையளிக்க முடிகின்றது என்றே நம்புகிறேன். முதலில் எமது ஈழத்து இலக்கியப் பாரம்பரியத்தைக் கையளிப்பதற்கான முயற்சிகளை ஜீவநதி முன்னெடுத்து வருகின்றது. ஈழத்து இலக்கிய கர்த்தாக்கள் குறித்த கட்டுரைகளும் ஈழத்து இலக்கிய கர்த்தாக்களின் படைப்புகளும் ஜீவநதியில் இடம்பெற்று வருவது எமதுஇலக்கியப் பாரம்பரியத்தைக் கையளிக்கும் பொருட்டே. இத்தோடு, ஈழத்து இலக்கிய விற்பன்னர்களுடனான நேர் காணல்களும் எமது இலக்கியப் பாரம்பரியத்தைத் துலாம்பரமாக எடுத்துக் காட்டுவனவாக உள்ளன. இவை மாத்திரமன்றி எதிர் காலநோக்கில், எமது இலக்கியம் எவ்வாறு அமைய வேண்டும் என்ற கருத்துகளும் முன் வைக்கப்படுகின்றன.

உண்மையான இலக்கிய நேர்மையுடன் தொழிற்படும்போது, குழு நிலை வாதத்தையும் மறந்து இலக்கியகாரர்களை ஒன்றுபடச் செய்ய முடியும் என்ற எனது அநுபவத் தெளிவையும் கூட இளையவர்களுக்குக் கையளிக்கின்றேன். 'ஜீவநதி'யானது சமுதாய முன்னேற்றத்துக்கான தூர நோக்கோடு இளைய தலைமுறைப் படைப்பாளிகளையும் உலகளாவிய ரீதியில் வளர்த்தெடுக்க வேண்டும் என்ற குறிக்கோளையும் உள்ளடக்கியதாகத் தான் வெளிவந்து கொண்டிருக்கின்றது. இவை எல்லாம் ஜீவநதியின் வாசகர்களுக்கு விளங்கும் என்ற நம்புகிறேன்.

கேள்வி

9. இன்றைய வாசகர் கூட்டம் பற்றி நீங்கள் யாது கூற விரும்புகிறீர்களே?

பதில்:- 'இன்றைய வாசகர்' என்று குறிப்பிடும்போதே, வாசிப்பவர்களையே அது குறிக்கின்றது. வாசிக்காதவர்களை அது குறிக்காது. எனவே வாசிப்பு ரசனையற்வர்களை விடுத்து இன்றைய வாசகர்களை எடுத்துநோக்குவோமேயானால் இன்றைய வாசகர்களே கவனம் உள்ள வாசகர்களாகவே விளங்குகின்றார்கள். தமது வாசிப்பின்போது தமது அறிவுப் பின்புலத்தையும் பயன்படுத்தி, விமர்சன நோக்கில் வாசிப்புக்குட்படுத்தப்படும் விடயங்களை அலசியும் வருகின்றார்கள் என்பது வாசகர்களின் கருத்துக்களில் வெளிப்படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி**

10. பிரதம ஆசிரியராக நீங்கள் பணியாற்றும்போது என்ன பிரச்சினைகளை எதிர்கொள்கின்றீர்கள்? என்னென்ன மகிழ்வுகளை உணருகின்றீர்கள்?

**பதில்:-** ஜீவநதியை தொடர்ச்சியாகக் குறித்த திகதியில் வெளிக்கொணர்வதற்கு சூழற்காரணிகள் யாவும் ஒத்துழைக்காதபோது பிரச்சினைகளை எதிர்கொள்கின்றேன். கட்டுரைகள், படைப்புக்கள் தபாலில் வந்து சேருவதில் உள்ள தாமதம், எதிர்பாராத வகையில் இடம்பெறும் மின்வெட்டுக்கள் போன்றவை இவ்வகையில் அடங்கும் உடல்நலம் குன்றி வேலைகள் தடைப்படும்போதும், உளப்பாதிப்புக்களை ஏற்படுத்தும் வகையில் ஒருசிலர் அவதூறுகளை பொறுப்பற்றமுறையில் வெளிப்படுத்தும்போது உண்டாகும் மனச்சோர்வின்போதும் அவை பிரச்சினைகளாக உணரப்படுகின்றன.

ஆனால், எல்லாத் தடைகளையும் பிரச்சினைகளையும்வென்று சமாளித்து குறித்த திகதியில் 'ஜீவநதி' சஞ்சிகையை வெளிக்கொண்டு வரும்போது அது மகிழ்வைத்தரும். ஜீவநதிக்கு விசுவாசமாக உள்ளவர்களிடம் இருந்து கிடைக்கப்பெறும் பாராட்டுக்களும் ஜீவநதியின் மேம்பாட்டுக்கள் கருத்துக்களும் கூட மகிழ்வைத்தரும்.

**நன்றி பரணிதரன் அவர்களே.**

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The 8 Good Habits of Highly Distinguished Students

The 8 good habits of highly distinguished Students are:

1) Right Understanding
2 Right Thought
3) Right Speech
4) Right Action
5) Right Livelihood
6) Right Effort
7) Right Mindfulness
8) Right Concentration

**Good Habit #1 - RIGHT UNDERSTANDIND**

A bad beginning usually has a bad ending
The only good way to make a sensible start is to make a right start by trying to get RIGHT UNDERSTANDING. RIGHT UNDERSTANDING means correct understanding, the best understanding, understanding that is true, understanding that is not half- true, or half-false, but is the very best and most complete understanding you can get.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Let say you have a car and you have just filled the tank full with petrol,. You have a road map and you know very well where you want to go. There is only one problem to keep you from starting your trip. You do not know how to drive, until you gain the proper understanding of how to drive, the car is useless to you. If you try to drive without knowing how, you place yourself in great danger.
Unless you first get RIGHT UNDERSTANDING you cannot make right use of the 7 good habits For example, students who understand that it is to their own benefit to learn would work hard to learn more and do better. When you do well, everyone will be happy, including your parents and teachers.
A highly distinguished student put into practice this good habit into everyday life.

## Good Habit #2-RIGHT THOUGHT

RIGHT THOUGHT means to think in the right way. Those who harbor ugly thoughts of anger, cruelty, desire, envy, greed, hatred, ill will, jealousy, laziness, lust, revenge or unkindness will easily get into trouble but if you think correctly, you would end up doing the right things.

For example, if you harbor the RIGHT THOUGHTS; you will know that being lazy may make fail in exams. This would mean spending another year repeating the same exams. So you would decide to work hard rather than be grumpy about school work.
There is an old saying: "Look before you leap."
it would be much better abvice if worded: "Look and THINK before you leap"
if you have no real resolution, no well-planned aim in life, and do but little thinking, then the result can only be a life full of confusion and unhappiness.
Therefore, you must do your best possible thinking with the best possible aim.
Be clear of what you are going to do from the beginning to the end.
Be humble, sincere, and respectful.Do not think you are on top of everything

## Good Habit # 3 - RIGHT SPEECH

RIGHT SPEECH is the control of your thongue by right thought. Your speech must be free from abusive words, backbiting, deceit, falsehood, foul language, gossip, harsh words, Idial talk, lies offensive language, rudeness, silly talk, slandering, stupid chatter, swear words, tale telling and vain talk.
You must speak in such a way that your kind and gentle words of reasonableness will bring happiness to all with whom you talk. If you cannot bring happiness to others by your words, at least you must not injure them by wrong speech. Lying is one of the worst forms of wrong speech. A lie that causes hurt to someone else is worst of all.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

At times, it is better you keep silence than to hurt another with one's speech.
Kind people do not use cruel or harsh language and wise people do not foolish speech.
Remember, PLEASANT SPEECH is as sweet as honey. TRUTHFUL SPEECH is beautiful like a flower and WRONG SPEECH is unwholesome like filth.
Therefore, you should SPEAK words that are TRUTHFUL, MEANINGFUL and with GOODWILL.

**Good Habit # 4-RIGHT ACTION**

RIGHT ACTION means to perform deeds, which do not cause suffering to yourself and others.
RIGHT ACTION aims at honorable, moral and peaceful conduct. It is the abstention from taking any form of life, from dishonest acts like stealing, cheating, corruption and sexual promiscuity and from taking liquors & drugs, both of which confuse your mind and cause much misery.
There is an ancient proverb that says: "Actions speak louder than words."
Good words ought to be coupled with good deeds.
No matter how cleverly you may try always to speak in a good way, you will fail to disguise your true nature unless your acts are the same as your words.
Before you make a promise, you ought to ask yourself if you are able to make your actions fit in with your words, Those who fail to keep promises soon are not respected.
If you think and act wisely and well, then you need not feel shameful of your conduct.
Wise thought coupled with wise action brings the respect of others and keeps you from ever losing your self respect.

**Good Habit # 5- RIGHT LIVELIHOOD**

RIGHT LIVELIHOOD means not to live on work that would in anyway bring harm to living beings.
RIGHT LIVELIHOOD implies that you should earn your living by honorable means. Work that involves slaughtering living creatures, sale of animal flesh, manufacture or sale of liquors, drugs, tobaccos, weapons, poisons, including the trading of pople, gambling, are all harmful to manking and should be forbidden.
If anyone suffers as a direct result of your work. then it is not RIGHT LIVELIHOOD. Therefore yor should choose an occupation that is likely to be source of helpfulness and happiness to others.
For example, a student who wishes to study to be a doctor is planning a life work that will be a blessing to many.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A doctor can ease human suffering. This occupation is considered to be very meritorious. Those who grow food or build houses, construct roads and bridges or any other occupation that is of real value to the human race, are all earning.
RIGHT LIVELIHOOD,
If your choice of occupation is not helpful to mankind, at least you must make sure that it will not be harmful to anyone.
Remember, do not earn your living by harming others. Do not seek happiness by making others unhappy.

**Good Habit # 6-RIGHT EFFPRT**

RIGHT EFFORT means to do your best to become a better person.
Examples of these are to work hard, to drop bad habits such as using foul language, Laziness quick/hot temper, smoking and taking drugs & liquors.
Each of you must make real effort to lead a good, moral helpful life. Many of you have good ideas and good intentions, but you do not use effort to put your good ideas into practice.
Another mistake made by students is the bad habit of putting off until tomorrow or next week or next month what they ought to do today. The only time you can be sure of is today, yesterday has gone and tomorrow has not come. The best time to begin to put forth RIGHT EFFORT is this very day.
If you sit on the beach and look at the water, wishing you knew how to swin, you will never know until you make an effort to swin.
Another way of naming Right Effort is Right Trying. You cannot get happiness or any good thing out of life until you really try.
Try to use your best efforts to be happy and actually use this good habit in your daily lives. The sooner you practice this good habit, the sooner you shall find real happiness.

**Good Habit # 7 - RIGHT MINDFULNESS**

RIGHT MINDFULNESS means to be always aware and attentive. That is keeping your mind on what you are doing.
Any job you are doing is a job that is done better if you use RIGHT MINDFULNESS. If you fail to focus your attention on what you are doing, then it is very likely that the finished job will not be satisfactory.
The most successful student are those who have trained themselves to give complete attention to whatever subject they may be studying.
You would have a far better chance to pass all your exams if you give your undivided attention to each subject in its turn.
Have you ever noticed that when you are trying to do three or four things at the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

same time, you usuall get them only partly finished or, at most, imperfectly done? That is because there is divided attention.

Divided attention is never RIGHT ATTENTION.

It is almost impossible for you to be successful in life and find real happiness if you cannot concentrate your attention on whatever you may have to do from day to day.

**Good Habit # 8 - RIGHT CONCENTRATION**

RIGHT CONCENTRATION means to keep your mind steady and calm in order to see clearly the true nature of things.

It is the shutting out of your mind of all but only one thought

You must concentrate on everything you do before you can do it well

For instance, if you concentrate in class, you would not miss anything the teacher says.

You must think only good thoughts.

You must speak only good words and do only good deeds.

In RIGHT CONCENTRATION you endeavor to develop 'one-pointedness of mind'

This means, training your mind to concentrate on one subject only without jumping from idea to idea.

Remember, this practice can make you become more understanding & a happier person.

**CONCLUSION**

These 8 good habits can help you prevent problems or deal with any problems you may come across in your daily life

If you follow it, you are on the way to less suffering and more happiness

These 8 good habits lead to a cultured mind for only when the mind is brought under control. are you able to become a highly distinguished student.

Violation of these 8 good habits means the introduction of obstacles on the path, which will obstruct your progress.

Observance of these 8 habits means steady and smooth progress along the path

Your conduct today will determine your future

In life, you are not pawns in a game, but the makers of the game. You cannot, undo your past, but with these 8 good habits at your disposal, you can shape for yourself, a joyful future.

You will then attain purity, Equality, Honesty, Contentment, Compassion, and overall, True Happiness

Good luck.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயரத்துடன்....

காணாமல் போன தமிழர்கள் நாங்கள்
கனவுகள் மறந்து விட்டோம்
ஏனென்றும் தெரியாது எதற்கென்று புரியாது
எம்மையே துறந்துவிட்டோம்

பள்ளி மழலையுடன் பல்லில்லா கிழவரும்
பூமியில் புதைந்துள்ளோம்
அள்ளி தமிழ் பருகும் ஆனந்தக்கூத்தாடும்
அற்புதம் சிதைந்துள்ளோம்

யாரைச் சொல்லியபடி யாமிங்கு புதையுற
யார் சூழி போட்டாரையா?
யாழில் பிறந்திட்ட யாம் செய்த பாவங்கள்
யமன் தானும் அறிவானோயா?

கையில் குழந்தையுடன் கைப்பெண்ணாய் தாரமும்
கண்களில் ஒளி இழந்து
மிக்க வருத்தமுடன் முதியோராய் பெற்றோரும்
மேதினியில் ஏங்கிநிற்க

கட்டணம் ஏதுமின்றி கையோடு விசா பெற்று
கனவாக வந்து சேர்ந்தோம்!
பட்ட பாடென்ன பெற்றிட்ட வதையென்ன
பாவிகள் நொந்து சேர்ந்தோம்

மெல்ல அமைதி பெற்று மெதுவாக இம்மண்ணில்
மீளாத்துயிலும் கொண்டோம்
கல்லும் கரையுமெங்கள் கதை கேட்டால்
கண்ணீர் காவியங்கள் ஆகிவிட்டோம்

**யோ. மாதங்கி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை சேவையும் அதன் அவசியமும்

செல்வி . தமயந்தி சிவராசா, B.A, Dip. in.Edu

பாடசாலைக் கல்வி மாணவருக்கான அறிவை வழங்குவதோடு மட்டும் நின்றவிடாது அவர்களது ஆளுமை விருத்தியை மேம்படுத்தி, சவால்களை எதிர்கொண்டு வெற்றி பெறுவதற்கான தயார்படுத்தலை ஏற்படுத்தி, சமூகத்துடன் இயைபுபட்டு வாழத்தக்க பொருத்தப்பாடு உடையவர்களாக மாற்றுவதையும் நோக்கமாகக் கொண்டது.

இந் நோக்கத்தினை அடைதல் என்பது முன்னைய காலங்களில் ஓரளவு இலகுவானதாகக் காணப்பட்டது. ஆனால் இன்று மாணவர்கள் பல்வேறுபட்ட பிரச்சனைகளை உள்ளடக்கியவர்களாகக் காணப்படுகின்றனர். அன்புப் பரிமாற்றமற்ற குடும்ப நிலைமை, வறுமை, அச்சந்தரும், சூழல், வன்முறை நாட்டம், பிறரை இம்சித்தல், பொறுப்புணர்ச்சி இன்மை, பெற்றோர் ஆசிரியர் உணர்வுகளைப் புரிந்து நடக்காத தன்மை போன்ற பல நெருக்கடிகளுக்குள் மாணவர்கள் சிக்கியுள்ளனர்.

இவை தவிர மாணவர்கள் பாடசாலையிலும் பல்வேறு உடல் உள விருத்திசார் நெருக்கீடுகளை எதிர்கொள்வதுடன் பல மனவழுச்சிக் குழப்பங்களுக்கும் முகம்கொடுக்க வேண்டியுள்ளது. இத்தகைய நெருக்கடிகள் மாணவரிடத்தே பாதகமான மனத்தாக்கங்களை ஏற்படுத்தவல்லன. இத்தகைய மனத்தாக்கங்களிலிருந்து மாணவர்களை விடுபடச் செய்து அவர்களது வாழ்வை மேன்மை அடையச் செய்தல் வேண்டும். கற்றலின் பின்னர் அவர்களது வாழ்வைக் கொண்ட நடாத்தத் தேவையான தொழிலுக்கும் அவர்களைத் தயார்ப்படுத்தல் வேண்டும். இவற்றுக்கெல்லாம் உதவுவதற்குப் பொருத்தமானதும் நெகிழ்ச்சி கொண்டதுமான அமைப்பு பாடசாலை மட்டத்தில் வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இவ் எதிர்பார்ப்பை நிறைவு செய்யும் நோக்கில் கல்வி அமைச்சின் செயலாளரின் 2001ம் ஆண்டு 16ம் இலக்க 2001.06.20ம் திகதிய சுற்று நிருபம் இலங்கையின் சகல பாடசாலைகளிலும் வழிகாட்டலும் ஆலோசனையும் சேவை நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்நடத்துதல் பற்றி வெளியிட்டது. இதன்படி ஒவ்வொரு பாடசாலையிலும் வழிகாட்டலும் ஆலோசனையும் சேவைக்கென ஒரு ஆசிரியர் தெரிவு செய்யப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் ஆசிரியரால் பாடசாலையில் வழங்கப்படும் வழிகாட்டல் சேவையானது ஆறுவகையான விடயங்களை உள்ளடக்கியது. அவையாவன கல்விசார் வழிகாட்டல், தனியாள் சார் வழிகாட்டல், பாடப்புறச்செயற்பாடு சார் வழிகாட்டல், உடல் நலம் சார் வழிகாட்டல், சமூகம் சார் வழிகாட்டல், தொழிசார் வழிகாட்டல் என்பவையாகும். இறை ஒவ்வொன்றும் பல நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு செயற்படுத்தப்படுகின்றன. அவற்றினை நோக்குவோம்.

- கல்விசார் வழிகாட்டலின் நோக்கங்கள்
  * மாணவர் கல்வி முன்னேற்றத்தை நெறிப்படுத்தல்
  * கற்றல் சார்பாக மாணவரின் ஊக்கல் நிலையை மேம்படுத்தல்
  * கல்வியைத் தொடர்ந்து கற்கவும் இடைநிறுத்தாமல் இருப்பதற்குமான ஆலோசனையை வழங்கல்
  * விசேட கல்வித் தேவை உடையோரை இனங்கண்டு அவர்களுக்கான பொருத்தமான கற்றல் முறைகளைக் கையாள்தல்

- தனியாள் சார் வழிகாட்டலின் நோக்கங்கள்
  * சமநிலையான ஆளுமையை விருத்தி செய்தல்
  * மனவெழுச்சிக் சமநிலையைப் பேண வழிகாட்டல்
  * தம் நல்விருத்திக்குத் தாமே பொறுப்பேற்க ஊக்குவித்தல்
  * தனியாள் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு ஆலோசனை வழங்கல்

- பாடப் புறச் செயற்பாடு சார் வழிகாட்டலின் நோக்கங்கள்
  * ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வழியில் கழிக்கச் செய்தல்
  * பொழுது போக்கு வசதிகள், சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல்
  * ஒவ்வொருவரதும் உளச்சார்பு, மனப்பாங்கு, ஆற்றல் என்பவற்றுக்கு ஏற்ப பொருத்தமான ஓய்வு நேரச் செயற்பாடுகளை தெரிவு செய்ய வழிகாட்டல்

- உடல்நலம் சார் வழிகாட்டலின் நோக்கங்கள்
  * உடற் குறைபாடுகளை இனங்கண்டு சிகிற்சைக்கு வழிப்படுத்தல்
  * பாலியல் கல்வியை வழங்கல்
  * போதைப் பொருள், புகைப்பிடித்தல் போன்ற தீய பழக்கங்களின் விளைவுகளை மாணவருக்கு அறிவுறுத்தல்
  * உடல் நலமும் உள நலமும் ஒன்றை ஒன்று சார்ந்தது என்பதை அறிவுறுத்தல்

- சமூகம் சார் வழிகாட்டுதலின் நோக்கங்கள்
  * சமூக இசைவாக்கம் பெற உதவுதல்
  * சமூகம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்
  * சமூக விழுமியங்களை விருத்தி செய்தல்
  * சமூக மேம்பாட்டிற்கு உழைப்பது தொடர்பான மனப்பாங்கை விருத்தி செய்தல்
  * குழுச் செயற்பாடு, தலைமைத்துவம் என்பவற்றிற்கான பயிற்சியை அளித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சமூக முரண்பாடுகளைத் தவிர்த்து சுமுகமான தொடர்பைப் பேண பயிற்றுவித்தல்

▲ தொழில்சார் வழிகாட்டலின் நோக்கங்கள்
* தொழில் வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்தல்
* தொழில் தெரிவுக்கான பயிற்சியை வழங்கல்
* தொழில் வாய்ப்புப் பற்றிய தகவல்களை வழங்கல்

இந் நோக்கங்கள் பாடசாலைகளில் சரியான முறையில் அடையப்பட வேண்டும். ஒவ்வொரு மாணவனும் தன்னைச் சிறப்பாக வைத்துக் கொண்டு சமூகத்திற்கும் தன்னாலான பங்களிப்பை ஆற்றல் வேண்டும். ஒரு சமூகத்தின் முன்னேற்றம் அதன் எல்லா அங்கத்தவர்களதும் விசேட பங்களிப்பிலேயே தங்கியுள்ளது. ஒரு பிள்ளை வளர்ச்சி அடையும்போது பல்வேறு நிலைமைகளுக்கும் பிரச்சனைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இந்த வேளையில் அவர்களுக்கு மற்றவர்களின் உதவி தேவைப்படுகிறது. இதனைப் பாடசாலை வழங்க வேண்டும்.

எந்த ஒரு மனிதனும் தனித்து வாழ முடியாது. சூழலுடன் இணைய வேண்டும். இதற்குப் பிள்ளையிடம் உள்ள இயல்பான ஆர்வம் மட்டும் போதுமான தல்ல மனிதத் தொடர்பை விருத்தி செய்யத்தக்க சூழலைக் குடும்பமும் பாடசாலையும் ஏற்படுத்திக் கொடுப்பது அவசியம்.

இன்றைய சூழலில் பெற்றோர் பிள்ளைகளுக்கு இடையிலான தொடர்புகள் குறைந்து வருகின்றன. குடும்ப ஒற்றுமை பிளவுபட்டுக் காணப்படுகிறது. இதன் காரணத்தால் மாணவர் உளச்சிக்கலுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இந்நிலை மாற்றி அமைக்கப்படல் வேண்டும். மேலும் இன்று எழுந்துள்ள நவீன மாற்றங்கள் புதிய புதிய பிரச்சனைகளைத் தோற்றுவிக்கின்றன. பாலியல் ஒழுக்கம், போதைப் பொருள் பாவனையின் தீங்குள் என்பன தொடர்பான விளக்கங்கள் மாணவரிடத்தே சென்றடைய வேண்டும் மாணவரிடையே தோன்றுகின்ற முரண்பாடுகள் சீராக்கப்படல் வேண்டும்.

இப்பிரச்சனைகள் அனைத்திற்குமான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளும் வகையில் ஒவ்வொரு பாடசாலைகளிலும் வழிகாட்டலும் ஆலோசனையும் சேவை ஒழுங்கமைக்கப்படல் வேண்டும். பாடசாலையும் பாடசாலைச் சமூகமும் உயர் பரீட்சைப் பெறுபேறுகள், இணைபாடவிதானச் செயற்பாடுகளில் வெற்றி என்பவற்றில் உயர் அக்கறையைச் செலுத்துகின்றது. ஆனால் இவ் வழிகாட்டலும் ஆலோசனையும் சேவை பற்றி அவ்வளவாக அக்கறை கொள்வதில்லை. பாடசாலை வழிகாட்டலும் ஆலோசனையும் சேவை மிகச் சரியாகத் தொழிற்படுமாயின் அனைத்துத் வெற்றியாக அமையும் என்பதை மறந்து விடுகின்றோம். இதனை அனைத்துப் பாடசாலைகளும் உணர்ந்து செயற்படல்வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேண்தகு அபிவிருத்திக்கான கல்வி (Education for Sustainaple Development - ESD) ஓர் அறிமுகம்

*ஆனந்தமயில் நித்திலவர்ணன்*
**BSC With Education (Hons). BEd in Natural Science, M.Ed.**
விரிவுரையாளர், கல்வியியல்துறை,
யாழ். பல்கலைக்கழகம்

மனிதனின் அபிவிருத்திக்கு பங்களிப்புச்செய்யும் பல்வேறு காரணிகளில் கல்வி முதன்மையானதாகும். கல்வி ஒரு மனிதனை

* பண்பட்ட மனிதனாகவும்
* நன்கு தகவல்களை அறிந்துகொண்டவனாகவும், தகவல்களை அறிந்து கொள்ளும் ஆற்றல்களைக் கொண்டவனாகவும்
* திறன்களைப் பெற்றுக்கொண்டவனாகவும்
* சுய கட்டுப்பாட்டினை கொண்டவனாகவும்
* தாக்கமான சுருகமான பேச்சிற்கூடாக தொடர்பாடலை மேற்கொள்ளக் கூடியனவாகவும் ஆக்குகின்றது.

இது தவிர கல்வி என்பது ஒரு மனிதனை, அத்தியாவசியமான சமுதாயக்குறிக்கோளை அவன் சாதித்துக் கொள்வதற்கு உதவும் வகையில் அதற்கு தேவையான திறன்களையும் மனப்பாங்குகளையும் அவனிடம் விருத்திசெய்தல் வேண்டும். இக்குறிக்கோள்களை ஒரு சிறந்த சமுதாயத்தின் மூன்று குணாம்சங்களின் அடிப்படையில் அடையாளம் காணமுடியும் என பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக அவர்கள் குறிப்பிடுகின்றார். அவையாவன

- நலிவுற்றவர்கள், அப்பாவிகள் மற்றும் வயது முதிர்ந்தோர் ஆகிய சமூகப் பிரிவினருக்கு பாதுகாப்பு அளிக்கப்படுவதுடன், வாழ்வதற்கான அவர்களுடைய உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கப்படுதல் வேண்டும்
- ஒவ்வொரு நபரினதும் மனச்சாந்தி மற்றும் உடல்நலன் என்பனவற்றுக்கு உசிதமான சமூக, பொருளாதார சூழலொன்று நிலவிவருதல் வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எதிர்பாராத முறையில் இடம்பெறக்கூடிய அழிவுகள் மற்றும் நெருக்கடிகள் என்பவற்றை சமாளிக்கும்பொருட்டு ஒவ்வொரு நபரும் ஒவ்வொரு சமூகமும் வளங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். என்பனவாகும்.

உலகளாவியரீதியில் ஒவ்வொரு நாடும் தமக்குப் பொருத்தமான கல்வி முறையை, கலைத்திட்டத்தை, கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை வடிவமைத்துக்கொண்டிருக்கும் நிலையில் நாம் எமது நாட்டின் கல்வி பற்றிச்சிந்தித்துப்பார்ப்பது பொருத்தமானதாகும்.

எமது நாட்டில் தற்போது காணப்படும் முறையான கல்வி மற்றும் பயிற்சி என்பன உற்பத்தித்திறன், தேசிய போட்டித்திறன் மற்றும் நல்லாட்சி என்பவற்றை மேம்படுத்திவரவில்லை என்பதனை ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. மேலும், மிக உயர்ந்த கல்வித்தகையைகளைப் பெற்றிருந்த நபர்கள் ஏனைய நாடுகளில் வாழ்ந்துவந்த தமது சகாக்களுடன் ஒப்பிடும்பொழுது தேசிய பொருளாதாரத்துக்கும் சமூக அபிவிருத்திக்கும் கணிசமான அளவிலான பங்களிப்பினை வழங்கி வந்திருக்கவில்லை என்பதும் எடுத்துக்காட்டப் பட்டிருந்தது.

பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும் போதிக்கப்படுகின்ற திறன்களுக்கும் தொழில்தலங்களின் தேவைகளுக்கும் இடையில் பொருத்தப்பாடின்மை காணப்படுகின்றது என்பதே கல்வியைப்பற்றிய பொதுவான விமர்சனமாகவுள்ளது. தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகளில் ஒன்றாக தொழில் உலகுடன் கல்விக்கு உள்ள பொருத்தப்பாட்டின் குறைபாடு, அல்லது "கல்வியின் வெளிவாரிச்செயற்றிறன்" உள்ளது. கல்வியானது சந்தேகத்திற்கு இடமின்றி, சமூகபொருளாதார மாற்றத்திற்கும் நெடுங்காலம் நீடித்திருக்கத்தக்க பொருளாதார மாற்றத்திற்குமான மிகவும் சக்திவாய்ந்த கருவிகளில் ஒன்றாகவுள்ளது. அறிவுப்பொருளாதாரத்திற்கு ஆதாரமானவற்றுக்குத்துணையாக, இந்த ஆரம்ப மற்றும் இடைநிலைக்கல்வி முறைமையைப்பழக்கப்படுத்திக்கொள்ளுதல் அவசியமானதாகும் என கலாநிதி உபாலி எம். செடர அவர்கள் குறிப்பிடுகின்றார்.

இலங்கையின் ஜனாதிபதி அதிமேதகு. மகிந்த ராஜபக்ச அவர்கள், அம்பாந்தோட்டை துறைமுகை திறப்பு விழாவில் ஆற்றிய உரையில் "நாம் அன்று சுதந்திரம் பெறும்போது எம்மைவிடவும் பின்னடைந்திருந்த பல நாடுகள் இன்று எம்மைப்பின்தள்ளி நீண்டதூரம் முன்னேறிச்சென்றுவிட்டன. எனினும், இன்று நாம் அந்த நாடுகளைப் பின்பற்றவோ, அந்த அபிவிருத்திகளின் சாயலைக்கொண்டு செயற்படவோ தயாராக வேண்டியதில்லை. அதேபோன்று கைவிட்டுப்போன மரபுரிமைகளைப்பற்றிப் பேசிப் பேசி தவிக்கவும் வேண்டியதில்லை. நாம் செய்ய வேண்டியதெல்லாம் அனைத்தையும் பின்தள்ளிச்சென்று உலகுக்கு அவர்கள் அடையாத அபிவிருத்தியொன்று தொடர்பான புதிய வழிகளைக்காட்டு வதேயாகும்." எனக்குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதைய பொருளாதார அபிவிருத்திப் போக்கானது நிலைத்து நீடித்திருக்க கூடியதல்ல என்பதனை உலகமக்கள் யாவரும் ஏற்றுக்கொள்வர். பொதுமக்களுக்கான விழிப்புணர்வு, கல்வி மற்றும் பயிற்சி என்பன சமூகமானது பேண்தகு நிலைமையை நோக்கி செல்வதற்கு .உதவிபுரியக்கூடியன. பேண்தகு அபிவிருத்திக்கான கல்வியானது (Education for Sustainablr Development - ESD) சமநிலையான, நிலைத்து நீடித்திருக்கும் அபிவிருத்திக்கு அதிகளவில் பங்களிப்புச்செய்யும் காரணியாக உலகளாவியரீதியில் ஏற்றுக்கொள்ளப் படுகின்றது.

ஐக்கியநாடுகள்சபையானது 2005ம் ஆண்டு தொடக்கம் 2014ம் ஆண்டு வரையான காலப்பகுதியை பேண்தகு அபிவிருத்திக்கான பத்தாண்டாக (UNDECADA OF EDUCATION FOR SUSTAINABLE DEVELOPMENT) பிரகடனப்படுத்தியுள்ளது. ஐக்கியநாடுகள் சபையின் உபநிறுவனமான யுனஸ்கோ என்ற அமைப்பானது ESD க்கான கல்வி மறுசீரமைப்புக்களை முன்னெடுப்பதற்கு பொறுப்பாகவுள்ளது.

தற்போது பல நாடுகள் பேண்தகு அபிவிருத்திக்கான தேசிய நுட்பங்களை விருத்திசெய்வதிலும் அமுல்ப்படுத்துவதிலும் ஈடுபட்டுள்ளன. அதிலும் குறிப்பாக முறைசார் கல்வியில் கொள்கை உருவாக்கம், உத்திகள் வகுத்தல், கலைத்திட்ட விருத்தி, ஆசிரியர் பயிற்சி மற்றும் கற்றல்கையேடுகளின் தயாரிப்பு போன்ற செயற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

பேண்தகு அபிவிருத்திக்கான கல்வியானது (ESD) செயல் மூலம் கற்றலை (learning by doing) அடிப்படையாகக்கொண்டது. ஒவ்வொரு சமூகமும் தமது சொந்த அபிலாசைகளுக்கேற்ப பொருத்தமான கல்வியை தெரிந்தெடுக்க முடியும்.

**பேண்தகு அபிவிருத்திக்கான கல்வியின் நோக்கங்கள்**

1) எதிர்கால சந்ததிக்கு பேண்தகு சமுதாயத்தை அனுமதித்தல்
2) சுற்றாடலுக்கு எதுவித தீங்கும் ஏற்படாதவாறு பேண்தகு எதிர்காலத்தை திட்டமிடல்
3) எதிர்கால பேண்தகு சமூகத்திற்கான தலைவர்களை உருவாக்கல்
4) மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு உதவுதல்

ESDயின் ஊடாக மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக முன்மொழியப்பட்ட உபதலைப்புக்கள் பாடசாலைமட்ட நிகழ்ச்சிகள் மற்றும் வகுப்பறை கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளினூடாக ஆசிரியர்களிடமும் மாணவர்களிடமும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இதற்காக பின்வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயதானங்கள் தொடர்பிலான அறிவூட்டப்படல் வேண்டும். இவ்வறிவூட்டலே ESD ஆகும்.

| சமூக பிரிவு (Social Sector) | சுற்றாடல் பிரிவு (Environ mental Sector) | பொருளாதார விரிவு (Econmic Sector) |
|---|---|---|
| 1) சமாதானமும் சமத்துவமும் | 1) இயற்கை வளங்கள் | 1) அனர்த்தங்களைக் குறைத்தலும் அவற்றிலிருந்து பாதுகாப்பு பெறலும் |
| 2) கலாச்சாரப் பன்மைத்துவம் | 2) புதுப்பிக்கத்தக்க சக்தி | 2) பேண்தகு போக்குவரத்து |
| 3) சமூக நீதி | 3) காலநிலை மாற்றம் | 3) பேண்தகு நகரமயமாக்கல் |
| 4) சுகாதாரக்கல்வி | 4) உயிர்ப்பல்வகைமைப் பாதுகாப்பு | 4) பேண்தகு உற்பத்தியும் நுகர்வும் |
| 5) உள்ளூர் மற்றும் பாரம்பரிய அறிவைக்கற்றல் | 5) கழிவு முகாமைத்துவம் | 5) பேண்தகு ஒத்துழைப்பு |
| 6) பாரம்பரிய மற்றும் நவீன தொழில் நுட்பங்களை ஒன்றிணைத்தல் | 6) பேண்தகு உணவு உற்பத்தி | 6) வறுமை ஒழிப்பு |
| 7) மனித உரிமைகள் மற்றும் எழுத்தறிவு | 7) நிலைத்து நீடித்திருக்கத்தக்க கிராமம் மற்றும் நிகரம் | 7) ஏழை மற்றும் பணக்காரர் இடையிலான இடைவெளி குறைப்பு |

மக்கள் தமக்கும், ஏனையோருக்கும் சமகாலத்திலும் மற்றும் எதிர்காலத்திலும் நன்மையளிக்கும் முடிவுகளை எடுப்பதற்கான அறிவு, திறன் மற்றும் மனப்பாங்குகளை விருத்திசெய்வதற்கு பேண்தகு. அபிவித்திக்கான கல்வி உதவிபுரிகின்றது.

### இலங்கையில் பேண்தகு அபிவிருத்திக்காக முன்னெடுக்கப்படும் கல்வி நடவடிக்கைகள்

இலங்கை ஓர் அபிவிருத்தியடைந்துவரும் நாடென்றவகையில் பேண்தகு அபிவிருத்திக்கான கல்வி வழங்குவதில் ஈடுபட்டுவருகின்றது. இச்செயற்பாடுகள் UNESCO மற்றும் தனியார் துறையின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படுகின்றது. அவையாவன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ESD கலைத்திட்டத்துடன் ஒன்றிணைக்கப்படுகின்றது
- விசேட செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன
- சிறுவர் பாதுகாப்பு செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன
- கழிவு முகாமைத்துவம் தொடர்பிலான செயற்பாடுகள்
- சமூக கலாச்சார செயற்பாடுகள்
- சமாதானம், ஆரோக்கியம் மற்றும் சுற்றாடல்சார் துறைகளுக்கு முன்னுரிமையளித்தல்
- சுற்றாடல்சார் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல்
- பாடசாலை சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.
- சமூக நல்லிணக்கத்துக்கும் சமாதானத்திற்குமான தேசிய கொள்கையை உருவாக்கல்

## பேண்தகு அபிவிருத்திக்கான கல்வி (ESD) நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான நுட்பங்கள்

1) கல்விச்சமூகத்தில் ESD தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல்
2) கலைத்திட்டங்களில் (பாடசாலை மற்றும் பல்கலைக்கழகங்களின்) ESD யைச் சேர்த்தல்
3) சமுதாயத்தின் பங்களிப்புடன் ESD நிகழ்ச்சிகளை விருத்திசெய்ய வேண்டும்
4) பாரம்பரிய துறைகளையும், நுட்பங்களையும் பொருத்தமானமுறையில் பயன்படுத்தல்
5) பொறுப்புக்களை பகிர்ந்து கொள்ளல்
6) மனித ஆற்றலை விருத்திசெய்துகொள்ளல்
7) நிதி மற்றும் உபகரண வளங்களை விருத்திசெய்துகொள்ளல்

முடிவுரை

தற்கால உலகில் நாம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றேன் இனப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வழிமுறைகளை நடைமுறையிலுள்ள கல்வி சொல்லித்தரவில்லை. எனவே எமக்கு தேவையான பொருத்தமான கல்வியை நாம் வடிவமைக்க வேண்டும். இப்பொருத்தமான கல்வியாக நாம் பேண்தகு அபிவிருத்திக்கான கல்வியை (Education for Sustainable Development) குறிப்பிடலாம். ESD தொடர்பான விழிப்புணர்வை கல்விச்சமூகத்தினரிடம் ஏற்படுத்தி, அதனை வெற்றிகரமாக முன்னெடுக்க அனைவரதும் ஒத்துழைப்பு அவசியம்.

■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைக்கூக்கவிதைகள்

* **மண்** *
மனிதன் இறுதியில்
படுத்துறங்கும் மெத்தை.

* **கலாசாரம்** *
முன்னைய காலங்களில் கலை + சாரம்
என்பது இன்றோ காரசாரமாக உள்ளது.

* **போதை** *
உன்னைக் கொன்றுவிட்டு
புதைக்கும் புதைகுழி

* **சீதனம்** *
ஊனமுற்ற ஆண்களுக்காய்
போடப்படும் பிச்சை.

* **பெண்மை** *
புனிதத்தின் மறுபெயர்

* **தாய்மை** *
அன்பின் உறைவிடம்

* **ஆசை** *
உன்னைக் கல்லறைக்கு
அழைத்துச் செல்லும் வழி.

* **நட்பு** *
சிலருக்கு சொர்க்கம்
பலருக்கு நரகம்.

* **அநாதை** *
கடவுளுக்கே இருக்கும்
ஒரு குறைபாடு.

* **சோகம்** *
இன்பமான சுகத்தின்போது
தோன்றும் துன்பமான வலி.

* **உறவு** *
மரத்தின் ஒரு கிளைபோன்றவர்கள்
சில நேரம் பட்டுவிடக்கூடும் சிலநேரம் வெட்டிவிடக்கூடும்.

ம. இலக்கியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாரொடு நோவோம்? யார்க்கெடுத்துரைப்போம்?

**2011 A/L Science, Girls**

"நிலா காய்கிறது நேரம் தேய்கிறது யாரும் ரசிக்கவிலலையே..." இப்பாடல்வரி ஏனோ எம் மனங்களை நெருடிவிட்டுச் செல்கின்றது. ஆம்! எங்கள் தமிழினத்தின் பெருமையை அதன் சிறப்பைத் தொழில்நுட்பத்திறனை, கலைத்துவப் படைப்பை, வாழ்வியலின் நுட்பத்தை, தெய்வீகப் பொருண்மையை எங்கள் இளஞ்சமூகம் கண்டறியவும் அதனூடு எங்கள் வாழ்வியலின் உயர் பண்பாட்டுப் பெறுமானத்தை உணரவும் முடியாமல் முடங்கிப் போய்க் கிடக்கிறதோ என எண்ணத் தோன்றுகிறது. இதனால் அறிவியலுடன் இணைந்த எமது சம்பிரதாங்கள், சமயாசாரங்கள், எம்மைச் சூழவுள்ள இறைவனின் அரிய படைப்புக்களான மனிதனால் தீர்க்கமுடியாதென தீர்க்கப்படும் தீராத நோய்களையும் தீர்க்கும் மூலிகைள், வானறிவியலுக்கு ஒப்பான எமது சாஸ்திர ஞானம் என்பன ரசிக்கப்படா நிலவினொளி போல மழுங்கடிக்கப்பட்டுச் செல்கின்றதே என்ற நினைப்பைத் தோற்றுவிக்கவும் தவறவில்லை அப்பாடல்வரியின் நெருடல்.

எம் தொன்மையான காலத்தில் பெரும்பாலான மக்கள் கல்வியறிவு குறைந்தவர்களாகவே காணப்பட்டனர். அவர்களிடம் சிறந்த அறிவியலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாரமாகக் கொண்ட சம்பிரதாயங்கள், பண்பாடுகள், கலாசாரங்கள் புகுத்தப்பட சமயம் ஓர் ஊடகமாக பயன்பட்டது. மக்கள் மத்தியில் அவை நம்பிக்கைகளாக தொடர்ந்து இன்று அவை மூட நம்பிக்கைகளாக தொடர்ந்து இன்று அவை மூட நம்பிக்கைகளென கைவிடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. அந்நாட்களில் மஞ்சள் பூசிக்குளித்தல் தொற்று நீக்குமென சமூகத்திற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை; ஆனாலும் புகுத்தப்பட்டிருந்தது. அதே போல் கோவிலில் அட்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரங்கள் செய்தல் கோவிலில் அடியளித்தல், உணவு உட்கொள்ள உடகாரும் முறை என்பன யோகாவின் பல்வேறு ஆசனங்களை ஒத்ததாக காணப்படுகின்றன. ஏன்? கோவிலுக்கு பொன்னாபரணங்கள் அணிந்து செல்வது இன்று அழகுக் கென்றாகி விட்டாலும், அதன் மெய்யான பயனென்னவோ விஞ்ஞான விளக்கத்தைத் தன்னகத்தே கொண்டது. ஆரார்த்தி எடுத்தல், சந்தனப் பொட்டு திருநிறு அணிதல், ஆடிக்கூழ் குடித்தல், விரதமிருத்தல், முற்றத்தில் துளசிச் செடி வளர்த்தல் என எம் சம்பிரதாயங்களும், அதன் விளக்கங்களும் நீண்படி செல்கின்றது.

கோவில்களில் இறைவனுக்கு அபிஷகம் செய்த தீர்த்தம் ஏந்தி குடிக்குறோம்! ஏன் குடிக்கிறோம் என்ற கேள்வி மட்டும் ஏனோ எம்மனங்களில் எழுவதில்லைப்போலும். ஆனால் இது ஒரு வெளிநாட்டவரின் மனதிலாவது எழத் தவறவில்லை. கும்பகோண மகா கும்பாபிடேக தீர்த்தத்தில் பென்சிலியம் இருப்பதை கண்டறியவும் தவறவில்லை. இவ்வாறு தீர்த்தத்தினூடு நோயெதிர்ப்பு திறனை ஊருக்கே வழங்கும் சிறந்த தொன்மையான மரபிற்கு நாங்கள் உரித்துடையோர்கள் என்பதைக் கூட அறியாத அறிவிலிகளாக நாம் இருக்க தடைப்படப் போகிறோமா?

பண்டிகைகள், திருவிழாக்களைக் கொண்டாடி மகிழ்கிறோம். ஏன் இவற்றைக் கொண்டாடுவதால் விழைவது என்ன என ஒரு வினாவைத் தொடுத்தோமாயிருந்தால் எம் சிந்தை பின்வருமாறு விடைகான தலைப்படலாம். இன்று நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம் என்ற பழமொழியைச் சொன்னால் தலைகளெல்லாம் சரியென தலையசைத்துவிடாதோ? ஏனெனில் இன்று நோயற்றிருக்கும் மாந்தர் அரிதினும் அரிதாகிவிட்டனர். அதுவும் பெரும்பாலான பிணிகளுக்கு மன அழுத்தம் முக்கிய காரணியென அழுத்தமாக கூறிவிடவும் தவறவில்லை வைத்தியர்கள். இப்பண்டிகைகள், விழாக்கள், வருடம் முழுவதும் பல்வேறு நெருக்கடிக்குள் உழைக்கும் மாந்தர் தத்தம் ஊரில் ஒன்று கூடி கொண்டாடி மகிழ்ந்து அவர்களின் வாழ்க்கையை மகழ்வாக்கும் சிறந்த உளவியல் தத்தவத்தை அடிப்படையாகக் கொண்டது.

"ஆயிரம் வேரைக் கொண்டவன் அரைவைத்தியன்" என்கிறது பழமொழி ஒன்று. அதாவது வேர்களின் மருத்துவச் சிறப்பியல்புகளை விளக்கி நிற்கிறது. இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மைச் சூழவுள்ள சூழலில் காணப்படும் மூலிகைகளின் பயனறியாது அவற்றின் பிணிதீர்க்கும் வல்லமை அறியாது ஆங்கில் மருத்துவ முறையை சாதாரண தடிமன், காய்ச்சலை தீர்க்கவும் நாடிநிற்கிறோம். ஆயினும் பழையதை சற்றும் விடாமலும் புதியதை வேண்டாமலும் இருத்தல் சாத்தியம் அன்று. கூறவிழைவது யாதெனில் எம் பழந்தொன்மைமிக்க ஆயுள்வேதம், சித்தவைத்தியம் ஆகிய பக்க விளைவுகள் அற்ற மருத்துவ முறைகளை நாடுதல் சாலலச்சிறந்தது. எமது தெய்வப்புலவர் திருவள்ளுவர் மருந்துக்கு அதிகாரமளிக்கவும் தவறவில்லை.

" மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
வளி முதலா எண்ணிய மூன்று"

முதலிய குறள்களை எமது உணவுப் பழக்க வழக்கங்களே எம்பிணிக்கு காரணமெனவும் அவையே மருதந்தெனவும் கூறி நிற்கிறார்.

பெரியாழ்வார் திருமொழியிலே காய்ச்சிய நெல்லி நீரிலே நீராட வரும்படி கண்ணனை அழைத்திருந்தார்கள். ஆம் காய்ச்சிய நெல்லி நீரும் சிறந்த ஔடதமாகும். " இலங்கணாம் பரம ஔடதம்" என்கிறது ஒரு பழமொழி. அதாவது பசியோடு இருப்பதுவும் மருந்தாகிறது எனக் கூறுகிறது. அதாவது விரதமிருப்பதை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். எமது முற்றங்களில் நிற்கும் வேம்பை எடுத்துக் கொண்டாலும் அதன் வேரிலிருந்து குருத்திலை வரை ஒவ்வொரு பகுதியும் ஒவ்வோர் பிணிக்கு மருந்தாகி நிற்கிறது. ஆகவே தமிழனத்தைப் பொறுத்தவரை அந்த இனம் மிக நீண்டதும் தொன்மையானதுமான வரலாற்றுப் பெருமைக்குச் சொந்தமான இனம் ஆனால் காலம் காலமாக நிகழ்ந்த அந்நிய ஆக்கிரமிப்புகள், படையெடுப்புகள் அதன் தொன்மையை உணர்த்தும் ஆவணங்களை அழித்ததும் மறுக்க முடியாத உண்மை. எமது பண்பாடு சமயத்தோடு பின்னிப் பிணைந்து இருந்ததால் சமயம் எதிர்க்கப்பட கூட காரணமாகலாம் ஆனாலும் ஓர் இனம் தனது மூதாதையர்களின் வாழ்வியலின் அம்சங்களை அறியாமல் உணராமல் இருக்குமாயினி அந்த இனம் பற்றற்ற நாடோடித்தன்மையுடைய இனமாக மட்டுமே இருக்கும் என்பர். ஆகவே தற்கால இளஞ்சந்ததி என்ன செய்யப் போகிறது? "கல் தோன்றி மன்தோன்றா காலத்து முன்தோன்றிய மூத்த குடி...." எனக் கூறிக் கொண்டிருக்குப்போகிறோமா? இல்லை எங்ககள் வரலாற்றுப்பெருமையை தாங்கள் அறிவோம்; உலகுக்கு அறிவிப்போம் என்ற உயரிய சிந்தனையில் செயற்படப் போகிறோமா? அத்தோடு எம்முன்னோர்களது சிறந்த அறிவியலை ஆதாரமாகக் கொண்டு தற்கால தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஈடுகொடுத்து எம் அறிவியலை வளர்க்க வீறு நடை போடப்போகிறோமா? இவற்றை செய்யத்தவறின் எம் தலைகள் தரைநோக்கி தானாகவே தலைசாயல் திண்ணம். உண்மையான இளந் தமிழ் சமூகத்திற்கு சமர்ப்பணம்! ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழ் புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ்க்கல்வி

-சr. குணேஸ்வரன்

### அறிமுகம்

ஒரு இனக்குழுமத்தின் உயிர்ப்பின் அடையாளமாக இருப்பது மொழி. அது பண்பாட்டின் வழிவந்த ஊற்று. மொழியின்றேல் இனமில்லை. அந்த இனத்தின் தனித்துவ அடையாளங்கள் இல்லை.

பல்பண்பாட்டுச்சூழலில் புலம்பெயர்ந்து தமது பிள்ளைகளுக்கு தமிழ்மொழியைக் கற்பிப்பதற்கும் தமிழைப்பேச வைப்பதற்கும் தமிழினூடாகத் தமிழர் என்ற அடையாளத்தைக் கையளிப்பதற்கும் பல்வேறு செயற்பாடுகளை புலம்பெயர்ந்த ஈழத்தமிழர் ஆற்றிவருகின்றனர்.

இவ்வகையில் அந்நாடுகளில் வாழ்கின்ற இரண்டாந் தலைமுறைத் தமிழ்ப்பிள்ளைகளின் தமிழ்க்கல்வி பற்றிய சிந்தனைக்குரியதாக இக்கட்டுரை அமைகிறது.

### புலம்பெயர்ந்தவர்கள் - தலைமுறை

60 களில் இருந்தே இலங்கைத் தமிழரின் புலப்பெயர்வு ஆரம்பித்து விட்டதாயினும் அது பண்பாட்டு ரீதியில் பெருமாற்றத்தை ஏற்படுத்தியதென்று கூறமுடியாது. 'மூளைசாலிகள் வெளியேற்றம்', 'தொழிலுக்கான புலப்பெயர்வு' என்ற வகையிலேயே அவை அமைந்திருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் 80 களில் இருந்தான புலப்பெயர்வே இங்கு முக்கியமாக கருத்திற்கொள்ளப்படுகிறது, அவ்வாறு புலம்பெயர்ந்தவர்களை தலைமுறை என்று வகுத்துப்பார்த்தால் தற்போது இரண்டாந் தலைமுறை தாண்டி மூன்றாந் தலைமுறையும் உருவாகிவிட்டது. தலைமுறை என்பதை மேலைத்தேயத்தவர்கள் சராசரி 35 வருடங்களைக் கொண்ட காலப்பகுதியாகக் கொள்வர்.

குறிப்பாக 1983 யூலைக்கலவரங்களின் பின்னர் ஐரோப்பா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய மூன்று கண்டங்களிலும் உள்ள நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து, ஈழத்தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறு புலம்பெயர்ந்தவர்களை இன்று முதலாம் தலைமுறையினர் என அழைக்கலாம். அதிகமும் இளைஞர்களே அப்போது புலம்பெயர்ந்தார்கள். அதற்கு பல்வேறு சமூக அரசியற்காரணங்கள் இருந்தன. அவர்களுள் வதிவிட அனுமதி கிடைத்தவர்கள் படிப்படியாகத் தமது சகோதரர்களை, தாய் தந்தையரை அழைத்தனர். பின்னர் தமக்கு மணப்பெண்களை அழைத்து திருமணமும் செய்து கொண்டனர்.

இரண்டாம் தலைமுறையினர் எனப்படுவோர் 80 களில் இருந்து புலம்பெயர்ந்தவர்களின் பிள்ளைகள். அதாவது சிறுவர்களாக இருக்கும்போது புலம்பெயர்ந்தவர்கள். அல்லது அந்தந்த நாட்டில் பிறந்த பிள்ளைகள்.

இக்கட்டுரை இரண்டாம் தலைமுறையினரை மையப்படுத்தியதாகவே அமைகிறது.

இற்றைக்கு புலப்பெயர்வு ஏற்பட்டு கால்நூற்றாண்டு கடந்துவிட்டது. ஏறத்தாழ பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் வாழ்வதாகக் கணிக்கப்படுகிறது. இங்கு இரண்டாந் தலைமுறையினர் மத்தியில் தமிழ்மொழியைப் பேணுதலில் புலம்பெயர்ந்த தமிழர் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றனர். அவர்கள் 'தமிழ்மொழி' யை இரண்டாம் மொழியாக அல்லது மூன்றாம் மொழியாக கற்கவேண்டிய கடப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

**தமிழ்க்கல்வி பற்றிய சிந்தனை**

புலம்பெயர்ந்தவர்கள் மத்தியில் தமிழ்க்கல்வி தொடர்பான சிந்தனை 90 களின் பின்னர்தான் ஏற்படுகிறது. முதலில் படிப்படியாகத் தம்மை நிலை நிறுத்திக் கொள்கின்றனர். அகதி அந்தஸ்து அல்லது வதிவிட உரிமை, அந்நாட்டு மொழியைக் கற்றுக்கொள்ளல், தொழில் வாய்ப்பு, என்பன ஓரளவு வாய்த்தபின்னரே தமது குடும்பம் மற்றும் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கின்றனர்.

அதன் பின்னர் இலங்கையில் இருந்து அவர்களுக்கு மணப்பெண்களை அனுப்புதல் தொடர்கிறது. இதனால் அவர்கள் குடும்பமாகத் தம்மை புகலிட நாடுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைநிறுத்திக் கொள்ளும்போதுதான் தமது பிள்ளைகளின் தமிழ்க்கல்வி, தமிழ்ப்பண்பாடு பற்றிச் சிந்திக்கின்றனர்.

**திணைக்கோட்பாட்டின் அடிப்படையில் புகலிட நாடுகள்.**

இதுவரை தமிழர் புகலடைந்த நாடுகளில் இருந்து எழுதப்பட்ட படைப்புக்களை பொதுமைப்படுத்தியே அவை சுட்டுகின்ற பொருட்பரப்பு, மற்றும் உணர்வுநிலை ஆகியன பேசப்பட்டன. ஆனால் இனிவருங்காலங்களில் திணைகளுக்குரிய தனித்துவப் பண்புகள் போல புகலடைந்த நாடுகளின் அரசியல் பொருளாதார சூழலியல் அம்சங்களையும் கருத்திற் கொள்ளவேண்டியுள்ளது. ஏனெனில் ஒவ்வொரு நாடுகளுக்கும் தனித்துவமானமான கூறுகள் உள்ளன.

சங்க இலக்கியத்தின் ஐந்திணைகளுக்கு அடுத்ததாக தமிழர் புகலடைந்த நாடுகளை 'ஆறாந்திணை' என அழைக்கும் வழக்கம் உண்டு.

ஈழத்தமிழர் புகலடைந்த நாடுகள் தட்பவெட்ப மாற்றத்தாலும், பண்பாட்டாலும், மொழியாலும், அரசியல் மற்றும் பொருளாதார நிலமைகளாலும் முற்றிலும் வேறுபட்ட பண்புகளைக் கொண்டதாக அமைந்திருப்பதாலேயே 'ஆறாந்திணை' என அழைக்கின்றனர். இந்நிலையில் தமிழ்க்கல்வி பற்றி நோக்கும்போது இவ்வேறுபாடுகளை மனங்கொண்டுதான் பல செயற்பாடுகளை புலம்பெயர்ந்தவர்கள் ஆற்றவேண்டியுள்ளது.

முதலாவது மொழியினூடாகக் கட்டமைக்கப்பட்ட நாடுகள் என்றால், மறுபுறம் சூழல் சார்ந்த வகைப்பாடு முக்கியம் பெறுகிறது. பிள்ளைகள் வாழும் சூழலைக் கருத்திற்கொள்ளாமல் இலங்கையில் அல்லது தமிழ்நாட்டில் பதிப்பிக்கப்படும் ஆரம்பக்கல்விசார்ந்த நூல்களைக் கொண்டு தமிழ் கற்பிக்கமுடியாது. (உதாரணம் - வண்டில், கிடுகு, அஸ்டலக்சுமி போன்ற சொற்கள்) இந்நிலையில் தான் தமிழ்க்கல்வி பற்றி சிந்திக்கவேண்டியுள்ளது.

**புதிய தலைமுறையினர் தமிழை ஏன் கற்கவேண்டும்**

புகலடைந்த நாடுகளில் தமிழரின் பிள்ளைகள் தமிழை ஏன் கற்க வேண்டும்? அதனால் அவர்களுக்கு ஏற்படக்கூடிய நன்மைகள் யாவை? அவர்களைத் தமிழ்க்கல்வி பயிலுமாறு பெற்றோர் கட்டாயப்படுத்த வேண்டியதற்கான தேவைகள் யாவை? என்பன முக்கியமான வினாக்களாகும்.

தமிழ்மொழியைப் புலம்பெயர்ந்த நாடுகளிலே இரண்டாந்தலைமுறையினர் ஏன் கற்கவேண்டும் என்பதற்குரிய முக்கியமான காரணம் 'அடையாளம்' தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றிலும் மாறுபட்ட பிரதேசத்தில் அந்நியப்பட்டு தம்மை கறுப்பராகவும் நாடற்றவராகவும் அகதியாகவும் உணரும்போது, தாயகம் பற்றியும் தம் உறவுகள் பற்றியும் தம் பண்பாடு பற்றியும் நினைக்கத் தலைப்படுகின்றனர்.

கனடா போன்று ஒட்டுமொத்தமாக அதிகளவில் தமிழர் வாழக்கூடிய நாட்டில் தமது தாயகத்தை மீளுருவாக்கம்செய்து கொள்வதன் ஊடாக தாயகம் பற்றிய நினைவை தற்காலிக நினைவாகவேனும் பேண முயல்கின்றனர்.

தாம் எப்போதாவது இலங்கைக்கு திரும்பிச்செல்லும்போது தமது பிள்ளைகள் தமிழ் பேசவேண்டும் என்ற குறைந்த பட்ச விருப்பம், மற்றும் அந்நிய நாட்டில் தமது ஊரவரை உறவினரைச் சந்திக்கும்போதும் விழாக்களில் பங்கெடுக்கும்போதும் தமிழ் பேசவேண்டும் தமிழராய் உணர வேண்டும் என்ற வேணவாதான் பிள்ளைகள் தமிழ் கற்க வேண்டும் என்ற கட்டாயத்தை ஏற்படுத்துகின்றது.

எல்லாவற்றுக்கும் மேலாக வேற்றுநாட்டு அடையாளம் முழுதாக தமிழைக் காவு கொள்ளும்முன்னர் உணர்வாலும் செயற்பாட்டாலும் தமிழராய் உணர்தல்.

இது புலம்பெயர்ந்த முதற்தலைமுறைக்கு பிரச்சினையல்ல. அவர்களின் இரண்டாந் தலைமுறையினருக்குரிய பிரச்சினை. எனவே மொழிவழியாகப் பண்பாட்டைக் கடத்துவதற்கு ஒரு முயற்சியாகத்தான் தமிழைக் கற்கவேண்டிய தேவையை வலியுறுத்துகின்றனர்.

நான் யார்? என் தாய்நாடு எது? எது என் தாய்மொழி? ஆகிய கேள்விகள் எழும்போதுதான் தாய்நாடு பற்றியும் தமது மொழி பற்றியும் தமது பண்பாடு பற்றியும் பெற்றோர் பிள்ளைகளுக்கு சொல்ல வேண்டிய நிலையும் தமது வேர்களைத் தேடவேண்டிய நிலையும் வருகிறது.

**மொழி அடிப்படையிலான வேறுபாடு**

தாய்மொழி, முதல்மொழி, சிந்தனைமொழி, கல்விமொழி ஆகிய பதங்கள் புலம்பெயர்ந்த இரண்டாந் தலைமுறையினரின் தமிழ்க்கல்வி பற்றி சிந்திக்கும்போது அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன.

> "ஒரு பிள்ளை எந்த மொழியைத் தனது கல்வி மொழியாகக் கொள்கிறதோ அந்த மொழியே அப்பிள்ளையின் சிந்திப்பு நடைபெறுவதற்குமான மொழியாகும்" (கா. சிவத்தம்பி, தமிழ் கற்பித்தல்)

தமிழர் அல்லாதோர் வாழும் ஓர் அந்நியச் சூழலில் அதுகாலவரையில் இல்லாத மொழியைப் பிள்ளைகள் பயிலுமிடத்து அது இரண்டாம் மொழியாக இருப்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்பு உள்ளது. புலம்பெயர்ந்த இலங்கைத்தமிழரின் பிள்ளைகளைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு தமிழ் இரண்டாம்மொழியாக அல்லது மூன்றாம் மொழியாகவே அமைகின்றது.

தமிழர் புலம்பெயர்ந்த நாடுகளைப் பொதுப்படையாக மொழி சார்ந்து பார்ப்போமானால், ஆங்கிலம் பேசும் நாடுகள், ஆங்கிலம் அல்லாத ஏனைய மொழிபேசும் நாடுகள் என இரண்டாக வகுத்து நோக்கலாம்.

பிரித்தானியா, அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா ஆகியவை ஆங்கிலத்தை அரசமொழிகளாகக் கொண்ட நாடுகள். அங்கு கல்வி மொழியும் ஆங்கிலம்தான். அங்கு புலம்பெயரும்போது ஏற்கனவே இலங்கை காலனித்துவ ஆட்சிக்குள் இருந்தமையால் தமிழர்களை அவர்களின் பண்பாட்டை ஆங்கிலேயர் ஓரளவு புரிந்து கொள்வதற்கு இடமிருக்கிறது. அதேபோல் புலம்பெயர்ந்தவர்களும் ஆங்கில மொழி அறிவுள்ளவர்களாக இருக்கும்போது அவர்களுக்குரிய தொழிலைப் பெற்றுக்கொள்வதற்குரிய வாய்ப்புக்களும் இருந்துள்ளன.

> "கல்வி மட்டத்தில் தமிழ்மொழிப் பயில்வினை கல்விமொழி நிலைநின்று வகுக்கலாம். இந்த வகைப்பாட்டுக்குப் பெயரிடுவதிலேயே சிறியதொரு சிக்கலுண்டு. தமிழை 'தாய்மொழி' (mother – tougue) எனக்கொள்வதா அன்றேல் 'முதல்மொழி' (first language) எனக் கொள்வதா என்பதுவே அப்பிரச்சினையாகும். கல்விமொழி (educational medium) தமிழாக இல்லாதவிடத்துப் பாடசாலைச் சூழலிலேயே தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட ஒரு குழந்தைப்பிள்ளை தமிழை அந்தக் கல்விச் சூழலில் இரண்டாவது மொழியாக (second language) அன்றேல் நோர்வே டென்மார்க்கில் நடப்பதுபோன்று மூன்றாவது மொழியாகவே (third language) பயிலவேண்டிய ஒரு நிலைமையுண்டு" (கா.சிவத்தம்பி, தமிழ் கற்பித்தல் ப8)

கனடா அமெரிக்கா, அவுஸ்திரேலியா, பிரித்தானியா, ஆகிய நாடுகளில் அந்தந்த நாட்டு மொழிகள் (குறிப்பாக ஆங்கிலம்) பிள்ளைக்கு முதல்மொழியாகவும், தமிழ் இரண்டாம் மொழியாகவும் இருப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

நோர்வே, பிரான்ஸ், சுவீடன், டென்மார்க், சுவிஸ், ஜேர்மனி போன்ற நாடுகளில் அந்தந்த நாட்டு மொழிகள் முதன்மொழியாகவும் பிரெஞ்சு, ஜேர்மன், ஆங்கிலம், இலத்தீன், டேனிஷ், சுவீடிஸ், உரோமன்ஸ் நொஸ்க் போன்ற மொழிகளில் ஏதாவது ஒன்று இரண்டாம் மொழியாகவும் இருப்பதற்கு வாய்ப்பு உள்ளது. இந்நிலையில் 'தமிழ்' மூன்றாம் அல்லது நான்காம் நிலைக்கு தள்ளப்படும் நிலையே ஏற்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்பெயர்ந்தவர்களின் பிள்ளைகள் அந்தந்த நாட்டு மொழியிலேலே கல்வி பயில்கின்றனர். பிள்ளைகளின் சிந்தனைமொழியாகவும் கல்விமொழியாகவும் அந்நாட்டு மொழிகளே முதன்மொழியாகவும் உள்ளன. ஒரு பிள்ளை அந்நாட்டு மொழியிலேயே சிந்திக்கிறது. பேசுகிறது, கற்கிறது, பணி புரிகிறது. இந்நிலையில் மேலதிகமாக தமிழ் கற்க வேண்டிய தேவை ஏற்படும்போது ஆங்கிலம் பேசும் நாடுகளைக் கொண்ட பிள்ளைகளுக்கு தமிழ் இரண்டாவது மொழியாகவும். ஆங்கிலம் அல்லாத பிறமொழி பேசும் நாடுகளில் வாழும் பிள்ளைகளுக்கு தமிழ் மூன்றாவது மொழியாகவும் ஆகிவிடுகிறது. இது முடிந்த முடிபுமல்ல. சில பிள்ளைகளுக்கு தமிழ் இரண்டாவது மூன்றாவது மொழியாகக்கூட இல்லாத நிலையும் உள்ளது.

**தமிழ்க்கல்வி கற்பதற்கான வாய்ப்புகள்**

புலம்பெயர்ந்த முதற்தலைமுறையினர் அடையாளத்தைத் தக்க வைப்பதற்காக பல செயற்பாடுகளை ஆற்றிவருகிறார்கள். அவற்றில் பிரதானமாக தமிழ்க்கல்வி கற்பிப்பதற்காக தமிழ்ப்பாடசாலைகளை நடாத்துகிறார்கள்.

வார இறுதி நாள்கள் பிள்ளைகள் தமிழ் கற்பதற்காக ஒதுக்கப்படுகிறது. சனி அல்லது ஞாயிறு நாள்களில் தமிழ் கற்பிக்கப்படுகிறது. இதற்கு தனியாகவும் நிறுவன ரீதியாகவும் பலர் பங்களித்து வருகிறார்கள். அதிகமாக தமிழர் புலம்பெயர்ந்த நாடுகளில் எல்லாம் இம்முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

ஒருசில உதாரணங்களை நோக்கலாம். (பட்டியல் முழுமையானதல்ல)

ஜேர்மனியைப் பொறுத்தவரையில் 1990 இல் போன் நகரில் உலகத் தமிழர் இயக்கத்தால் 'தமிழாலயம்' என்ற பெயரில் தமிழ் கற்பதற்கான பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. 134 வது தமிழாலயம் கடந்த ஏப்ரல் 2011 இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தமிழாலயம் இணையத்தினூடாக அறியப்படுகிறது. நிர்வாகக் கட்டமைப்புடன் 1ஆம் வகுப்பு முதல் 11 ஆம் வகுப்புவரை கல்வி கற்பிக்கிறார்கள்.

பிரான்சில் 'தமிழ்ச்சோலை' என்ற அமைப்பு தமிழ்ப்பள்ளிகளை நடத்தி வருகிறது. லாசாப்பலில் இதன் தலைமையகம் இயங்குகிறது. 63 தமிழ்ப்பள்ளிகள் இதுவரை இருப்பதாக அறியப்படுகிறது.

அவுஸ்திரேலியாவில் தமிழ்மொழிக் கல்விக்கான முயற்சிகள் பலவகையில் மேற்கொள்ளப்படுகின்றன. விக்ரோறியா பண்பாட்டுக்கழகம் தமிழ்க்கல்வியை முன்னெடுத்து வருகிறது. அதேபோல 1994 இல் இருந்து 'பாரதிபள்ளி' அவுஸ்திரேலியாவில் தமிழ்மொழி வகுப்புக்களை நடத்தி வருகின்றது, இது நான்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளாகங்களைக் கொண்டுள்ளதாகவும் இதுபோல வேறுவேறு மொழிப்பாடசாலைகள் 50 வரையில் இயங்குவதாகவும் மாவை நித்தியானந்தன் குறிப்பிடுகின்றார்.

கலிபோர்ணியாவில் தமிழ்க்கழகம் கடந்த 12 வருடங்களாக தமிழ்பயிற்றுவித்து வருகிறது. (tamilhl.org)

"அறிவகம், தமிழ்க்கலை, தொழில்நுட்பக்கல்லூரி, அரச கல்விச் சபைகள், கத்தோலிக்கக் கல்விச் சபைகள், சிவனியக் கோயில்கள், தனியார் அமைப்புக்கள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் தமிழ்மொழியைக் கற்பித்து வருகின்றன" (கதிர்வேலு சண்முகம், செம்மொழிமாநாட்டு மலர், கனடாவில் "தமிழ்க்கல்வியை முன்னெடுப்பதில் உள்ள சிக்கல்கள்", ப. 282)

இவ்வாறான தகவல்களின் ஊடாக தமிழ்க்கல்விச் செயற்பாடு நடைபெறுவதனை அறியமுடிகிறது.

**தமிழ்க்கல்வி கற்பித்தலில் குறைபாடுகள்**

ஆரம்பத்தில் பல குறைபாடுகளுடன் தொடங்கிய தமிழ் கற்பித்தல் பலராலும் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டது.

1 போராளி அமைப்புக்களால் வழிநடத்தப்பட்ட தமிழ்ப்பாடசாலைகளில் தமிழ் கற்பித்தல் பல குறைபாடுகளைக் கொண்டிருந்தன.

2 பிள்ளைகள் வாழ்கின்ற பிரதேசம் மற்றும் வாழ்க்கைச்சூழல் என்பன கருத்திற் கொள்ளப்படாத தமிழ் கற்பித்தல்.

3 ஆசிரியர்களுக்கு போதியளவு பயிற்சி இன்மை.

4. பிள்ளைகளுக்கு சுமையைக் கொடுக்கக்கூடிய கல்விப் போதனை.

4 எல்லாத் தமிழ்ப்பிள்ளைகளும் தமிழ் கற்பதற்குரிய வாய்ப்புக்கள் இன்மை.

இவற்றோடு தமிழ் கற்றலில் பிள்ளைகள் ஆர்வம் காட்டாமைக்கு பின்வரும் காரணங்களும் முன்வைக்கப்படுகின்றன.

1. ஆங்கிலம் சார்ந்த நாடுகளில் இருக்கக்கூடிய ஆங்கிலமயச் சூழல் (கனடா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா...)
2. பெற்றோர் ஆர்வம் இன்மை – 'தமிழ்' கற்பதை தரக்குறைவாகக் கருதுதல்.
3. தமிழ் கற்பது பிள்ளைகளுக்கு மேலதிக சுமையாக இருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பிள்ளைகள் வாழுகின்ற சூழலைக் கருத்திற்கொள்ளாத அந்நியமான சொற்பதங்கள்.

5. பாடத்திட்டம் மற்றும் உசாத்துணை நூல்கள் போதியளவு இன்மை.

6. தமிழ்மொழியைப் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் குறைவடைதல்.

"கனடா பாடத்திட்டத்தின் கீழ் இயல்பாகவே மாணவர்களுக்குப் பெரும் கல்விச்சுமை காணப்படுகிறது. இந்நிலையில் அதிகம் பயனில்லாத மேலுமொரு தமிழ்க் கல்விச் சுமையை ஏன் கூட்டவேண்டும் என்று எண்ணித் தமிழைக் கற்காமல் விடுகின்றனர், கனடாப் பெருநகர்ப் பகுதிகளில் மட்டுமே தமிழைக் கற்கக்கூடிய வாய்ப்பு உள்ளது. தொழில் கருதி நகர்களுக்கு வெளியே குடியேறி வாழும் தமிழ்மக்களது பிள்ளைகளுக்கு இந்த வாய்ப்பு இல்லை" (கதிர்வேலு சண்முகம், செம்மொழி மாநாட்டு மலர், "கனடாவில் தமிழ்க்கல்வியை முன்னெடுப்பதில் உள்ள சிக்கல்கள்", ப. 282)

இவ்வாறாக தமிழ்மொழியைக் கற்பித்தலில் இருக்கக்கூடிய குறைபாடுகளும் பிள்ளைகள் தமிழ் கற்பதற்கு ஆர்வம் காட்டாமைக்குரிய காரணங்களும் புகலடைந்தவர்களாலேயே எடுத்துக் காட்டப்படுகின்றன. மேலும் பொ. கருணாகரமூர்த்தியின் அண்மைக்காலக் கட்டுரை ஒன்று இக்குறைபாட்டை மேலும் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

"1990 களில் பெர்லினிலுள்ள தமிழ்ப்பாடசாலை ஒன்றில் தமிழகத்திலிருந்து இறக்குமதி செய்து பிள்ளைகளின் கற்பித்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட அரிச்சுவடி அட்டையில் ஆ- அதிர்ஷ்டலஷ்மி, ஐ- ஐங்கரன், என்று இருந்தது. கண்ணால் காணமுடியாதவற்றைக் குழந்தைகள் எப்படித்தான் மனதில் காட்சிப்படுத்தும், இன்னும் கலைச்சொல்லாக்கம் என்கிற பெயரில் நடைமுறையில் இல்லாத புதிய புதிய சொற்களைப்போட்டு அன்றாடம் அவர்களை வருத்துகிறார்கள். எடுத்துக்காட்டாக குமுகாயம்(குழுமம்), ஈருருளி, குளிர்பதனி, பொத்தகம், வெதுப்பகம், ஏதண்டை (கப்போர்ட்), நூலேதண்டை, வரியழியம்(அழிப்பர்), தண்ணுமை, மென்முழவு(மிருதங்கம்), அப்பர்குச்சி (ஊதுவத்தி) என்பன அவைகளில் சில" (பொ. கருணாகரமூர்த்தி, உயிர்மை 100 வது இதழ், 2011, ப.197)

எனவே இவ்வாறான குறைபாடுகள் கருத்திற்கொள்ளப்பட்டு அவை நிவர்த்தி செய்வதற்கு ஏற்ற திட்டமிடலை புலம்பெயர்ந்தவர்களின் கல்வி சார்ந்த அமைப்புக்கள் முன்னெடுக்க வேண்டிய தேவையுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குறைபாடுகளைக் களைவதற்கான முயற்சிகள்**

மேலே குறிப்பிட்ட குறைபாடுகள் படிப்படியாக சீர்செய்யப்படுவதாக கட்டுரைகளின் ஊடாக அறியப்படுகிறது. கல்விக் கொள்கை, ஆசிரியர்களுக்கான போதிய பயிற்சி, தகுந்த ஆலோசனை வழிகாட்டலில் உருவாக்கப்படும் பாடநூல்கள் ஆகியன இவற்றுள் முக்கியமானவை.

மேலும் 90 களில் இருந்து ஈழத்திலிருந்து நூல்களைப் பெற்று கல்வி கற்பித்தவர்கள் 2000 ற்குப் பின்னர் பல்வேறு தமிழ்க்கல்வி நிறுவனங்களை ஒன்றிணைத்து ITEC என்ற அமைப்பை உருவாக்கி பாடநூல்களைத் தயாரிக்கவும், தேர்வுகளை நடாத்தவும், ஆசிரியர்களுக்கு கற்பித்தல் பயிற்சியை மேற்கொள்ளவும் வகை செய்திருக்கிறார்கள். (ஆதாரம் tbvgermany.com/tbv/)

இதுபோன்ற முயற்சிகள் அவுஸ்திரேலியாவில் அதிகமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. (பார்க்க - கலாநிதி ஆ. கந்தையா 'அவுஸ்திரேலியாவில் தமிழ்மொழி கற்பித்தல்')

மேலும் சில நாடுகளில் கல்வி சார்ந்த ஆர்வலர்கள் ஒன்று சேர்ந்து பாடநூல்களை உருவாக்கியுள்ளார்கள். படைப்பாளிகள் மற்றும் தமிழ் அறிஞர்களும் இணைந்து பணியாற்றுகிறார்கள். இதற்கு உதாரணமாக சிங்கப்பூர் தமிழ் ஆசிரியர் சங்கம் வருடந்தோறும் மாநாடுகளை நடாத்தி வருவதும் இக்குறைபாடுகள் களைவதற்குரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

மாவை நித்தியானந்தன், கவிஞர் அம்பி, மறைந்த கலாநிதி ஆ. கந்தையா போன்ற சிலரின் ஆரம்ப முயற்சிகள் இவ்வகையில் கவனத்திற் கொள்ளத்தக்கன. பாடநூல்கள், கதைப்புத்தகங்கள், ஒலி ஒளி நாடாக்கள் ஆகியவற்றையும் வெளியிட்டு வருகிறார்கள். புகலிடத்தில் வாழ்பவர்கள் இதுபற்றி விரிவாகப் பகுத்து எழுதி ஆவணப்படுத்த வேண்டியிருக்கிறது.

ஒரு பிள்ளை 30 கிறடிற் எடுத்தால்தான் பல்கலைக்கழக நுழைவுப் பரீட்சைக்குத் தோற்றமுடியும் என்ற விதிமுறை கனடாவில் உள்ளது. இதில் 3-4 கிறடிற் தமிழ்க்கல்வியில் பெற்றிருந்தால் அதை ஏற்றுக்கொள்ளும் நடைமுறை இருக்கிறது. இந்நிலையில் ஒரு பிள்ளை தமிழ் கற்பதன் ஊடாக இவ்வாறான நன்மை கிடைக்க வழி இருக்கிறது. இந்த ஒரு காரணத்திற்காகவும் தரம் 1- முதல் 10 வரை தமிழ்க்கல்வியை ஒரு பிள்ளை பெறவேண்டும் என பெற்றோர் எதிர்பார்க்கிறார்கள்.

**முடிவுரை**

ஆங்கிலம் பேசும் நாடுகளைப் பொறுத்தவரையில் வீட்டுமொழியாகக்கூட தமிழ் இல்லாத நிலையில் தமிழ் கற்பதற்கான வாய்ப்பு மிக அரிதாகவே உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறாக ஐரோப்பிய நாடு ஒன்றில் கல்வி கற்கும் பிள்ளை முதல்மொழியாக அந்நாட்டு மொழியையும் இரண்டாம் மொழியாக சர்வதேச மொழியையும் கற்றுக்கொள்கிறது. மூன்றாம் மொழியாகத்தான் தமிழ் கற்கின்றது. இங்கு பிள்ளைக்கு தமிழ் சுமையாக அமைகின்றது.

இந்நிலையில் வீட்டுமொழியாக தமிழைப்பேச வைப்பதே இப்போது இருக்கக்கூடிய மாற்றுவழியாக இருக்கின்றது. இதனைத்தான் தமிழின் மீதும் தமிழ் அடையாளத்தின் மீதும் அக்கறையுள்ள பலரும் வலியுறுத்துகின்றனர்.

> "தமிழ்மொழியின் இடம் என்ன, அதனைப் போதிப்பதன் முறையியல் என்ன? திணிப்பற்ற கல்வியாகத் தமிழ்மொழியை எப்படி ஊட்டுவது? என்கிற வகையில் அவற்றைத் திட்டமிடுவது அவசியம். தமிழ்மொழி ஊட்டப்படுவதன் அவசியம் என்ன என்பது குறித்த வரைவிலக்கணத்தை முதலில் புலம்பெயர்ந்த நாடுகளில் தெட்டத் தெளிவாகக் கொடுக்கப்படல் வேண்டும். (என். சரவணன் நோர்வே, நிலம்பெயர்ந்த தமிழர், ப231-232)

மாணவர்களிடம் தமிழ்பேசும் திறனை வளர்ப்பதற்குரிய ஆலோசனைகளாக பின்வருவனவற்றை தனது ஆய்வு முடிவுகளாக இரா வேல்முருகன் முன்வைக்கிறார். (நிலம் பெயர்ந்த தமிழர் ப.243)

1. தமிழ்ப்பற்றை வளர்த்தல்
2. சொற்களஞ்சியத்தைப் பெருக்குதல்
3. உரையாடுதல்
4. கதை சொல்லுதல்
5. பெற்றோர் பிள்ளைகளோடு அதிக நேரம் செலவிடுதல்
6. திரைப்படக்காட்சிகளை விளக்குதல்

தமிழ்ச்சூழல் ஒன்றில் வளரக்கூடிய தமிழ்ப்பிள்ளை பள்ளிக்கு வரமுன்னரே வீட்டிலே தமிழ்மொழியைக் கற்கத் தொடங்குகிறது. எனவே ஒரு பிள்ளை தமிழில் பேசுவதற்கான சரியான அடித்தளத்தை பெற்றோரால் இடமுடியும் என்பதில் மாறுபட்ட கருத்து இருக்கமுடியாது. இதனால்த்தான்

"வீட்டுமொழியாகக் தமிழை வைத்திருந்தாலே தமிழ் வளரும்" என்று பொன் பூலோகசிங்கம் (எழுத்தாளர் மாநாடு - மலர்: 2002 சிட்னி) குறிப்பிடுகின்றார். இன்றைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் செய்யக்கூடிய ஆகக்குறைந்த பட்ச முயற்சி இதுவாகத்தான் இருக்கும். இதற்கு உலகப்பரப்பில் எத்தனையோ உதாரணங்களை எடுத்துக்காட்டலாம்.

இறுதியாக எஸ்.பொ வின் கூற்று ஒன்று, வரலாற்றோடு தமிழையும் தமிழ்அடையாளத்தையும் இணைத்துப் பேசுவது எதிர்காலம் பற்றிய எதிர்பார்ப்பை வலியுறுத்தி நிற்கின்றது.

> "சபிக்கப்பட்ட இனமாக, இரண்டாயிரம் ஆண்டுகளாக அகதிகளாக நாட்டுக்கு நாடு அல்லாடித் திரிந்த யூத இனத்திற்கு இன்று நாடு கிடைத்துவிட்டது. தமது எபிரேய மொழியை மீட்டெடுத்து அரசு மொழியாக்கியிருக்கிறார்கள். இரண்டாயிரம் ஆண்டுகளாக வழக்கற்றிரிந்த மொழியை ஆட்சி மொழியாக்கி, அந்த மொழி பயிலப்பட்ட மண்ணிலே இஸ்ரேல் நாட்டினை தோற்றுவித்திருக்கிறார்கள். இதற்க்குக் காரணம் என்ன? யூதேய மதத்தினையும், யூத இனத்தின் தனித்துவத்தையும் அவர்கள் அகதிகளாக அலைந்த அனைத்து நாடுகளிலும் சுமந்து திரிந்தார்கள்.
>
> புதிய வளங்களை அவர்கள் பெற்றிருந்தபோதிலும் புகுந்த நாடுகளிலே தங்களது தனித்துவ அடையாளங்களைக் கரைத்துக் கொள்ளாது அதனைத் தங்கள் உயிருடனும் உணர்வுடனும் சந்ததி சந்ததியாகப் பேணினார்கள். இப்பொழுது இஸ்ரேலிலும் பார்க்க அதிக யூதர்கள் ஐக்கிய அமெரிக்காவில் வாழ்கிறார்கள். அவர்களுடைய ஓர்மமும், பணமும், சாதுர்யமும் இஸ்ரேல் மலருவதற்கு பெரும் பங்கு வகித்தது." (எஸ்.பொ வின் ஏற்புரை http://akkinikkunchu.com)

எனவே இன்று புலம்பெயர்ந்து வாழ்கின்ற முதலாம் தலைமுறையினர் தமிழ் பற்றியும் தமிழ் அடையாளம் பற்றியும் மேற்கொண்டு வருகின்ற செயற்பாடுகள் அறிவுபூர்மாக மேலும் முன்னெடுத்துச் செல்லப்படல் வேண்டும்.

தமிழ்ப்பண்பாடு என்பது புதிய தலைமுறையினரிடத்தில் மொழிவழியல்லாத அடையாளமாகப் பேணப்படும் நிலை தற்போது உணரப்படுகிறது. இது மிக ஆபத்தானதாக இருக்கும். தமிழ்ப்பெயருடன் வாழும் பிள்ளைக்கு தமிழ் தெரியாத நிலைபோலவும் நடனம் மற்றும் ஆற்றுகைக் கலைகளுக்குரிய பாடத்தை பிரெஞ்சிலோ அல்லது ஆங்கிலத்திலோ மனனம் செய்துவிட்டு அளிக்கை செய்வது போலவும் இருக்கும். இந்நிலைதான் இன்று மொரீசியசிலும் ரியூனியன் ஏற்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. இந்த ஆபத்துக்களைக் களைவதற்கு தமிழ் மொழிசார்ந்து முதலில் புலம்பெயர்ந்து வாழ்கின்ற ஆளுமைகள் சிந்திக்கவேண்டும். அவர்களிடம் இருந்துதான் எதனைப் பிள்ளைக்குப் போதிக்கலாம். அதற்கு எவ்வாறான ஒழுங்குமுறைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அகராதிகள் உருவாக்குதல். சொற்களஞ்சியத்தை உருவாக்குதல், பொருத்தமான கற்பித்தல் முறைகள், பாடத்திட்டம், பாடநூல், ஆசிரியர் பயிற்சிகள்) செய்யலாம் ஆகிய திட்டங்கள் வரவேண்டும். இம்முயற்சியில் பலர் ஈடுபட்டு வருவதும் அறியப்படுகிறது.

எனவே தமிழ் அடையாளத்தை தமிழ் மொழிவழியூடாக புதிய தலைமுறைகளுக்குக் கடத்துவதே இன்று எமக்குள்ள ஒரு வழியாகும். அதனூடாகத்தான் தமிழ்மொழியையும் தமிழ்ப்பண்பாட்டையும் தமிழ் இனத்தையும் எதிர்காலத்தில் வாழவைக்கமுடியும்.

(கொழும்பு தமிழ்ச்சங்கம் நடாத்திய சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் வாசிக்கப்பட்ட கட்டுரை – யூன் 2012)

**ஆதாரமாக எழுத்தாளப்பட்ட நூல்கள் மற்றும் கட்டுரைகள்**


1. சிவத்தம்பி. கா பேராசிரியர் :2007, தமிழ் கற்பித்தல், குமரன் புத்தக இல்லம், சென்னை.
2. நிலம் பெயர்ந்த தமிழர் – வேரும் விழுதும் : 2007, (பதிப்பாசிரியர்கள் - ப.கு சண்முகன், க.ப. அறவாணன், இரா. அறவேந்தன்), உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கம், மலேசியா.
3. கந்தையா. ஆ. கலாநிதி : 1999, ஆஸ்திரேலியாவில் தமிழ்மொழி கற்பித்தல், நான்காவது உலகத் தமிழாசிரியர் மாநாடு, சென்னை.
4. எழுத்தாளர் மாநாடு மலர்: 2002 சிட்னி.
5. கருணாகரமூர்த்தி. பொ: 2011, உயிர்மை 100 வது இதழ், ப.196-198.
6. எஸ்.பொ: 2006, பனிக்குள் நெருப்பு, மித்ர வெளியீடு, சென்னை.
7. இரயாகரன். பி: 2004, 'புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ்க்கல்வி' தமிழ் அரங்கம்.கொம்.
8. சிவதாஸ் சிவலிங்கம் : 'புகலிடத்து வாழ்நிலையில் தமிழ்மொழி' http://www.nortamil.no
9. http://akkinikkunchu.com
10. *www ta.wikipedia.com*
11. புலம்பெயர்ந்தோரின் கல்விசார்ந்த அமைப்புக்களின் இணையத்தளங்கள்


■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீருடன்....

மனமே என் சிதறிய கண்ணீர்த் துளிகளை
தேடி நிற்கின்றேன் - என்
தொலைந்துவிட்ட உறவுகளுக்காய்
சிதறிய கண்ணீரும் சிந்திய உதிரமும்
கூறும் என் உறவின் அர்த்தங்களை!

இயற்கை சீற்றமோ? இல்லை இல்லை....
இறைவனின் செயலோ? இந்த
உலகத்தின் ஜனனங்கள்! என்
உறவுகளின் தொடர்களோ?

நிதிகளுடன் நதிகளாய் ஓடிவிட்டதோ?
என் இன்பங்கள்
துயரங்கள் தான் என் வாழ்வின்
முகவரிகள் ஆனதோ
சீச்சி என் வாழ்வு..... விடியா இரவுகள் தான்

மீட்டுகின்ற தந்திகள் அறுந்து விட்ட
என் வாழ்வு இனிவேண்டாம்....
உறவுகள் இல்லாத எனக்கு - இந்த
உலகமும் வேண்டாம் - என் வாழ்வு
மீளாத கண்ணீருடன்

**செ. சர்மிளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கைக்குப் பயன்தரக்கூடிய ஆன்மீக குறிப்புகள்

க. பாலசுப்பிரமணியம்
ஒய்வுபெற்ற ஆசிரியர்
*MA, BA Dip in Edu*

### கடவுள்

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்பார் ஔவையார். ஆறு அறிவு பெற்றவர்கள் நாங்கள். இது பாக்கியம். எனவே இப்பிறவியை நன்கு பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

நாங்கள் இந்துசமயத்தவர்கள். ஆறு பிரிவுகள் கொண்ட அம்மதத்தில் நாங்கள் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவசமயத்தவர்கள்.

நாங்கள் இறைவன் உள்ளான் என்று விசுவசிக்கிறோம். "அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்த", அப்பரம்பொருளை பல்வேறு உருவங்களிலும் பல்வேறு நாமங்களிலும் வழிபடுகின்றோம். "ஒரு நாமம் ஓர் உருவம் இல்லார்க்கு ஆயிரம் திருநாமம் பாடுவோம்". "எம்மததும் சம்மதம்" என்று ஓர் இந்து கொள்வான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா மதங்களும் பரம்பொருளின் வரப்பிரசாதம் என கருதுவோம். குளத்தை பல படிக்கட்டுகளாலும் அடைவது போல இறைவனை எம் மார்க்கத்தினாலும் அடையலாம் என்பர் இராமகிருஷ்ணர்.

பரம்பொருள் "விறகில் தீயினன் பாலில் படு நெய் போல மறைய நின்றுளான்"

பிறவியின் நோக்கம் : பிறவியின் நோக்கம் இறைவனை அடைதல். இதில் இறைவனேயாகலாம் என்பர் ஒரு சாரார். இறைவனே ஆக இயலாது, கடவுள் தன்மையை அடையலாம் என்பர் ஒரு சாரார்.

மீண்டும் பிறவாமை : பிறவாமை வேண்டும் என்று ஞானிகள் அவாவுவர். அவர்களுள் ஜீவன் முத்தர்களாக அவதரிப்பவர் பிறவி எடார். அவர்களே மகான்கள். நடமாடிய கடவுளர் ஷீரடி சாயிபாபா, ஆதிசங்கரர், பகவான் இராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் இத்தகையவர்களுள் சிலர்.

பிறவியும் நற்சிந்தனையும் : சாதாரண மக்கள் நாங்கள் அடுத்த ஜென்மம் நல்லதாக அமைய எண்ணுவோம். நாம் பற்று வைத்து கருமம் செய்பவர்கள். எனவே பிறவி வரும். அந்தப் பிறவியில் இறைவனை "மறவாமை வேண்டும்" என்று நாம் வேண்டலாம். பேராசை அற்ற வாழ்வைக் கேட்கலாம். எல்லோரும் இன்புற்றிருக்க நினைக்க வேண்டலாம். "தன்னைக் கட்டுதல், பிறர் துயர் தீர்த்தல், பிறர் நலம் வேண்டுதல், கடமையாக கொள்ள, இறைவனை வேண்டலாம். ஊருக்கு உழைக்கும் யோகத்தை கேட்கலாம்.

கடவுள் நம்பிக்கை : ஆன்மீக பாதையில் கடவுள் நம்பிக்கைக்கு முக்கியம் உண்டு. "கண்டு நம்புகிறவர்களை விட காணாமல் நம்புகிறவர்கள் பாக்கியவான்கள்" என்பார் யேசுபிரான்.

ஆத்தும விசாரணை : அடுத்தகட்டம் எம்மை நாம் ஆராய்தல். "ஆத்ம விசாரணை" *"man know thyself"* என்பர். யோகசுவாமி இதை, "தன்னைத் தன்னால் அறிந்து தானே தானேயாய் இருத்தல்" என்பார். நாங்கள் இந்த உடல் அல்ல. இது எம் போர்வை. ஒரு நாள் இந்த உடலை விட்டு விடுவோம். "விட்டுவிடப் போகுது உயிர் என்பர் திருமூலர்" இனிச்சாம் பிணங்கள் நாம். "யாக்கை என்னும் இடிகரையை மெய்" என்று நம்புபவர்கள். மெய்யும் பொய்யாய்ப் போவது நிச்சயம். இவர் போய் அவர் ஆகிவிடுவார்.

ஆயினும் இந்த உடல் கடவுள் வாழும் கோயில் ஆக்கலாம். பூசலார் நாயனார் அப்படிச் செய்தார். உடம்பை வெறுக்க வேண்டும் என்று இல்லை. "ஒன்பது வாயில் கொண்ட ஓட்டைக் குடிசை" ஆயினும் திருமூலர் இதை போற்றச் சொல்லுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திறம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" என்பார்.

## நற்பண்புகள்
## ஆணவத்தை நீக்க முயற்சித்தல்

உடம்போடு வாழும் நாம் "வையத்துள் வாழ்வாங்கு வாழ்வது" எப்படி? தெய்வ நம்பிக்கை அத்திவாரம். பின் இன்றியமையாதது ஆணவத்தை நீக்குவது. "செம்பில் களிம்பு போல" பிறவியிலிருந்தே வந்தாலும் அந்த கிழங்கை அடியோடு அகற்ற பார்க்கலாம். எங்கள் சிவன், அம்மன், பிள்ளையார், முருகன் பாதங்களில் ஆணவத்தின் சின்னமானவர்கள் மடங்கி இருக்கிறார்கள். முயலகன், மகிடாசுரன், கயமுகாசுரன், சூரன் (சேவலும் மயிலுமாக) உதாரணம் : நாலடியாரின் ஒரு பாட்டு. ஒரு பாலம். ஒடுங்கியது அது. கோவில் யானை ஒன்று பக்கமாக வருகிறது. எதிரே மலம் தின்னும் பன்றி. பக்கமாக யானை ஒதுங்கிப் போகிறது. பன்றி அதையிட்டு பெருமிதம் கொள்கிறது. ஆணவத்தின் அடையாளம். தவளை காலால் யானையை எட்டி உதைக்கிறது. காரணம் ஓர் அணாக் காசு அதன் காலின் கீழ் கிடந்தது. இஃது இராமகிருஷ்ணர் கூறியது காசால் வந்த திமிர். ஆணவத்துக்கு நேர் எதிரானது.

### தாழ்ச்சி

ஒருவன் தன்னைத் தூசியாக எண்ணவேண்டும் என்பர் காந்திஜி.

"தன்னைத் தாழ்த்திக் கொள்பவன் உயர்த்தப்படுவான்" என்பார் யேசுபிரான். அர்த்தநாரி என்ற "திருப்புகழ் சுவாமி" அகந்தை நீங்கி, தாழ்ச்சி வேண்டி, சாப்பிட்டவர்களின் இலைகளில் புரளுவார். நிணம் ஒழுகும் குஷ்டரோகியாகி சேஷாத்திரி சுவாமிகள் அமர்ந்து வேடிக்கை பார்த்தார். "ஏனடா இதெல்லாம்" என்று கூறி திருப்புகழே அவருக்கு எல்லாம் என ஆசி கூறினார். நான் என்ற அகந்தை கொண்டவனுக்கு தாழ்ச்சி வராது. ஞானம் கேட்ட சீடனுக்கு முனிவர் சொன்னார். "நான் செத்தால் நீ நல்லாய் இருப்பாய்" என்று. யேசு இறுதிப் போசன இரவு சீடரின் பாதம் கழுவி துடைத்து விட்டார். அப்படி தாழ்ச்சியுடனும் அன்புடனும் வாழும்படி கூறினார். நாவுக்கரசர், சம்பந்தர் பல்லக்கை சுமந்ததை நினைவுகூரலாம்.

### மன்னிக்கின்ற குணம்

மன்னிக்கின்ற குணத்தையும் நாம் வளர்க்க வேண்டும். ஒரு வயோதிபப் பெண் நபிபெருமானார் நடந்து செல்லும் போது குப்பை கொட்டுவாள். சில நாட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படி நடக்கவில்லை. பெருமானார் மாடிக்குச் சென்று அவள் நோய்வாய்ப்பட்டிருப்பதை உணர்ந்து ஆறுதல் சொன்னார். இராம கிருஷ்ணருக்கு, சந்திர ஹலதாரி என்ற பிராமணன் பொறாமையினாலே காலால் உதைத்தவன். இராமகிருஷ்ணர் அது பற்றி யாருக்குமே வாய் திறக்கவில்லை.

## பேராசை கொள்ளாதிருத்தல்

பேராசை கொள்ளாது திருப்தி அடைய பழகவேண்டும்.

## திருப்தி அடைதல்

நாரைக்கு கால்கள் நீளம். வாத்துக்கு கட்டை. ஆனால் வாத்து நாரையைக் கண்டு பொறாமைப்படத் தேவையில்லை. தன்னாலும் தண்ணீரில் மிதக்க முடியும் என்று எண்ணினால் போதும் என்பர். இராமர் மேல் அன்பினால் 24000 தெலுங்கு கீர்த்தனைகள் பாடியவர் தியாகராஜ பிரம்மம். சொத்து பங்கிட்ட போது "இராம விக்கிரகம் மட்டும் போதும்" என்றாராம். "குப்பை மேட்டிலே துணி கிடைக்கும் தெரு திண்ணையிலே படுக்கலாம். பிச்சை எடுக்க ஓடு உண்டு. எமக்கு என்ன குறை" என்பார் பட்டினத்தார். ஷீரடி சாயிபாபா கிழிந்த கப்னியே அணிந்தார். அவர் உடலை உகுத்த பொழுது விட்டுச் சென்ற பணம் ஒன்பது வெள்ளிக்காசுதான். "வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டு இல்லை. யாண்டும் அஃதொப்பது இல்" என்பது குறள். நபிபெருமானார் மதினாவுக்கு தப்பிச் சென்றபொழுது குடத்தில் இருந்த தண்ணீரிலே தான் முகம் பார்த்துக் கொண்டார்கள். அப்படி ஏழையாக பெருமானார் இருந்தார்கள். இராமகிருஷ்ணர் நாணயங்கள் தேகத்தில் பட முடியாதவராய் இருந்தார். "தேவைக்கு அதிகமாக எதுவும் வைத்திருப்பின் அது ஒரு வகை திருட்டு" என்பர். காந்தி அடிகள் "பேராசை என்னும் பிணியிற் பிடிபட்டு ஓரா வினையேன் உழலத் தகுமோ" என்று அருணகிரிநாதர் புலம்புவார். "வள்ளுவரும், அவா இல்லார்க்கு இல்லாகும் துன்பம்" "அஃதுண்டேல் வா அது மேல் மேல் வரும்" என்பர்.

## வாய்மை கடைப்பிடித்தல்

ஆத்மீக வாழ்க்கையில் சத்தியம் தவறாமையும், பொய் கூறாமையும் போற்றப்படுகின்றன. காந்திஜி தன் சுயசரிதத்துக்கு "சத்திய சோதனை" என்று பெயிரிட்டார். அரிச்சந்திரன் எல்லையின்றி துரத்தப்பட்ட ஒருவன். சொன்ன வாக்கிலிருந்து அவர் தவறவில்லை. "மலங்கழிப்பேன்" என்று கூறினால் அந்தச் சொல்லைக் காப்பாற்ற, அந்த உந்துதல் இல்லாவிடினும் இராமகிருஷ்ணர் மலங்கழிக்க செல்வாராம். வாய்மை எனப்படுவது யாதெனில் "யாதொன்றும் தீமை இலாத செயல்" என்பது குறள் . தருமர் சத்தியத்தைக் கடைப்பிடித்த ஒருவர். மாணவர்கள் சிறுபிராயத்தில் இருந்தே உண்மை பேசப்பழக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய்தந்தையைப் போற்றுதல்

மகான்கள் தாய் தந்தையரைப் போற்றி எமக்கு வழிகாட்டி உள்ளார்கள். ஆதிசங்கரர் தாயின் சம்மதம் பெற்றுத்தான் சந்நியாசியானார். காவி வஸ்திரத்திதை நீக்கிவிட்டு தாய் மரணமான போது உரிய கிரியைகளை செய்தார். "தாயின் பாதங்களை முத்தமிடாதவன் சொர்க்கத்திற்கு போகமாட்டான்" என்று நபிகள் பெருமானார் கூறியுள்ளார். பட்டினத்தார் தாயின் உடலுக்கு தீ மூட்டியபோது பாடியவை புகழ்பெற்றவை. யேசு சிலுவையில் தொங்கியபடி அந்த வேதனையிலும் யோன் என்ற சீடரை சுட்டிக்காட்டி இதோ உனது தாய். இதோ உனது மைந்தன் என்று ஒப்படைத்தவர். தகப்பனார் கட்டளையிட தாயையும் வெட்ட முன்வந்தவர் பரசுராமர்.

## குரு இறைவன் திருவருள் மேல் நம்பிக்கை

குரு அருளிலும் இறைவன் திருவருளிலும் நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும். பாம்பன் சுவாமிக்கு 1923ல் கால் முறிந்தது. முருகன் அருளால் 15 நாட்களில் அந்த எலும்பு பொருந்தியது. குமரகுருபர், ஐந்து வயது வரை ஊமை. திருவருளால் தெலுங்கில் கூட பேச ஆற்றல் உள்ளவரானார். வயலில் மாடு மேய்த்தவரை "திவான்" என்ற நிலைக்கு உயர்த்த இராகவேந்திர சுவாமி திருஉள்ளம் வேலை செய்தது. இராமகிருஷ்ணர் மதுர்பாபுவின் மனைவியின் வயிற்றுவலியைத் தான் தாங்கி ஆறு மாதங்கள் உழன்றார். ஷீர்டி சாயிபாபா ஒரு பிள்ளையின் "பிளேக்" கட்டிகளை தன் உடம்பில் ஏற்றுக்கொண்டார். நாவுக்கரசர் பாம்பு தீண்டிய பாலகனை மீட்டார். சுந்தரர் எலும்பைப் பெண் ஆக்கினார்.

## பிறப்பெடுத்தவர்க்கு காட்டப்படும் வழிகள்

நான்கு வழிகள் கூறப்படுகின்றன. சரியை, கிரியை, யோகம், ஞானம் அவை. தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்பன வரிசைப்படுத்தி நாவுக்கரசர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் இவர்களை இம் மார்க்கம் கடைப்பிடித்தவர்களுக்கு கூறுவர்.

## பக்தி மார்க்கம்

தாசமார்க்கம், ஆண்டான் அடிமை பாவனை. சாதாரண எங்களுக்கு சுலபமானது. ஆன்ம ஈடேற்றத்துக்கு நாமஸ்மரணை, இறை நாமத்தை இடைவிடாது உச்சரித்தல் சுலபமானதாகும். பிரகலாதன், ஆஞ்சநேயர், அன்னை மீரா, சுவாமி இராமதாசர், நாவுக்கரசர் இப்படி பலர் நாம் உச்சாடனம் செய்து உயர்ந்தவர்கள் தான். "நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே" என்று தேவாரத்தில் வரும். இதில் பிரார்த்தனையும் அடங்கும்.

"நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை" என்பார் அபிராமிப்பட்டர். யேசு பிரார்த்தனையே வடிவெடுத்தவர். 'கெற்சமேன்' தோட்டத்தில் அவர் இரவு பிராத்திக்கும்போது மயிர் கால்களில் இரத்தம் வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தியில் எம்மை மிகவும் தாழ்த்தும் சுபாவம் வரும் "நாயேனையும் இங்கு ஒரு பொருளாக நயந்து வந்து நீயே நினைவின்றி ஆண்டு கொண்டாய்" என்பர் அபிராமிப்பட்டர். "நாய்க்கு தவிசு இட்டது போல" என்னை மதித்தாய் என மணிவாசகர் கூறுவர். "வியவற்ற எஞ்ஞான்றும் தன்னை" எனக் குறள் சொல்லும்.

**ஆலயத்தொண்டு**

ஆலயத் தொண்டும் பக்திக்குள் அடங்கும். கீதையில், பூவோ, இலையோ பக்தியோடு அர்ப்பணித்தால் போதும் என்பான் கண்ணன்.

**மலர்தூவி வழிபடுதல்**

"நகமெல்லாம் தேயக் கையால் நாண்மலர் தொழுதுதூவி, முகம் எல்லாம் கண்ணீர் மல்க முன்பணிந்து ஏத்தும் தொண்டர். அகம் அலாற் கோயில் இல்லை" என்பர் ஒரு நாயனார்.

**உபவாசம்**

நம் உடலை மறந்து இறைவனில் இலயிக்க உதவும். "விரதம் எலாம் மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய் மறைக்காடு உறையும் மணாளன்தானே" என்று தேவாரத்தில் வருகிறது. இசுவாமியர் நாற்பது நாள்கள் நோன்பு இருப்பர். யேசு நாற்பது நாட்கள் வனாந்தரத்தில் நோன்பு நோற்றார். பசாசின் சோதனைக்கும் உள்ளானார். ஷீரடிசாயிபாபா உடலை வருத்துவதை பெரிதாக ஆதரித்து கூறவில்லை.

**இடையறா அன்பு**

இடையறா அன்பு செலுத்திக் கொண்டு இருப்பதே பக்தி மார்க்கத்தின் ஆணிவேர். அசிசி பிரான்சிஸ், உடலை, சகோதர கழுதை என்பார். இடைவிடாது யேசுவை எண்ணி அன்பு செலுத்தியதால், சிலுவை அடையாளங்கள் ஐந்தை உடம்பில் பெற்றார். குருநானக் இறை அன்பு மிகுந்தவர். களஞ்சியத்துக்கு அவர் பொறுப்பாக இருந்தபொழுது பதின்மூன்று என்ற தொகைக்கு "தேரா" என்று சொல் வரும். அது "உன்னுடையது" என்ற பொருள் தரவே குருநானக் தன்னை மறந்து கடவுள் இலயப்பட்டு விடுவார்.

**வெறும் சடங்குகளில் நம்பிக்கை இன்மை**

பக்தி, வெறும் சடங்குகளில் நம்பிக்கை வைப்பதில்லை. உண்மை பக்தி "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்" என்று கொள்கிறது. நாடகத்தால் இறைவன் அடியார் போல காட்டுவதில்லை. "மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து உன் விரையார் கழற்கு கைதான் தலைவைத்து, கண்ணீர் ததும்பி, வெதும்பி, உள்ளம், பொய்தான் தவிர்ந்து, உனை போற்றி சய சய போற்றி எனும் கைதான் நெகிழவிடேன் உடையாய் எனைக் கண்டு கொள்ளே என்பதுவே உண்மை பக்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பூரண சரணாகதி**

இது பக்தியின் இன்னொரு அடையாளம். “நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே” என்பர் மணிவாசகர். அபிராமி பட்டர் “நன்றே வரினும் தீதே விளைகினும் நான் அறிவது ஒன்றேயுமில்லை உனக்கே பரம்” என்று கூறுகிறார். யேசு *“Not my will But thy will”* என்றே இறுதியில் கெத்சமேன் தோட்டத்தில் தன்னை பரமபிதாவிடம் ஒப்புவிப்பார். பெருமானார் நபிக்கு ஏற்பட்ட யாவும் இறைவன் வழிகாட்டலே என்று அவர் கொண்டார். “உன் கடன் அடியேனையும் தாங்குதல் என் கடன் பணி செய்து கிடப்பதே” என்பதே சரணாகதி ஆகும்.

**குரங்கும் பூனையும்**

பூனை தன் குட்டிகளை காவுவது போல இறைவன் எம்மைக் கொண்டு செல்வார். குரங்குக் குட்டி தாயைப் பற்றுவது போல இறைவனைப் பற்றி இருப்பதே எம்கடன். ஆனை குஞ்சுகளை எட்ட இருந்து போஷிப்பது போல, கடவுள் எம்மைப் பார்த்துக் கொள்வார். இதுவே பக்தியின் சாரம்.

நீறு ஆர்த்த மேனி உரோமம் சிலிர்த்து - உளம் நெக்கு
சேறாய்க் கசிந்து, கசிந்தே உருகி, நின் சீரடிக்கே
மாறாத் தியானமுற்று ஆனந்த மேற்கொண்டு மார்பிற் கண்ணீர்
ஆறாய்ப் பெருக்க கிடப்பதென்றோ கயிலாயத்தனே

பட்டினத்தார்

என்பு எலாம் நெக்கு உடைய, உரோமம் சிலிர்ப்ப, உடல்
இளக, மனது அழலின் மெழுகாய்
இடையறாது உருக, வருமழை போல் இரங்கியே
இரு விழிகள் நீர் இறைப்ப
அன்பினால் மூர்ச்சித்த அன்பருக்கு அங்ஙனே
அமிர்த சஞ்சீவி போல வந்து
ஆனந்த மழை பொழிவை, உன் அன்பு இலாத எனை
யார்க்காக அடிமை கொண்டாய்?
புன் புலால் மயிர் தோல் நரம்பு என்பு மொய்த்திடு
புலைக் குடிலில் அருவருப்புப்
பொய் அல்லவே இதனை மெய் என்று நம்பி என்
புந்தி செலுமோ பாழிலே
துன்பமாய் அலையவோ உலக நடை ஐய ஒரு
சொப்பனத்திலும் வேண்டிலேன்
சுத்த நிர்க்குணமான பரதெய்வமே பரம்
ஜோதியே சுகவாரியே.

தாயுமானவர் (சுகவாரி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏணி வளர வாழ்த்துகின்றோம்

**MODERN STORES**

உங்கள் காகிதாதித் தேவைகள்
மற்றும் பத்திரிகைகள்,
சஞ்சிகைகள்,
கற்றல் உபகரணங்கள் என்பன
நியாயமான விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.



பிரதான வீதி, நெல்லியடி.

ஏணி வளர வாழ்த்துகின்றோம்

**NSB**

உங்களினதும் நாட்டினதும்
முன்னேற்றத்தின் முன்னோடி

**உங்களது முதல் மற்றும் வட்டிக்கு 100% அரச உத்தரவாதத்தை உறுதி செய்துள்ள தேசத்தின் மிகப் பெரிய ஒரே வங்கி தேசிய சேமிப்பு வங்கியே!**

ஏணி வளர வாழ்த்துகின்றோம்

**கலைவாணி**

**கண்ணாடிக்களஞ்சியம்**

அழகுசாதனப் பொருட்கள்,
அன்பளிப்புப் பொருட்கள்,
எவர்சில்வர் பாத்திரங்கள்,
பிளாஸ்ரிக் பொருட்கள்
என்பவற்றை மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.



பிரதானவீதி, நெல்லியடி.

ஏணி வளர வாழ்த்துகின்றோம்


**SPORT SHOP**




பிரதானவீதி, நெல்லியடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏணி வளர வாழ்த்துகின்றோம்




# சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை



அனைத்து வகையான கற்றல் உபகரணங்கள்,
காகிதாதிகள் என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய

ஒரே இடம்



## Chithamparappillai Book Depot

Nelliady, Karaveddy

T.p: 021 226 3223

ஏணி வளர வாழ்த்துகின்றோம்

# MATHU Baby Needs and Mobile Phone Shop

குழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்கு வேண்டிய அனைத்துப் பொருட்களுக்கும் நாடவேண்டிய இடம் Mathu baby needr and mobile phone shop தற்பொழுது Hero honda காட்சியறைக்கு அருகில், இங்கு சகலவிதமான போன் மற்றும், அதன் உதிரிப்பாகங்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

T.P. 0213205920 mob-0776332l0

பிரதான வீதி, நெல்லியடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏணி வளர வாழ்த்துகின்றோம்

# கேம்பிறிஜ்

மூலமும் முதலுமான கல்வி நிறுவனங்கள்
பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டு
கூர்ப்படையும் 4 தசாப்தகால வித்துப் பெறுபேறுகள்
புகழ்பூத்த குருகுல சங்கமம்

நவிண்டில், கரவெட்டி.

ஏணி வளர வாழ்த்துகின்றோம்

# மக்கள் வங்கி

வாடிக்கையாளர்களின்
மனங்கவர்ந்த வங்கி

பிரதான வீதி, நெல்லியடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏணி வளர வாழ்த்துகின்றோம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org